# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 69 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 21. வெள்ளிக்கிழமை 03.02.2017


## இந்திய அரசின் பட்ஜெட்டில் இலங்கைக்கு ரூபா 125 கோடி

கொழும்பு, பெப். 3
இந்தியாவின் 2017-18ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இலங்கைக்கு 125 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. >> 24

## முப்படைகளுக்கு காணி பறிக்கும் நடவடிக்கையின் முன்னேற்றம் என்ன?

### யாழ். செயலகத்தில் அடுத்த வாரம் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 3
முப்படையினரால் கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட காணி சுவீகரிப்பின் முன்னேற்றம் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலகத்தில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் தலைமையில் எதிர்வரும் 9ஆம் திகதி சிறப்புக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. >> 24

## பல்கலை. மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

கொழும்பு, பெப். 3
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் நீர்த் தாரை >> 04

## மருத்துவர்கள் இன்று அடையாள பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 3
மருத்துவ மாணவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானமற்ற >> 21

புதிய அரசமைப்பு வந்தால்

# போர்க்குற்ற விசாரணைக்கு அவசியம் வராது

### புதிய குண்டைத் தூக்கிப் போட்டார் சந்திரிகா

கொழும்பு, பெப்ரவரி 3
புதிய அரசமைப்பு உருவாக்குவதே முதன்மைப் பணி. அதன் பின்னர் காணாமற்போனோர் அலுவலகம் உருவாக்கப்படும். இவை இரண்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் போர்க்குற்ற விசாரணை குறித்த எந்தவொரு அவசியமும் எதிர்காலத்தில் ஏற்படாது போய்விடும்.
இவ்வாறு முன்னாள் அரச தலைவரும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா >> 24





## சுமந்திரன் எம்.பிக்கு அதிரடிப் படை பாதுகாப்பு

யாழ்ப்பாணம், பெப். 3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்ய முயன்ற சந்தேகத்தில் 5 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் சுமந்திரனுக்குச் சிறப்பு அதிரடிப் படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. >> 23

முச்சந்தி முரளி




## முதல்வரின் நிகழ்வுக்கும் நேற்றுக் கடும் பாதுகாப்பு

கிளிநொச்சி, பெப். 3
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கிளிநொச்சியில் நேற்று கலந்துகொண்ட நிகழ்வுக்கு, கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பிரத்தியேக பாதுகாப்புப் பொலிஸாரை விட, 25 இற்கு மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா >> 24



எல்லாவற்றையும்விட

## புதிய அரசமைப்புக்கே தற்போது முன்னுரிமை

### நல்லிணக்கச் செயலணியிடம் மைத்திரி திட்டவட்டம்

கொழும்பு, பெப். 3
நிலைமாறு கால நீதிச் செயன்முறைக்கு முன்னதாக புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாலோசனைச் செயலணியின் >> 23

# 3ஆவது நாள்

## பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் தொடர்கிறது

முல்லைத்தீவு, பெப். 3
முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்கள் நேற்று மூன்றாவது நாளாகவும், வீதிகளில் படுத்துறங்கி - முகாம் முன்பாகவே தங்கி தொடர் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். மக்களின் காணிக்குள் >> 24

## 5 இந்திய மீனவர் நெடுந்தீவில் கைது

யாழ்ப்பாணம், பெப். 3
நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடு பட்ட இந்திய மீனவர்கள் 5 பேர் நேற்று >> 24



## முதல்வர் விக்கிக்கு சு.க. எச்சரிக்கை

### அவர் அடம்பிடித்தால் இவர்கள் மறு பரிசீலனையாம்

கொழும்பு, பெப். 3
பன்னாட்டுத் தலையீட்டை வடக்கு முதல்வர் விக்கி தொடர்ந்து கோருவாராயின், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி வழங்கிவரும் ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டிவரும்.
இவ்வாறு அந்தக் கட்சி >> 04

## வடக்கு இ.போ.சவினரின் போராட்டம் நியாயமற்றது

### பணிக்குத் திரும்பாவிடின் நடவடிக்கை என அமைச்சர் டெனீஸ்வரன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 3
இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் முன்னறிவித்தலின்றித் திடீரெனப் பணிப் புறக் >> 24


வெறிச்சோடியது யாழ். மைய பேருந்து நிலையம்
மேலும் படங்கள், செய்திகள் 9ஆம் பக்கத்தில்

## வடக்கில் இந்த வருடத்தில் 5,000 குடும்பங்களுக்கு வீடு

### அலரி மாளிகையில் நேற்று நடந்த கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 3
வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் தலா 8 லட்சம் ரூபா பெறுமதியில் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணித்து வழங்கப்படவுள்ளன. அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இந்த முடிவு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தேவைகள் குறித்து ஆராயும் நோக்கில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.
மாவட்ட ரீதியில் தேவைகள் கேட்டறியப்பட்டபோது அனைத்து மாவட்டங்களினதும் பொதுத் தேவையாக வீடு பற்றிய >> 04


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்றீம் சேவர்

ரூ.1000 அல்லது அதற்கு மேல் சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும்
6.50% (வ.வி.வீ. 6.70%) முதல் 9.00% (வ.வி.வீ. 9.38%) வரை அதிகபட்ச வட்டி

24 மணிநேர அழைப்பு. மையம்: 011 2350000
இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்றீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk
*நிபந்தனைகள் உண்டு.
DFCC வங்கி ..பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.
DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

மிருசுவிலில் 8 பொதுமக்கள் படுகொலை;

# குற்றவாளியான படை அதிகாரியின் மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு

கொழும்பு, பெப். 3

மிருசுவிலில் இரண்டு சிறுவர்கள் உள்ளிட்ட 8 அப்பாவிப் பொது மக்களைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில், சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட, இராணுவ அதிகாரி சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவின் மேன்முறையீட்டு மனுவை உயர்நீதிமன்றம் விசாரிக்கவுள்ளது.

2000 ஆம் ஆண்டு, டிசெம்பர் 19 ஆம் திகதி மிருசுவில் பகுதியில் வீடுகளைப் பார்க்கச் சென்ற 8 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு, கழிப்பறைக் குழிக்குள் போட்டு மூடப்பட்டனர்.

இந்தப் படுகொலைகள் தொடர்பான வழக்கில், இராணுவ அதிகாரி சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டு, கடந்த 2015ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராகச் சுனில் ரத்நாயக்க சார்பில் மேன்முறையீட்டு மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்றம், எதிர்வரும் ஜூன் 5, 6, 7, 12, 13, மற்றும் 14ஆம் நாள்களில் மேல்முறையீட்டு மனு மீது விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது. ஐந்து நீதியரசர்களைக் கொண்ட அமர்வு இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. (த-5)

# வவுனியா இ.போ.ச. சாலை முகாமையாளர் இடமாற்றம்

## ஊழியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பை அடுத்து

வவுனியா, பெப்.3

வவுனியா இ.போ.ச. சாலை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தை அடுத்து வவுனியா சாலை முகாமையாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா இ.போ.ச. சாலை முகாமையாளரை இடமாற்றம் செய்யுமாறும், பழைய பேருந்து நிலையத்தில் இ.போ.ச. பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த அனுமதிக்குமாறும் கோரி அரச பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள் நேற்று முன்தினம் நண்பகல் முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனையடுத்து வவுனியா இ.போ.ச. சாலை முகாமையாளர் எச். எம். டி. ஜே. சொய்சா மதவாச்சி இ.போ.ச. சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா இ.போச. சாலை நிர்வாகம் வடக்கு மாகாண இ.போ.ச. போக்குவரத்துச் சபையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், விரைவில் புதிய இ.போ.ச. சாலை முகாமையாளர் நியமிக்கப்பட உள்ளதாகவும் வவுனியா இ.போச. ச. சாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

பழைய பேருந்து நிலையத்தில் சேவையைத் தொடர அனுமதிக்குமாறு தெரிவித்து நேற்றும் சாரதிகள், நடத்துநர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். (த-21)

நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினால்

# தலைமை அமைச்சர் வேட்பாளர் மைத்திரி

## சு.க. திடீர் மாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 3

அரச தலைவர் முறைமை ஒழிக்கப்பட்டால், தலைமை அமைச்சர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிடுவார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படக் கூடாது என்று தொடர்ச்சியாகக் கருத்து வெளியிட்டு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றைய தினம் இவ்வாறு கூறியது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அரச தலைவர் முறையை ஒழிப்பது தொடர்பில் சுதந்திரக் கட்சி தெளிவாக அறிவித்துள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் வாக்குறுதியில் பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் எந்தவொரு செயற்பாட்டையும் தான் செய்ய மாட்டேன் என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

நிறைவேற்று அரச தலைவர் முறைமையில் அடுத்த தேர்தல் நடைபெற்றால் கட்டாயம் மைத்திரிபால சிறிசேனவே வேட்பாளராகப் போட்டியிடுவார். ஒருவேளை அரச தலைவர் தேர்தல் நடைபெறாவிடின் தலைமை அமைச்சர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவே வரக்கூடும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போன்றோர் நடந்து கொள்ளும் விதங்களைக் கட்டுப்படுத்த நிறைவேற்று அதிகாரம் தொடர்வது அவசியமாகும் – என்றார். (வ-5)

# எத்தியோப்பியாவில் இலங்கைத் தூதரகம்

## விரைவில் திறக்கவுள்ளது அரசு

ஆபிரிக்க நாடுகளுடன் நெருக்க மான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக, ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைமையகம் அமைந்துள்ள எத்தியோப்பியாவில், தூதரகத்தை இலங்கை திறக்கவுள்ளது.

எத்தியோப்பியாவுக்கு அதிகார பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இந்தத் தூதரகத்தை திறந்து வைக்கவுள்ளார்.

எத்தியோப்பியா சென்றுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, அந்த நாட்டின் நாடாளுமன்றச் சபாநாயகர் அப்துல்லா ஜெமேடாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜெனிவா உள்ளிட்ட பன்னாட்டு அரங்குகளில், இலங்கைக்கு நெருக்கடி ஏற்பட்டபோது, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் ஆதரவைப் பெற முடியாமல் போனமை, மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இலங்கைக்குக் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தியது. இதனைக் கருத்தில் கொண்டு, ஆபிரிக்க நாடுகளுடன் மேலும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் இலங்கையின் தற்போதைய அரசு ஆர்வம் காட்டி வருகிறது. (த-5)

# வன்முறைக்கான காரணங்களுக்கு இன்னும் தீர்வில்லை

## சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 3

வன்முறை முரண்பாடு முடிவுக்கு வந்துவிட்ட தாயினும், வன்முறைகளுக்கான காரணங்களுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மக்கள் ஜனநாயகத்தின் உண்மையான பயனாளிகளாக இருப்பதற்கு உதவும் சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டின் சகல மக்கள் மத்தியிலும் இந்த ஆண்டு நல்லிணக்கத்தைக் கொண்டு வரும் என்ற பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

இது எமது நாட்டில் வாழும் அனைத்து மக்களதும் நன்மைக்கு மிக இன்றியமையாததாகும். வன்முறை முரண்பாடு ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாயினும், அந்த வன்முறைகளுக்கான காரணங்களுக்கு இன்னும் தீர்வு காணப்பட வேண்டியுள்ளது.

நியாயமானதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுமான ஒரு கருத்தொருமைப்பாட்டின் அடிப்டையில் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. எமது நாடடின் நலனைக் கருத்திற்கொண்டு இந்தக் கூட்டு முயற்சிக்கு நாம் அனைவரும் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் – என்றுள்ளது. (த-5)

# சமாதானமும் சுபீட்சமும் எமக்குக் கிட்டவேண்டும்

## சுதந்திர தின வாழ்த்தில் அரச தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.3

இலங்கையில் சமாதானமும் சுபீட்சமும் கிடைக்கப் பெற்ற மக்களாக வாழும் பாக்கியம் எமக்குக் கிட்ட வேண்டும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

69 ஆவது சுதந்திர தின விழாவில் அறியாமையை அறிவாலும், பொய்மையை வாய்மையாலும், பழி தீர்க்கும் எண்ணத்தைக் கருணையாலும், இம்சையை அகிம்சையாலும் வெற்றி கொள்ளக்கூடிய மனிதத்தை மதிக்கும் சுதந்திர பூமியாக எமது நாடு உருவாக வேண்டும்.

நாம் மிகவும் தீர்க்கமான சவால் மிக்கதொரு சந்தர்ப்பத்தில் இருந்து வருகின்றோம். அண்மைய வரலாற்றில் நாம் அடைந்த சுதந்திரத்தைப் பாதுகாத்துத் தேசிய சிந்



தனை ஊடாக அனைத்து இனங்களும் சமாதானத்துடன் வாழக் கூடிய நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பு எமது தோள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

நாங்கள் இருண்ட யுகத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளோம். அத்துடன் இருளில் மூழ்கிக் கொண்டிருந்த ஜனநாயகத்தையும் மனிதாபிமானத்தையும் மீண்டும் சுடர் விட வைப்பதிலும் வெற்றி பெற்றுள்ளோம். ஆயினும், சுதந்திரத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்க வேண்டுமாயின் வறுமையிலிருந்தும் நோய்களிலிருந்தும் விடுபட வேண்டும்.

இன,மத,சாதி, பேதம போன்ற வரையறைக்குள் சிறைப்பட்டு பண்பாட்டு வறுமைக்குட்பட்டுள்ள மக்களையும்,சமூகத்தையும் அவற்றிலிருந்து விடுவித்து மனித உரிமைகள் மற்றும் நீதிநெறிகளை மதிக்கும் தேசத்தை உருவாக்க வேண்டும் – என்று கூறியுள்ளார். (த-8)

# கட்டுப்பாட்டு விலையில் பொருள்களை விற்காத ஏழு வர்த்தகர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப். 3

கடந்த வாரம் நடைமுறைக்கு வந்த புதிய கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமான விலையில் பொருள்களை விற்பனை செய்த 7 வர்த்தகர்கள் மாட்டிக் கொண்டனர்.

பாவனையாளர் அதிகார சபையின் திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் சிக்கினர் என அதன் இணைப்பதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு ஆறு உணவுப் பொருள்களுக்கு அதிக பட்ச சில்லறை விலைகளை நிர்ணயித்துள்ளது. ஒரு கிலோ சீனியின் விலை 93 ரூபா, ஒரு கிலோ மைசூர் பருப்பின் விலை 159 ரூபா, ஒரு கிலோ பயறின் விலை 205 ரூபா, ஒரு கிலோ உருளைக்கிழங்கின் ஆகக் கூடிய விலை 115 ரூபா எனவும் நிர்ணயிக்கப்பட்டது.

டுபாயில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நெத்தலி 405 ரூபாவாகவும், தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நெத்தலி 490 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

இதில் சீனி, பருப்பு, பயறு என்பவற்றை எந்தக் காரணம் கொண்டும் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்யலாகாது. கடந்த 27ஆம் திகதியில் இருந்து இது நடைமுறைக்கு வந்தது. இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு வணிகர் கழகத்துக்குத் தெரியப்படுத்தியதுடன், சகல வர்த்தக நிலையங்களுக்கும் ஊடகங்கள் வாயிலாக அறிவித்தல் விடப்பட்டது.

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதி மற்றும் திருநெல்வேலி போன்ற பகுதிகளில் நேற்று முன்தினம் நடத்திய கண்காணிப்பு நடவடிக்கையின் போது 7 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பாவனையாளா அதிகார சபையால் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதுமான கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே அனைத்து வியாபார நிலையங்களும் குறித்த பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யவேண்டும். இல்லையேல் அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமான விலையில் பொருள்களை விற்பனை செய்தால், அந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக 021-3219000 அல்லது 0217755455 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் பொதுமக்கள் தொடர்பு கொண்டு முறையிடலாம் –என்றார். (த-10)

பிணைமுறி மோசடி;

## விசாரணையை ஆரம்பித்தது ஆணைக்குழு

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின. உயர்நீதிமன்ற நீதியரசர்களான கே.டி.சித்ரசிறி, பிரசன்ன சுஜீவ ஜயவர்தன மற்றும் ஓய்வு பெற்ற பிரதிக் கணக்காளர் நாயகம் கந்தசாமி வேலுப்பிள்ளை ஆகிய மூவரைக் கொண்ட இந்த ஆணைக்குழு பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்த விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி நிறைவடையும்.

பிணைமுறி செயற்பாடுகள் சட்டவிரோதமான முறையில் இடம்பெற்றிருந்தால் அதன் பின்புலத்தில் இருப்பவர்கள் யார் என்று கண்டறிந்து மூன்று மாதங்களுக்குள் இறுதி அறிக்கையை ஆணைக்குழு அரச தலைவரிடம் கையளிக்கவுள்ளது. (த-ஐ)

## சஷி வெல்கமவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப்.3

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவர் சஷி வெல்கமவின் விளக்கமறியல் அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. வெல்கமவுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே தொழும்பு மேலதிக நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைமை நிதி முகாமையாளரைக் கைதுசெய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நிதிகளை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பில் சஷி வெல்கம கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். (தி)

# தமிழ் மக்களும் இஸ்லாமியரும் ஒன்றித்து தீர்வை எட்டவேண்டும்

யோகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு,பெப்.3

வடக்கு - கிழக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழ்கின்ற தமிழர்களும், இஸ்லாமியர்களும் ஒற்றுமையாக இருந்து சிறந்த தீர்வைப் பெற்றுச் சிறப்பாக வாழ முயற்சிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.



மட்டக்களப்பில் நேற்று முன்தினம் அரச தலைவர் பங்குபற்றிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் பேசும் மக்களை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன் என்று ஜனாதிபதி, தான் செல்லுமிடமெல்லாம் சொல்லிவரும் விடயம் சிறப்பானது.

நீதி நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற வகையிலே முன்னைய ஆட்சியை மாற்றித் தற்போதைய நல்லாட்சியைக் கொண்டு வந்த மக்கள் என்ற ரீதியில் சிறுபான்மை இனங்களான தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் அரச தலைவர் விளித்துப் பேசுவது பெருமை தரும் விடயமாகும்.

நாம் அவருக்குக் காட்டிய ஆதரவு தான் அவர் இப்பொழுது சிறுபான்மையினரான நம்மீது கரிசனை காட்டுவதற்கும் வழி வகுத்திருக்கின்றது. தமிழ், முஸ்லிம் மக்களின் வேணவாக்களை நிறைவேற்றுவதற்குத் தான் உழைக்கப் போவதாகவும் அரச தலைவர் வெளிப்படையாகப் பேசி வந்துள்ளார்.

தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த தந்தை செல்வா, தமிழ் பேசும் சமூகத்துக்காகக் குரல் கொடுத்து அதன்படி செயற்பட்டார். ஆனால், பின்னாள்களில் இலங்கைவாழ் இஸ்லாமிய மக்களிடம் பல கட்சிகள் உருவாகின. ஆனாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று வரை தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் தான் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. தீர்வு விடயத்தில் எல்லாச் சமூகத்துடனும் பேசுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தயாராக இருக்கின்றார்.

எனவே தமிழர்களும், இஸ்லாமியர்களும் ஒற்றுமையாக இருந்து சிறந்த தீர்வைப்பெற்றுச் சிறப்பாக வாழ முயற்சிக்க வேண்டும் -என்றார். (ஐ-ய-46,47)

கப்டன் கிடைத்து விட்டதால்

## ஓய்விலிருந்த நெடுந்தாரகை மீண்டும் ஓடத்தொடங்கியது

வடக்கு மாகாண சபையின் கட்டுப்பாட்டில் உள்ள நெடுந்தாரகை படகுக்கு கப்டன் நியமிக்கப் பட்டதைத் தொடர்ந்து படகு தனது சேவையை நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் ஆரம்பித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவு மக்களின் பயணத்துக்காக நெல்சிப் திட்டம் மற்றும் ஆஸ்திரேலிய அரசின் நிதிப் பங்களிப்பு ஆகியவற்றில் புதிதாகக் கட்டப்பட்ட நெடுந்தாரகைப் படகானது கடந்த மாதம் 20 ஆம் திகதி தனது சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது. படகுக்கான கப்டன் தர அதிகாரி இன்மையால் படகுச் சேவை முதல் நாளுடனேயே நிறுத்தப்பட்டிருந்தது. படகுக்கான கப்டனைக் கண்டறியும் முயற்சியில் வடக்கு மாகாண தலைமைச் செயலர் அலுவலகம் ஈடுபட்டிருந்தது.

இதன் பயனாக புதிய கப்டன் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து நேற்று முன்தினம் தொடக்கம் படகு வழமை போன்று சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளது. உள்ளூராட்சி திணைக்களத்தின் மேற்பார்வையில், நெடுந்தீவுப் பிரதேச சபையால் படகுப் பயணம் நடத்தப்படும். ஒருவழி பயணக் கட்டணமாக 80 ரூபா அறவிடப்படும்என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-10)

திவுலப்பிட்டிய சம்பவம்

## அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு,பெப்.3

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அரச அதிகாரிகள் குறித்து, உள்நாட்டலுவல்கள் அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் பெருமளவிலான மண் அகழ்வு இடம்பெறுவதாகக் கிடைக்கப் பெற்ற தகவலின் படி அங்கு சென்றிருந்த பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற் றும் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் ஆயோருக்கு இடையில் முரண்பாடான நிலைமை தோன்றி யிருந் தது.

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறி கம்பகா மாவட்ட அரச அதிகாரிகள் சிலர் எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் இந்தச் சம்பவம் தொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

எந்தவொரு அரச அதிகாரியும் மக்களால் முன்வைக்கப்படும் குறைகள் சம்பந்தமாகச் செவிசாய்க்க வேண்டும்என்ற சுற்றறிக்கையைத் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் மீறியிருப்பதன் காரணமாகவே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கூறியுள்ளது.

தொலைபேசியினூடாக மக்கள் குறைகளை முன்வைத்தால், அதற்கும் அரச அதிகாரிகள் செவிசாய்க்க வேண்டும் என்பதுடன், அரச உயர் அதிகாரிகளுக்கு அரசால் தொலை பேசிக்கான கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும் அந்த அமைச்சு கூறியுள்ளது. (ஐ)

மைதானத்தில் அடித்துக் கொலை;

## சாட்சியின் வாக்குமூலம் கிடைக்காததால் வழக்கு விசாரணை மே வரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்ப்பாணம் சென். பற்றிக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற துடுப்பாட்டப்போட்டியின்போது, ஒருவர் கொல்லப்பட்ட வழக்கில், சாட்சி ஒருவர் வழங்கிய முதலாவது வாக்கு மூலத்தைப் பொலிஸார் மேல் நீதிமன்றுக்கு இன்னும் வழங்காததால் வழக் கின் சாட்சிய விசாரணைகள் எதிர்வரும் மே மாதத்துக்கு ஒத்திவைக்க வேண்டியநிலை ஏற்பட்டது. எதிரிதரப்பு சட்டத்தரணிகள் கோரும் ஆவணங்கள் இருப்பின் அனைத்தை யும் எதிர்வரும் ஏப்ரல் 7 ஆம் திகதிக்கு முன்னர் மேல் நீதிமன்றப் பதிவாளரி டம் ஒப்படைக்க வேண்டும் என்று வழக்குத் தொடருநர் தரப்புக்கு நீதிபதி உத் தரவிட்டார்.

இந்த வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இரண்டாவது நாள் விசாரணைக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணையின் பின்னரான குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. அதன்போது, சாட்சி ஒருவரால் பொலிஸாருக்கு முன்னர் வழங்கியதாகக் கூறப்படும் வாக்குமூலத்தின் பிரதிகளைத் தருமாறு எதிரி தரப்புச் சட்டத்தரணி ஒருவர் மன்றில் கோரியிருந்தார். அதனை உடனடியாக வழங்க முடியாத நிலையில், வழக்கை ஒத்திவைக்குமாறு அரச சட்டத்தரணி நா.நிசாந் கோரியதற்கு இணங்க மன்று நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைக்காக நேற்று எடுக்கப்பட்டபோது, குறித்த சாட்சி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கினார். அந்த வாக்குமூலம் இது வரை கிடைக்கவில்லை என்று அரச சட்டத்தரணி தெரிவித்தார். அந்தச் சாட்சியம் இல்லாததால் வழக்கைத் தொடர்ந்தும் கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள சட்ட நடைமுறைகள் காரணமாக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. குறித்த வாக்குமூலத்தை அடுத்த தவணைக்கு முன்னர் வழங்குமாறும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கின் தொடர் விசாரணை எதிர்வரும் மே மாதம் 30 ஆம், 31ஆம் திகதிகளிலும் எதிர்வரும் ஜுன் மாதம் 1,2,5,6,7 மற்றும் 9ஆம் திகதிகளிலும் இடம்பெறும் என்று மேல் நீதிமன்றம் அறிவித்தது. சாட்சிகள் அனைவரும் மே மாதம் 30ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு மேல் நீதிமன்றில் முன்னிலையாகவேண்டும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி நிசாந் தெரிவித்தார்.

*பின்னணி*

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் வருடாந்தம் துடுப்பாட்டப் போட்டி இடம்பெறுகிறது. 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி வட்டுக்கோட்டை மைதானத்தில் போட்டி இடம்பெற்றது. அதன்போது ரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாகியதால் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் அமலன் மைதானத்தில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டார். கொலை செய்த குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பல மாதங்களின் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். (வ-4,6)

## இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்ட காணியைப் பார்வையிட்டார் முதலமைச்சர்

கிளிநொச்சி ம.வி.யில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெ. 3

இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் ஒரு தொகுதிக் காணி தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச் சர் க.வி. விக்கினேஸ்வரன் நேற்று நேரில் சென்று ஆராய்ந்தார்.

வட்டக்கச்சி ஆரம்பவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட நூலகத்தின் திறப்புவிழா நேற்று இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நூலகத்தைத் திறந்து வைத்த முதலமைச்சரிடம், இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் ஒரு தொகுதிக் காணி தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்தே முதலமைச்சர் கிளிநொச்சி மகாவித்தியாலத்துக்கு நேரில் சென்று நிலைமைகள் தொடர்பாக ஆராயந்தார். இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட பாடசாலையின் காணியையும் பார்வையிட்டார்.

கடந்தத காலப் போரில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளின் போது கிளிநொச்சி மகாவித்தியாலய காணி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டது. காணியில் ஒருபகுதியில் முகாமிட்ட இராணுவத்தினர் அங்கு நிலை கொண்டனர். மீள்குடியமர்வுக்குப் பின்னர் கிளிநொச்சி மகாவித்தியாலயம் இயங்க ஆரம்பித்தபோதிலும் குறிப்பிட்ட காணி பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கபடவில்லை, எனவே காணியைப் பெற்றுத் தருமாறு பாடசாலைச் சமூகத்தினரால் கோரிக்கை கள் விடப்பட்டன. (க-6,34)

## இந்திய அரசின் நிதி உதவியில்
# மூவின மாணவர்களும் கற்பதற்கு பொலன்னறுவையில் பாடசாலை

யாழ்ப்பாணம், பெப்.3
மூவின மாணவர்களும் ஒரே பாடசாலையில் கல்வி கற்கும் செயற்திட்டத்தை கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தில் பல்லின பாடசாலை அமைக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத் துக்கு இந்திய அரசு 300 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கிறது.

திட்டத்துக்கான உடன்படிக்கையை கொழும்புக்கான இந்தியத் தூதுவர் ட்ரன்ஜித் சிங் சந்து மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.
பொலன்னறுவையில் அமைக்கப்படும் பாடசாலையில் உயர் தரத்திலான வகுப்பறைகள், ஆய்வு கூடங்கள், நூலகம் ஆகியன அமைக்கப்படவுள்ளன. தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் பல்லின கலாசாரம், வாழ்வியலை கற்றுக் கொள்ள முடியும்.



இந்தத் திட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இலங்கையின் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் முன்னெடுக்கப்படுகிறது என்று இந்தியத் தூதரகம் தெரிவித்தது. (வ-எ)

## சங்கு முழுக்கு

யாழ்ப்பாணம், ஜன.3
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய குடமுழுக்கு பெரும் சாந்தி தின சங்கு முழுக்கு எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை மு.ப.11 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## ஆன்மிக அருளுரை இன்று

யாழ்ப்பாணம், பெப். 3
நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை ஆன்மிக அருளுரை நடத்தப்பட்டு வருகிறது என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வு யாழ்ப்பாண சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-10)

## யோகாசன பயிற்சி அறிமுகம்

யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபையின் கலை கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் ஆரோக்கிய வாழ்வும் உளசமூக மேம்பாடும் என்ற தொனிப் பொருளில் யோகாசன பயிற்சி அறிமுக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## முகாமைத்துவமாணி தெரிவுப் பரீட்சை பெப். 12 நடக்கிறது

யாழ்ப்பாணம், பெப். 3
பல்கலைக்கழகத்தில் புதிதாக விண்ணப்பித்த வெளிவாரி மாணவர்களுக்கான வியாபார முகாமைத்துவமாணி தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று பணிப்பாளர் பா.நிமலதாசன் அறிவித்தார்.
காலை 9.30 மணி தொடக்கம் மு.ப. 11.30 மணி வரை பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.
இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதோர் எதிர்வரும் 8ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணி முதல் மாலை 2.30 மணி வரை மேற்படி நிலையத் தில் தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## மு.சோ.கட்சியின் மத்திய அமைப்பாளராக குமார் குணரத்னம்

இலங்கையின் குடிவரவுச் சட்டங்களை மீறிய குற்றத்துக்காகச் சிறை யில் அடைக்கப்பட்டிருந்த குமார் குணரத்னம், நேற்று முன்தினம் முன்னிலை சோசலிஸக் கட்சியின் மத்திய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சுகததாச மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முன்னிலை சோசலிசக் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் அவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டது.
அத்துடன் இந்த மாநாட்டில் முன்னிலை சோசலிசக் கட்சியின் 15 பேர் கொண்ட மத்திய செயற்குழு நியமிக்கப்பட்டது. (ஐ)

# அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு இலங்கையருக்கு தடை கிடையாது

## அந்த நாட்டுத் தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 3
அமெரிக்காவுக்குள் நுழைய இலங்கையர்களுக்குத் தடை விதிக்கப்படவில்லை என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்தது.
இலங்கையர்கள் உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்த 71 பேர் நியூயோர்க் ஜோன் எவ் கெனடி வானூர்தி நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டதாக பன்னாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்த நிலையிலேயே அமெரிக்கா இந்த அறிவிப்பை வெளியிட்டது.
அதிபர் ட்ரம்பின் உத்தரவினால் அமெரிக்காவினுள் நுழைவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ள 7 நாடுகளில் இலங்கை உள்ளடங்கவில்லை என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.
அமெரிக்க வானூர்தி நிலையங்களில் இலங்கையர்கள் தடுக்கப்பட்டதாக எந்த தகவலும் கிடைக்கவில்லை என்று நியூயோர்க்கில் உள்ள இலங்கை தூதரகம் கொழும்பு அயலுறவு அமைச்சுக்கு அறிவித்துள்ளது.
இதுகுறித்து கருத்து வெளியிட்ட அயலுறவு அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே, நியூயோர்க்கில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் இதுகுறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அவர்கள் தொடர்பில் இருக்கின்றனர்.
எந்தவொரு இலங்கையராவது, அமெரிக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, உதவிகள் தேவைப்பட்டால், நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தின், 001 917 597 7009 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (வ-5)

### தாஜுதீன் கொலை
## டி.ஐ.ஜியின் தொலைபேசி அழைப்புகள் விசாரணையில்

கொழும்பு, ஜன. 3
வசீம் தாஜுதீன் கொல்லப்பட்ட தினத்தை அண்மித்து பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்கவின் தொலைபேசியில் இருந்து முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜ >> 24

## பிரான்ஸ் அரச தலைவர் இலங்கைக்குப் பாராட்டு

கொழும்பு, பெப். 3
இலங்கையில் சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக, பிரான்ஸ் அரச தலைவர் பிராங்கோயிஸ் ஹொலண்ட் தெரிவித்தார். பிரான்ஸ் அரச அதிபர் மாளிகையில் வெளிநாட்டு இராஜதந்தி >> 24

## யாழ். நகர் பைரவருக்கு திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.3
யாழ். நகர் மைய பேருந்து நிலைய ஸ்ரீ ஞான பைரவ சுவாமி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், அந்தக் கட்சியின் மையக் குழு உறுப்பினரும் அமைச்சருமான தயா சிறி ஜயசேகர கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு அரசு பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு போர்க் குற்ற விசாரணையை நடத்த சட்டத்தில் இடமுண்டா என்பது தொடர்பில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை ஆராயுமாறு கோரியுள்ளமை தொடர்பில் பத்திரிகையாளரினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,
வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இதற்கு முன்னரும் இவ்வாறான கருத்துகளைக் கூறியுள்ளார். அவரின் பின்னால் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். வெளிநாட்டு நீதிபதிகளை அவர் எவ்வாறு கொண்டுவர முடியும். இவ்வாறான கருத்துகளைத் தொடர்ந்து கூறிவரும் பட்சத்தில் இலங்கையில் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசமைப்புக்கு ஆதரவு தெரிவிப்பதா இல்லையா என்று நாங்கள் தீர்மானிக்க வேண்டிய சூழல் ஏற்படும். தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் வேலையையே அவர் செய்து வருகிறார். பைத்தியக்காரர் போன்று கருத்துகளை கூறினால் நாங்களும் சுயாதீனமாக தீர்மானிக்க வேண்டிய சூழல் ஏற்படும். சாமானிய தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளும் முனைப்பில் தான் உள்ளனர்.
அவரின் கருத்துகள் தெற்கில் உள்ள சிங்கள அடிப்படைவாதிகளுக்கும், வடக்கில் உள்ள தமிழ் அடிப்படைவாதிகளுக்கும் தீனி போடுவதாக அமைகிறது. எமது நாட்டில் சிறந்த நீதிபதிகளும், விசாரணையாளர்களும், வழக்குத் தொடுநர்களும் உள்ளனர். எமது பிரச்சினையை நாம்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் நம்பிக்கையில்லை என்று நாட்டில் குழப்ப நிலையை தோற்றுவித்து பன்னாட்டுச் சமூகத்துக்கு இலங்கையைக் கொண்டுச்சென்று பிளவுபடுத்தும் முயற்சியிலேயே விக்னேஸ்வரன் போன்றோர் ஈடுபட்டு வருகின்றனர்.
அடிப்படைவாதத்தை தூண்ட முயற்சிக்கும் விக்னேஸ் வரனை முதலில் அடித்து விரட்ட வேண் டும் -என்றார். (வ-5)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடயமே முதன்மைப் பிரச்சினையாக செயலர்களால் முன்வைக்கப்பட்டன. வீடு நிர்மாணிப்பது தொடர்பில் கலந்துரையாடல் நீண்டது.
கலந்துரையாடலின் இறுதியில் வடக்கில் முதற்கட்டமாக 5 ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்பது என்று முடிவு எட்டப்பட்டது. இந்தத் திட்டத்தை தேசிய நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தலைமையில் முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதனைச் செய்வதில் ஆட்சேபனையில்லை என்று சிவஞானசோதி கூறினார். எனினும், இதுவரை காலமும் வீடு நிர்மாணிப்புப் பணி மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டது. அதனால் அந்தப் பணியைத் தொடர்ந்தும் மீள்குடியேற்ற அமைச்சு முன்னெடுக்கும் என்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் கருத்துத் தெரிவித்தார்.
இதனைக் கவனத்தில் எடுத்த குழுவினர் வடக்கில் முதல்கட்டமாக தலா 8 லட்சம் ரூபா செலவில் 5 ஆயிரம் கல் வீடுகளை நிர்மாணிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது என்று மாவட்டச் செயலர்களால் தெரிவிக்கப்பட்டது.
சந்திப்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலர், தேசிய நல்லிணக்க அமைச்சின் செயலர், மீள்குடியேற்ற அமைச்சின் செயலர், வடக்கிலுள்ள மாவட்டங்களின் செயலர்கள், வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரத்தியேக செயலர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (வ-4,101)

## பல்கலை...

முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் நடத்தினர்.
ஊர்வலத்தால் கொழும்பு கோட்டையைச் சுற்றியுள்ள பாதைகள் மற்றும் மருதானை - புஞ்சி பொரளை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை, மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று கொழும்பு மேலதிக நீதிவான் மன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு நேற்றுக் காலை உத்தரவு பிறப்பித்ததாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.
சைட்டம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மருத்துவ சபையில் பதிவு செய்ய முடியும் என்ற தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (வ-4)

# வவுனியாவில் நாளை முத்தமிழ்விழா

வவுனியா,பெப்.3

வவுனியா தேசியகல்வியியற் கல்லூரி நடத்தும் முத்தமிழ்விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி பல நோக்கு மண்டபத்தில், பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில்தலைமைவிருந்தினராக பேராசிரியர் செ.யோகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி தெய்வேந்திரன் மற்றும் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சகுந்தலாதேவி சந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நாடகம், நடனம் , கவியரங்கம், பாடல் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

(ஐ-402)

# முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கட்டடம் திறப்பு



முல்லைத்தீவு, பெப். 3

முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் புதிய கட்டடம் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் அழிவடைந்த நிலையில் நீண்டகாலமாக வாடகைக்குப் பல இடங்களில் இயங்கி வந்தது.

இந்த நிலையில் 14 மில்லியன்; ரூபா நிதி ஒதுக்கீட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசன் திறந்து வைத்ததுடன், பெயர் பலகையையும் திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ.சுபசிங்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடமாகாண சபை உறுப்பினர்களான க. சிவநேசன், புவவேஸ்வரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவாளர்களும் கலந்து கொண்டனர்.

(ஐ-7)

# கைலாசபதியின் 34 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு

வவுனியா,பெப்.3

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் பேராசிரியர் க.கைலாசபதியின் 34 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா இலங்கைத்திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் ந.பார்த்தீபன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் "கைலாசபதியும் இலக்கியவிமர்சனமும்'' என்ற தலைப்பில் க.தணிகாசலமும், "கைலாசபதியும் தேசியமும்" என்ற தலைப்பில் சட்டத்தரணி சோ.தேவராஜாவும் கருத்துரைகளை வழங்குவர்.

நிகழ்வின் இறுதியில் பேராசிரியர் க.கைலாசபதியின் 34 ஆவது ஆண்டு நினைவாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ-402)

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

கிளிநொச்சியில் ஒரு நாள் ஊர்க்கோழிக்குஞ்சு விலை 70/=, மாரிஸ் பிரதர்ஸ் புறோயிலர் கோழிக்குஞ்சுகள் விலை 80/= விற்பனைக்கு உண்டு.

077 933 7287

தேவை
**சுஜித் என்ரபிறைசஸ்**
அலுவலக உதவியாளர்

எமது நிறுவனத்தில் பணிபுரிய
**அலுவலக உதவியாளர்**
(பெண்கள்) தேவை. சிங்களம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தகுதிகேற்ப சம்பளம் வழங்கப்படும்.

நுணாவில் சாவகச்சேரி
தொடர்பு: 021 227 0586
077 904 1258

**ஆங்கிலத்தில் தேர்ச்சி**

மேற்படி தேர்ச்சிக்கு 3 மாதத்தில் இலக்கணம் உட்பட 35 வருட அனுபவம் உள்ள ஆசிரியரால் பயிற்சி வழங்கப்படும். O/L தரத்தில் தமிழ் மொழியில் C இற்கு குறையாதவர்கள் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

077 648 5234

**வான் விற்பனைக்கு**

MICRO - N.P.P.H- XXX
7 Seat 12 - A/C
வான் விற்பனைக்கு உண்டு.
071 490 5590

**வீடு வாடகைக்கு**

இல.18 , முதலாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். நேரில் தொடர்பு கொள்ளவும்.

**தேவை**

கொழும்பில் இயங்கும் பற்சிகிச்சை நிலையத்திற்கு பெண் தாதிய உதவியாளர் தேவை.
(AJA 00831)(12.13)

076 634 2877

**SAHAN'S FARM PLUS**

BAIRAHA குஞ்சு, வான்கோழிக் குஞ்சு மற்றும் ஊர்ச்சேவல் குஞ்சு. விற்பனைக்குண்டு. பிரதி சனி மற்றும் செவ்வாய் தினங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:-
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
077 995 9382, 077 995 7700

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் வடக்கு, உடுவில், (றோட்டில்) வீதியில் Green ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாக சந்திக்கு அண்மையாகவுள்ள ஐந்து (05) பரப்புக் காணி விற்பனைக்கு.

இல. 17, உடுவில் வீதி, மானிப்பாய்.
சாம்பசிவன் -075 565 5053
Sambasivan- uk-London
+447 818 557 193

MAJESTIC CINEPLEX Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



10.00 / 1.00 / 4.00 / 7.00 | 10.30 / 1.30 / 4.30 / 7.30



சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
விசாரணை 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**வர்த்தகப் பங்காளர்/ சமையற்காரர் தேவை**

யாழ். நகரச் சூழலில் மிகவிரைவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள விருந்தினர் விடுதி மற்றும் உணவகம் என்பவற்றுக்கு வர்த்தகப் பங்காளர் மற்றும் சமையற்காரரொருவரைத் தேடுகிறோம்.

021 224 1555, 078 632 6111,
076 304 6429

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள அனைத்து பீடங்களுக்கும் வாகனங்களை செலுத்துவதற்கு அழைப்பின் பெயரிலான (On call Basis) சாரதி தேவை.**

மேற்படி 27.01.2017 பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் அழைப்பின் பெயரில் (On call Basis) சாரதிக்கான வயது எல்லை 45 வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய தகைமைகளிலும் முடிவுத் திகதியிலும் மாற்றம் எதுவும் இல்லை.

**பதிவாளர்**

**2017 ஆம் ஆண்டிற்கான மல்லாவி மாட்டிறைச்சிக் கடை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலங்கூறல் அறிவித்தல்**

மேற்படி மல்லாவி மாட்டிறைச்சிக் கடைக்கான 2017.02.09 - 2017.12.31 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலங்கூறல் நடவடிக்கை கீழ் குறிப்பிடப்படும் விவரப்படி நடைபெறவுள்ளது.
**ஏலங்கூறும் இடம்: துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்**
**ஏலங்கூறும் நாள்: 08.02.2017 மதியம் 12.00 மணிக்கு**

ஏலத்தில் பங்குபற்றுவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000.00 செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். (குறித்த தினத்தில் குறித்த இடத்தில் முற்பகல் 8.30 மணிக்கு)

கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் ஏலத்தில் பங்கு பற்றத் தகுதியற்றவர்களாவார்கள்.

ஏலத்தில் தெரிவு செய்யப்படும் குத்தகையாளர் ஏலத் தொகையின் 1/3 பகுதியை உரிய வரிகளுடன் உடன் அலுவலகத்தில் பணத்தினைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டு அன்றைய தினமே அலுவலகத்தில் ரூபா 25 பெறுமதியான முத்திரைகள் இரண்டுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும். ஏலத்தில் பங்குபற்றுவோர் வதிவிடத்தை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடம் உறுதிப்படுத்தும் சான்றிதழுடன் தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதியினையும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்**
**பிரதேசசபை, துணுக்காய்.**

**100% சுயதொழில் வாய்ப்புக் கற்கைநெறிகள் தற்பொழுது யாழில் ஆரம்பமாகின்றன !!!**

Diploma in Mobile Phone Repairing



Diploma in House LED Bulbs Designing



Diploma in CCTV Camera Installation



அனைத்து புதிய பிரிவுகளும்
சனி, ஞாயிறு 10.AM
ஆரம்பமாகின்றது.

Diploma in LED Name Board Designing



Diploma in Internet Money Making



இதுவரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களை சேர்ந்த 500ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றுள்ளனர். மேலதிக விபரங்களுக்கும் கற்று வெளியேறிய மாணவர்களது புகைப்படங்கள் பார்ப்பதற்கும்
Facebook Page:- UNIICTCAMPUS பார்க்கவும்.

மேலதிக விபரங்களுக்கு :-
UNI - Kaladdi Junction, Jaffna - 0777 110 862

# வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய வகுப்பறைக்கட்டடம் நேற்று திறப்பு



கிளிநொச்சி,பெப்.3
மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் அமைக்கப்பட்ட கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் ஒரு மாடி வகுப்பறைக் கட்ட டம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண முதல மைச் சர் க.வி. விக்னேஸ்வரன் விருந்தினராகக் க்லந்து கொண்டு வகுப்பறைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தவநாதன், அரியரத்தினம்,பசுபதிபிள்ளை ஆகியோரும், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் மற்றும் ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

நெற்களஞ்சியசாலைக் கட்டடங்கள் இரண்டில் இயங்கிய வடக்கச்சி ஆரம்பப் பாடசாலையானது, தற்போது அனைத்து சமூக நலன் விரும்பிகளின் உதவியுடன் புதுப்பொலிவு பெற்று வருகிறது எனப் பாடசாலை அதிபர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

(ஜ-35, 6)

## பாடசாலையை மீளத்திறக்க பெற்றோர்கள் கோரிக்கை

திருமலை,பெப்.3
திருகோணமலைக்கு வடக்கே 73 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள எல்லைக் கிராமமான தென்னமரவாடி கிராமத்திலுள்ள பாடசாலையை மீளத் திறக்குமாறு அப்பகுதியிலுள்ளபெற்றோர்கள்கோரிக்கை விடுத்தனர்.

போர் காரணமாக, 1984 ஆம் ஆண்டு இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர். 2011 ஆம் ஆண்டு மீளக்குடியமர்வுத் திட்டத்தின் கீழ் இங்கு வாழ்ந்த 168 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டன.

இதன்போது,'அங்குள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அதிபர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து பாடசாலையும் இயங்கிவந்த நிலையில், கடந்த 5 மாதங்களாக தற்போது பாடசாலை மூடப்பட்டுள்ளதாக' தென்னை மரவாடி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் டி. புஸ்பராசா தெரிவித்தார்

தற்போது மாணவர்கள் படிப்பதற்கு ஆர்வம் இருந்தும், ஆசிரியர்கள் அங்கு கடமைக்கு வருகை தருவதில்லை. குச்சவெளிக்கோட்டப் பணிப்பாளர், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இப்பாடசாலையை மீண்டும் இயங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

## விபத்துக்குள்ளானது அம்புலன்ஸ்

வவுனியா கோவில் குளத்திலிருந்து வவுனியா வைத்தியசாலைக்குப் பயணித்துக் கொண்டிருந்த நோயாளர் காவு வண்டி திடீரென விபத்துக் குள்ளாகிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா வைத்தியசாலைக்குப் பயணித்து கொண்டிருந்த நோயாளர் காவுவண்டி, சிவன் கோயிலடியில் பயணித்துக் கொண்டிருந்தவேளை, நோயாளர்காவுவண்டியின் சாரதிக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டது. இதன் காரணமாக வீதியை விட்டு விலகிய நோயாளர் காவு வண்டி வீடொன்றின் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. எனினும் காவு வண்டியில் நோயாளர் யாரும் இல்லை என்பதும், இவ்விபத்தில் எதுவித உயிர்சேதமும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## மன்னாரில் மூன்று பயனாளிகளுக்கு உதவித்திட்டம் வழங்கி வைப்பு

மன்னார்,பெப்.3
கடந்த 2014 ஆம் ஆண்டுவடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சால் வாழ்வாதார உள்ளீடுகள் வழங்கும் உதவித்திட்டத்தின் ஊடாக, மன்னார் மாவட்டத்தில் 3 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று மன்னாரில் அமைந்துள்ள அமைச்சின் உப அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சால் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், போரில் இறந்த போராளிகளது குடும்பங்கள், தடுப்பில் உள்ள அரசியல் கைதிகளது குடும்பங்கள் மற்றும் ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து இறந்தவர்களது குடும்பங்கள் ஆகியோருக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு ஆரம்பித்த இந்தத் திட்டத்தில் 2016 ஆம் ஆண்டு பயனாளிகளுக்கான உதவித் திட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக மன்னார் மாவட்டத்தில் குறித்த பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் பயனாளிகளிடம் மீன்பிடி வலைகளை வழங்கினார். (ஐ)




### பதவி வெற்றிடங்கள்

கடந்த 28 வருடங்களாக சிறந்த காப்புறுதி சேவையினை சிறப்பாக வழங்கி வரும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினர் வடமராட்சி வாழ்மக்களுக்கு ஓர் சிறப்பான ஆயுட்காப்புறுதி சேவையைத் தொடர்ந்து வழங்குவதற்காக பருத்தித்துறை பிராந்திய அலுவலகத்திற்கு **AGENCY DEVELOPMENT OFFICER (ADO)** தரத்திலான பதவிகளுக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்ட இருபாலரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடம் - 05**

**AGENCY DEVELOPMENT OFFICER (ADO)**

**தகைமைகள் -**

01) குறைந்தபட்சம் க.பொ.த உயர்தர (A/L) பரீட்சையில் சித்தி.
02) காப்புறுதி, சந்தைப்படுத்தல் துறை அல்லது தனியார் தொண்டு நிறுவனங்களில் (NGO) பணியாற்றியவர்கள் விரும்பத்தக்கது.
03) அர்ப்பணிப்பு மற்றும் குழுவையும், ஆலோசகர்களையும் வழிநடத்தும் திறன்.
04) வாடிக்கையாளர் மீதான அக்கறை, நம்பிக்கை மற்றும் சிறந்த தொடர்பைப் பேணும் திறன்.

நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்றுவதனால் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள்

01) அடிப்படை வேதனம் மற்றும் இதர கொடுப்பனவுகள்
02) உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சிகள்
03) வருடாந்த இலவச வெளிநாட்டு சுற்றுலாக்கள்.
04) சர்வதேச விருதுகள்
05) விரைவான பதவி உயர்வுகள்
06) இலவச காப்புறுதி அனுகூலம்
07) Tab / Laptop வசதிகள்
08) கடன் வசதிகள் (மோ.சைக்கிள்,கார்)

நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்ற விரும்பினால் தங்களது விண்ணப்ப படிவங்களை கீழுள்ள எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது எமது பிராந்திய அலுவலக முகவரிக்கு 15th February 2017 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பிராந்திய முகாமையாளர்,
யூனியன் அஷ்யூரன்ஸ்,
(வேலாயுதம் மகா வித்தியாலயம் அருகில்),
357/1, பிரதான வீதி,
பருத்தித்துறை.

Email ID: gobinatht@ualink.lk

GREAT PLACE TO WORK Best companies to work for 2015 Sri Lanka

யூனியன் அஷ்யூரன்ஸ் உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.



### ஆசிரியர் தேவை

குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல முஸ்லிம் பாடசாலையான மதீனா தேசிய பாடசாலைக்கு (க.பொ.த) உயர்தரத்தில் பௌதீகவியல் உயிரியல் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவை. தகைமையுடையவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்.

தொடர்புகளுக்கு: 037 2247530 / 0778959790/ 0718036275





### அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

31.01.2017 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
**கல்வியியல் மாணி**
பட்டத்தினைப் பெற்ற எமது சக ஆசிரியர்
**திருமதி ஜெயந்தி பரம்சோதி**
அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.**



### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள நகைக் கடை சோகேஸ் யாழ்.நகரில் விற்பனைக்குண்டு.
189, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
077 613 8964



### கணினி வடிவமைப்பாளர்கள் தேவையா?

(Computer Desingners)

எம்மிடம் பயிற்றுவிக்கப்பட்ட கணினி வடிவமைப்பாளர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தில் எப்பகுதியிலும் வேலை செய்யக் கூடியவர்கள்.
077 758 5969



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



அல்லையூர்
**Lion என் தேவராஜா அதிபர்**
(B.A, Dip. in Edu, M.A. in Tamil, Sp Trd Tamil, M.Ed 2nd upper, DSM merit
ஆசிரியர் குரு பிரதீபா பிரபா)
11.01.2017 அன்று நடைபெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக 32ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (M.Ed 2nd upper) பட்டம் பெற்றதுடன் தேசிய கல்வி நிறுவகத்தில் Diploma in School Management-2016 merit Pass பெற்ற யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை, அதிபர் லயன் என் தேவராஜா அவர்களை உளமாரப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பதவிகள் பெற்று உயர்வடைய மனமகிழ்ந்து வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
**மாமன், மாமியார், சகோதரர்கள், மைத்துனர்,மருமக்கள்.**

# கிராமப் பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்கக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு,பெப்.3
மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள பெரியபுல்லுமலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில், கடந்த பல வருடங்களாக ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். எனவே உரிய ஆசிரியர்களை பாடசாலைக்கு நியமிக்கக் கோரி அப்பிரதேச மக்கள் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கிராமத்தவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது:

நாம் இந்த எல்லைக் கிராமத்திலிருந்து பல கஷ்டங்களை எதிர்நோக்கிறோம். இப்பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் பல தடவைகள் கல்வித் திணைக்களத்துக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் அறிவித்தோம். ஆனால் இன்று வரை இதற்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.- என்றனர்.

இந்தப் பாடசாலையில் கற்பிப்பதற்காக சில நாள் களுக்கு முன்னர் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால், அவர் திடீரென இடமாற்றம் செய்யப்பட் டுள்ளார் என பெற்றோர் தெரிவித்தனர்.

தமது பாடசாலையிலுள்ள ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பௌதிக வளப்பற்றாக்குறைக்கு மிக விரைவில் ஒரு தீர்வை வழங்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

க.பொ.த சாதாரண தரம் வரை உள்ள இந்தப் பாட சாலையில் கடந்த மூன்று வருடங்களாக விஞ்ஞா னப் பாடத்திற்கென ஆசிரியர்கள் எவரும் இல்லாமலே தமது பிள்ளைகள் சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியதாக பெரியபுல்லுமலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ். செல்வராசா தெரிவித்தார்.

இங்கு தற்போது 7 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளனர். எனவே 5 ஆசிரியர்களையாவது நியமித்து, தமது பிள் ளைகளின் கல்வியில் அக்கறை காட்டுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

பெரியபுல்லுமலை எல்லைக் கிராமம் மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

கிராம மக்கள் பாடசாலைக் குறைபாடுகளை முதனிலைப் படுத்தி அதனை நிறைவேற்றித் தருமாறு ஆர்பாட்டத்தை முன்னெடுத்த போதும் மக்கள் பிரதிநிதிகளோ, கல்வித் திணைக்கள அதிகாரிகளோ அங்கு சமுக மளிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ-46)

# கணவன் வெட்டியதில் மனைவி படுகாயம்

## வவுனியா சுந்தரபுரத்தில் சம்பவம்

வவுனியா, பெப்.3
வவுனியாவில் கணவனின் தாக்குதலில் மனைவி படுகாயமடைந்து பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், வவுனியா பழைய சுந்தரபுரம் பகுதியில் வசித்து வந்த நான்கு வயது ஆண் பிள்ளையின் தாயான வடிவேல் தமயந்தி (21வயது) மீது கணவன் கத்தியால் இன்று அதிகாலை 5மணிக்கு ஒளிந்திருந்து தாக்கியதில் படுகாயமடைந்தவர் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த பல காலமாக இருவருக்கும் இடையே கருத்து முரன்பாடு ஏற்பட்டு நீதிமன்றத்தினூடாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதுடன் மனைவிக்கும் பிள்ளைக்கும் மதாந்தம் ஒரு தொகைப்பணத்தை செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மனைவி தனது தாய் தந்தையுடன் வசித்து வருகின்றார்.

கணவன் மாதாந்தம் தாபரிப்புப் பணத்தைச் செலுத்தி வந்துள்ளார். எனினும் சில மாதங்களாக செலுத்தத் தவறியுள்ளார் இதையடுத்து இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டுள்ளது. நேற்றுத் தனது மகனைப் பார்வையிடச் சென்றதுடன், மனைவியின் தந்தையிடம் உங்கள் மகளை வெட்டுவேன் என்று தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார். இதையடுத்து இன்றுகாலைகணவன்ஒளிந்திருந்துமனைவி மீது கத்தியால் வெட்டியதில் தலையில் படுகாயமடைந்து அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். காயமடைந்தவர் தனது வாழ்வாதாரத்துக்காக ஆடைத் தொழிற்சாலைக்குச் சென்று வந்துள்ளார். இதையடுத்து மனைவியின் தந்தை வழங்கிய புகாரின் பேரில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (கு)


## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 03 . 1942



மறைவு
30 . 01 . 2017

திருமதி. கமலாதேவி தியாகராஜா (குஞ்சு)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு (New Chetty Street - Kotahena) மற்றும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி தியாகராஜா அவர்கள் 30-01-2017 திங்கள்கிழமை அன்று கனடாவில் இயற்கை எய்தினார். இவர் காலஞ்சென்ற அப்பையா செல்லம்மா (New Chetty Street - Kotahena) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திரு சுப்பையா தியாகராஜா (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் கமலினி (Canada), தியாகினி (Canada), கோணேஸ்வரன் (Australia) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தில்லைசிவன், ஜெயகரன், கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சரண்யா, திஷாந்த், அபிராமி, அர்ச்சனா கிர்த்திக் ஆகியோரின் ஆருயிர் பாட்டியும் சகாராவின் செல்ல பூட்டியும் ஆவார்.

சனிக்கிழமை 04/02/2017 பி.ப 5:00 - 9:00 வரையில் Chapel Ridge Funeral Home & Cremation Centre, 8911 Woodbine Ave. Markham, ON L3R 5G1, Canada பார்வைக்கு வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை 05/02/2017 அன்று ஈமைக்கிரியைகள் நடைபெற்று அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.

Address:
No 28, Earnshaw Drive
Markham - Ontario L6COE4
Canada

தொடர்புகட்கு:
தில்லைசிவன் (கனடா): 905-471-2917
ஜெயகரன் (கனடா): 647-499-7277
கோணேஸ்வரன் (அவுஸ்திரேலியா): 612-983-78310

## மரண அறிவித்தல்

நல்லையா செல்வரத்தினம் (அன்ரன்)



பிடாரி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா செல்வரத்தினம் (அன்ரன்) 31.01.2017 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

(ஜெ.9504) (13.18)

## கண்ணீர் அஞ்சலி



வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எமது மன்றில் மாணவர் நிதியத்தை ஆரம்பித்து வைத்தவரான

டாக்டர் அம்பிகைபாகன்

அவர்கள் 01.02.2017 அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அனோஜனா அனுசாந்

மலர்வு 1996.08.09
உதிர்வு 2016.02.03

ஆண்டு ஒன்று சென்றாலும் எங்கள்
உதிரம் கண்ணீராய் உதிர்கிறது
ஆண்டுகள் பல சென்றாலும் நினைவுகள்
என்றும் மனதை விட்டு விலகாது.

அன்னாரின் நினைவு நிகழ்வு இன்று (03.02.2017) வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

பப்பா- அகிலாண்டமணி அம்மா- மனோராணி
கணவர்- அனுசாந் அண்ணா, அக்காமார்,
அத்தான்மார், மெறாமக்கள், குடும்பத்தினர்.

(AJA/814) (22.18.17)

## கண்ணீர் அஞ்சலி



வைத்திய கலாநிதி சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன் (கடவுள்)

தென்மராட்சி மண்ணில் பிறந்து, வைத்திய சேவையில் இணைந்து, முழங்காவில், பளை ஆகிய வைத்தியசாலைகளில் பொறுப்பதிகாரியாக சேவைபுரிந்து இறுதியாகப் போர்க்கால சூழ்நிலையிலும் தன்னலம் கருதாது சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அதன் வளர்ச்சிக்காக உழைத்த உத்தமர். அன்னார் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளராகவும், போசகராகவும், இறுதி மூச்சுவரை செயலாற்றிய சேவையாளர். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நோயாளர் நலன்புரி சங்கம்,
ஆதார வைத்தியசாலை - சாவகச்சேரி.

# பூநகரி ஆதார வைத்தியசாலையில் குடிதண்ணீர் சுத்திகரிப்புத் திட்டம்
## நாளை ஆரம்பிக்கப்படுகிறது

கொழும்பு, பெப். 3
கிளிநொச்சி, பூநகரி ஆதார வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் சேவை, நாளைக் காலை 11 மணிக்கு கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தினால் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டது.

சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமை யில், நடைபெறும் திறப்பு விழாவில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் சேவைத் திட்டங்களான கல்வி, மருத்துவம், நீர் விநியோகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்கிவரும் சாயி நிலையம், சாயி பக்தர்களின் அனுசரணையில், பூநகரி வைத்தியசாலைக்கும், அதனைச் சுற்றியுள்ள அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் பயன்பெறும் வகையில் இந்த குடிதண்ணீர் சுத்திகரிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.
சிரடி சாயி பாபாவின் நூற்றாண்டு மகாசமாதி சேவையிலேயே இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகக் கொழும்பு சாயி மத்திய நிலையத்தினர் தெரிவித்தனர். (வ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 32 ஆவது பட்டமளிப்பு நிகழ்வில் தமிழில் முதுகலைமாணிப்பட்டம் (MA) பெற்ற என் அன்பிற்கும் மதிப்பிற்குரிய ஆசிரியை

**கிருபாகரன் கௌரிபுத்திரி**

அவர்களை வாழ்க்கையில் மேன்மேலும் பல சிறப்புக்களைப் பெற மனதார வாழ்த்துகின்றேன்.

அன்புடன் ஜெ. சந்திரமாலா
சுஜீவா தாய்மைப்பேற்று வைத்தியசாலை, நாச்சிமார் கோயிலடி. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

# குடியியல் மேல் நீதிமன்றுக்கு நீதிபதி கண்ணன் நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதி மன்ற நீதிபதியாக இராமநாதன் கண்ணன் நியமிக்கப்பட்டார். அவர் இன்று தனது கடமைகளைப் பொறுப் பேற்கிறார்.
சுமார் 10 வருடங்களுக்கு மேலாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றி பின்னர் அதிலிருந்து விலகி அவர் தனிப்பட்ட ரீதியில் சட்டத்தரணியாகச் செயற்பட்டு வந்தார். மட்டக்களப்பு, வவுனியா மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்றங்களில் அரச சட்டவாதியாக அவர் பணிபுரிந்தவர்.
நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையில் ஜனாதிபதியால் மேல் நீதிமன்ற நீதிபதியாக இராமநாதன் கண்ணன் நியமனம் பெற்றார். நீதிபதி கண்ணன், தலைமை நீதியரசர் கே.சிறிபவன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சத்தியப்பிரமா ணம் செய்து கொண்டார். அவரை யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகத் தலைமை நீதியரசர் நியமனம் வழங்கினார்.
யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வை நீதிபதி இரா.கண்ணன் மற்றும் நீதிபதி மா. இளஞ்செழியன் ஆகியோர் முன்னெடுப்பர்.
மாத்தளையைச் சேர்ந்த நீதிபதி கண்ணனின், தந்தையார் பிரபல தொழிற்சங்கவாதி என்றும், அவ ரது சகோதரன் ஒருவர் சட்டத்தரணி என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.3
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1:30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பி. ஐங்கரநேசன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ)

++++++++++

யாழ்ப்பாணம், பெப்.3
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநனர் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் சிறப்புவிருந்தினராக சமூக சேவகர் ஏ. கிருபாகரனும், வர்த்தகர் எஸ்.மோகன் ராஜூம் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ஏ)

++++++++++

யாழ்ப்பாணம், பெப்.3
சுருவில் றோ.க.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப.ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று பாடசாலைச் சமூகத்தினர் அறிவித்தனர்.
பாடசாலை அதிபர் ந.மயூரன் தலைமையில்நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக தீவக கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர்வீ.கணேராசா கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# பொது இடத்தில் குடித்தவர்களுக்கு ரூ. 2, 000 தண்டம்

யாழ்ப்பாணம்.பெப்.3
பொது இடத்தில் வைத்து மதுபானம் அருந்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டது.
யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் பொது இடத்தில் வைத்து மது அருந்தினார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் வழக்கு விசாரணை நேற்று யாழ்ப்பாண நீதிவான் மன்றில் இடம்பெற்றது.
சந்தேகநபர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அவர்களைத் தலா 2 ஆயிரம் ரூபா தண்டமாகச் செலுத்துமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (வ-ரி)

# கட்டுடை விநாயகருக்கு குடமுழுக்கு

யாழ்ப்பாணம்,பெப்.3
மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய குடமுழுக்குப் பெருஞ்சாந்தி எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.07 மணி தொடக்கம் 8.01 மணி வரை உள்ள சுபவேளையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி கயிலாயநாதன்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கயிலாயநாதன் நேற்று (02.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர் களான சங்கரப்பிள்ளை - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கயிலநாதனின் அன்புமனைவியும் நாகேஸ்வரி. இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற மீனாம்பாள் மற்றும் தங்கேஸ்வரி காலஞ்சென்றவர்களான இரத்தினம். கமலம். சிதம்பரரேஸ்வரி மற்றும் மகேஸ்வரி. வேலாயுதபிள்ளை. யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பரமேஸ்வரன் ( T.O வலிவடக்கு பிரதேசசபை). கெங்காதரன் (தினேஸ் வெதுப்பகம். மருதனார்மடம்). இராசசேகரன் (நாவலப்பிட்டி லிங்கம் ஸ்ரோர்ஸ்) காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் பூரணி ஆகியோரின் அன்புதாயும் சிவராமி (ஆசிரியை கிளி/இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை), சாரங்கா ஆகியோரின் அன்பு மாமியும் கோகுலநர்த்தகா. கோகுலநர்த்தகி ,சுப்ரஜா. சயனுஜா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (03.02.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

செட்டி வளவு லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
க.பரமேஸ்வரன்

### திருமதி சின்னம்மா தியாகராசா



காங்கேசன்துறை. சோதி வீதியை பிறப்பிடமாகவும் இல.32/1 பிறவுண் றோட், நீராவியடி.யாழ்ப்பாணத்தை வதிவடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா தியாகராசா 02.02.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தியாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரம்-சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகம்மா. பொன்னம்மா.சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் செல்வராணி.இராஜபாலன்( ஓய்வு நிலை Gs) ,சத்தியபாலன்(அதிபர்). சிவபாலன் (ஜேர்மன்) ஆகியோரின் தாயாரும் நித்தியானந்தன். கமலராணி. வசந்தி.வனஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுரா. மதுராதீபன். தீபன். வைகுந்தன் (பிரான்ஸ்).அகலிகை (ஆஸ்திரேலியா). தாட்சாயினி (லண்டன்). பிரகஸ்பதி, சிந்துயா (மருத்துவத்துறை). துவாரகன். பிரத்யுன்மன். மகிசாயினி. லவுறின். லக்ஸ்சா,லக்ஸ்சன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2017)வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.32/1,
பிறவுண்றோட்,
நீராவியடி,யாழ்ப்பாணம்.
077 789 0029,077 869 6535

தகவல்:
தி.சத்தியபாலன்
(மகன்-அதிபர்)

## அனுமதிப் பத்திரமின்றி
# கால்நடைகளை லொறியில் ஏற்றியோருக்குத் தண்டம்

சாவகச்சேரி, பெப். 3
அனுமதிப் பத்திரமின்றி லொறியில் கால்நடைகளை அடைத்து அவற்றைச் சித்திரவதைப்படுத்தும் நோக்கில் கொண்டு வந்த வாகனச் சாரதிக்கும் உதவியாளருக்கும் சாவகச்சேரி நீதிவான் மன்றால் தண்டம் விதிக்கப்பட்டது.
கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தில் நேற்றுமுன்தினம் பயணித்த லொறியை வழிமறித்துச் சாவகச்சேரி பொலிஸார் சோதனையிட்டனர். அதில் இரண்டு பசு மாடுகளையும் 15 ஆடுகளையும் ஒன்றிணைத்து ஏற்றிவந்தமை கண்டறியப்பட்டது. அவரையும் உதவியாளரையும் கைது செய்தனர்.
இந்த இருவரையும் மிருகவதைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்து, சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தினர்.
குற்றத்தை சாரதியும் உதவியாளரும் மன்றில் ஒப்புக் கொண்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிக்கு இரு குற்றங்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபாவும் உதவியாளருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார். (வ - 9)

## வெட்டு காயங்களுக்குள்ளான
# பெண் உட்பட மூவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி, பெப். 3
தென்மராட்சிப் பிரதேசத்தின் வெவ்வேறு இடங்களில் கத்தி வெட்டுக்கு இலக்காகிய பெண் உட்பட மூவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 33 வயதுடைய குடும்பத்தலைவர் தலையில் கத்தி வெட்டுக்கு இலக்காகி பலத்த காயங்களுடன் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
வயிற்றுப் பகுதியில் வெட்டுக் காயத்துடன் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 22 வய்து இளைஞர் நேற்றுக் காலை சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 30 வயதுடைய பெண்ணொருவர் நெற்றியில் கத்தியால் கணவர் வெட்டியதாகத் தெரிவித்து மு.ப.10 மணியளவில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ -9)

# வடக்கில் அரச பஸ் சேவை நேற்று முற்றாக முடக்கம்

## இ.போ.ச. சாரதிகள், நடத்துநர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தால்

வவுனியா ஜன.27

வவுனியா சாலையின் அரச பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள் மேற்கொள்ளும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து இ.போ.ச. சாலைகளினதும் பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதனால் வடக்கில் நேற்று அரச போக்குவரத்துச் சேவைகள் முற்றாக முடங்கின. மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.



வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் இருந்து சேவைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் உள்ளன. எனவே வவுனியா சாலைக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் இருந்து சேவைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும். அத்தோடு வவுனியா அரச பேருந்துச் சாலையின் முகாமையாளர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் எனக்கோரி வவுனியா அரச பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் நேற்றுமுன்தினம் நண்பகல் முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் மு.ப. 10 மணியளவில் இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துச் சாரதிகளிடையே மோதல் ஏற்பட்டது. முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்கு வந்த இ.போ.ச பஸ் சாரதிக்கும், தனியார் பேருந்து சாரதிக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு, கைகலப்பாக மாறியது. இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கினர். இதன் போது இ.போ.ச சாரதி படுகாயமடைந்தார். இதனை அடுத்து இரண்டு சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் தமக்கு பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து புதிய பேருந்து நிலையத்தில் இருந்து வெளியேறிய இ.போ.சபை பேருந்துகள் பழைய பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன. சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜயமுனி சோமரட்ன, அந்தப் பகுதியில் பேருந்துகளை நிறுத்தி வைத்து போக்குவரத்துக்கு இடையூறை விளைக்காது, சேவையில் ஈடுபடுமாறு வலியுறுத்தினார். இதனையடுத்து இ.போ.சபை பேருந்துகளை எடுத்துச் சென்ற சாரதிகளும், நடத்துநர்களும் தமது வவுனியா சாலையில் நிறுத்திவிட்டு, அங்கிருந்த ஊழியர்களுடன் இணைந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.


இ.போ.சபை வவுனியா சாலை முகாமையாளரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும், பழைய பேருந்துத் தரிப் பிடத்தில் இருந்தே தமது சேவையைத் தொடர அனுமதிக்க வேண்டும் என இரு கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் வேலை நிறுத்தத்தை தொடர்ந்தனர்.

வவுனியா சாலையின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த அரச பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் நேற்று அதிகாலை முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

### யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய அனைத்து பேருந்துகளும் அந்தந்த சாலைகளில் நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் அன்றாடப் பயணிகள் சேவை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் 21 பாடசாலை சேவை பேருந்துகளும் இயக்கப்படவில்லை. நேற்றையதினம் பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு நீண்ட நேரம் காத்திருந்ததுடன் சிலர் தனியார் பேருந்துகளில் பயணித்ததையும், சிலர் மீண்டும் வீடுகளுக்கு திரும்பிச்சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது.


மன்னார்


யாழ்ப்பாணம்

இந்தப் போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த பேருந்து ஊழிய சங்கப் பிரதிநிதிகள், 'எங்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்'. வவுனியா பேருந்து நிலையத்தில் நாளாந்தம் எங்களுக்கும் தனியார் பேருந்து சாரதிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இது தொடர்பில் உரிய தரப்பிடம் முறையிட்டும் இன்று வரை அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. வடக்கு மாகாண சபையினரும் எங்களின் பிரச்சினைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கின்றனரே தவிர, இந்த விடயத்தில் தலையிட்டு ஒரு நிரந்தரத் தீர்வை பெற்றுத் தருவதாக இல்லை. எனவே உரிய தீர்வு கிடைக்கும் வரை எங்களின் போராட்டங்கள் தொடரும்-என்றனர்.

### பருத்தித்துறை

பருத்தித்துறை இ.போ.ச டிப்போ ஊழியர்களும் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் இ.போ.ச பஸ் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை.

இ.போ.ச பஸ் சேவைகள் எதுவும் இடம் பெறாமையினால் பஸ்களில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாது வீடு திரும்பினர். பொதுமக்கள் அரச ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பஸ்கள் இன்மையால் அந்த இடத்தை ஓட்டோக்கள் ஆக்கிரமித்துக் கொண்டன.

இதேவேளை- புறக்கணிப்புக்கு மத்தியிலும் இரவு நேரக் கொழும்பு பஸ் சேவை இடம் பெறும் எனப் பருத்தித்துறை சாலை முகாமையாளர் கே. கந்தசாமி தெரிவித்தார். பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவினால் நாளாந்தம் நடத்தப்பட்டு வரும் 50 க்கு மேற்பட்ட சேவைகளினால் கிடைக்கும் 7 இலட்சம் ரூபா வருமானம் நேற்று இழக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### மன்னார்

வவுனியா மாவட்டத்தில் உள்ள இலங்கை அரச போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான தரிப்பிடம் எமக்கு வேண்டும். அத்தோடு நேற்று முன்தினம் புதன்கிழமை முல்லைத் தீவு சாலைக்குச் சொந்தமான சாரதி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலை மேற் கொண்ட நபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து மன் னார் மாவட்ட இ.போ.ச. சாலையின் சாரதி மற்றும் நடத்துநர்களும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மன்னார் சாலையின் போக்கு வரத்துச் சேவைகள் அனைத்தும் முழுமையாக செயலிழந்ததால் பாடசாலை மாணவர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். குறிப்பாக கிராமங்களுக்கான சேவைகளும் பாதிப்படைந்தன.

### முல்லைத்தீவு

எமது மாவட்டத்தைச் சேர்ந்த இ.போ.ச. ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். எனவே முல்லைத் தீவில் மட்டுமல்லாது வடக்கு முழுவதும் வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெறுகின்றது. இதற்கான நிரந்தரத் தீர்வு பெறப்பட வேண்டும் என்று தெரிவித்து, முல்லைத்தீவு மாவட்ட இ.போ.ச சாரதிகள் மற்றும் நடத்துநர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அதிகாலையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு வைத்தியசாலை செல்வோர், பாடசாலை மாணவர்கள், அரச, மற்றும் தனியார் ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

நோயாளர்களை பார்வையிடச் செல்வோர் உரிய நேரத்துக்குப் பேருந்து வராமையால் வீட்டுக்குத் திரும்பிச் சென்றனர். நேற்றுக் காலை வைத்தியசாலைகளில் உள்ள அநேகமான நோயாளர்களை உறவினர்கள் பார்வையிடவில்லை. இதனால் நோயாளிகள் காலை உணவு முதல் ஏனைய தேவைகளை முழுமை செய்வதில் சிக்கல்களை எதிர்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### கிளிநொச்சி

கிளிநொச்சியிலும் இ.போ.ச ஊழியர்கள் போராட்டத்தை மேற்கொண்டனர். கிளிநொச்சியில் சேவைகளில் ஈடுபடும் அரச பேருந்துகள், அனைத்தும் பணியில் ஈடுபடாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஏ-9 பிரதான வீதி வழியாகச் செல்லும் தனியார் பேருந்துகள் பணியை தொடர்ந்ததால் நகர பகுதி மக்கள் ஓரளவு சிரமப்படாது பயணம் செய்தனர். கிராமப் புறங்களிலும், தூர பிரதேசங்களிலும் இருந்து நகருக்கு வருபவர்கள் தனியார் பேருந்துக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி ஏற்றட்டது.

அரச மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கிடையில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் வவுனியா மாவட் டச் செயலகத்தில் அண்மையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் குறித்த பேருந்து நிலையம் தொடர்பான பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

சகல உள்ளூர் சேவைகளில் ஈடுபடும் பேருந்துகளும், வவுனியா நகரத்தின் மையத்தில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் இருந்து தமது சேவைகளை ஆரம்பித்து, புதிய பேருந்து நிலையத்துக்குச் சென்று, அங்குள்ள பயணிகளையும் ஏற்றிக்கொண்டு கிராமத்தை நோக்கிச் செல்லவேண்டும் என்றும்-அதேபோல வவுனியா மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் அனைத்தும், புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தமது சேவையை ஆரம்பித்து, பழைய பேருந்து நிலையத்துக்கு வந்து அங்குள்ள பயணிகளையும் ஏற்றிக் கொண்டு தமது சேவையை மேற்கொள்ள வேண்டும் என்றும் முடிவு காணப்பட்டது.


அத்தோடு ஏனைய மாகாணங்களில் இருந்து வரும் சகல தூர சேவைப் பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்தின் நுழை வாயில் வழியாக உள்ளே சென்று தரித்து நிற்காமல் பயணிகளை இறக்கிப் பின்பு தமது பயணத்தைத் தொடருவார்கள் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. நேரக்கணிப்பாளர்கள் ஒழுங்குகளைக் கவனித்துக் கொள்ளுவார்கள் என்றும் அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்திருந்தார்.


வவுனியா

(த-21,8,56-173)

## புதிய நீதிமன்ற கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி

கொழும்பு,பெப்.3
புதிய நீதிமன்றக் கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பில், நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்சவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.
நீதிமன்றக் கட்டடங்கள் மிகப் பழைமையானவை. சனத்தொகையின் அதிகரிப்புக்கு ஏற்ப வழக்கு களின் எண்ணிக்கையைக் கூட்டுதல், நீதிமன்றக் கட்டடங்களின் இடவசதிகள் போதுமானதாக இல்லாமை போன்ற பல்வேறு காரணங்களால், புதிய நீதிமன்றக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான தேவை எழுந்துள் ளது.
அதனடிப்படையில், கம்பளை, ருவன்வெல்ல, மாங்குளம், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் பொலநறுவை போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற நீதிமன்றக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு முன்னுரிமைகளைபெற்றுக் கொள்ள நீதி அமைச்சராய் யோசனைமுன்வைக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கி யுள்ளது. (ஐ)



திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் சுமார் 12 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு மாடி கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நேற்று எதிர்க்கட்சித் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர்.விஜேந்திரன் மற்றும் பல அதிகாரிகளும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-ய-40)

## ஆட்சி மாற்றத்தால் மூவின மக்களும் நிம்மதியாக வாழ்கின்றனர்

### கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.3
கடந்த கால ஆட்சியை மாற்றுவதற்கு கட்சிகளின் தலைவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியால் இன்று நாட்டிலுள்ள மூவின மக்களும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் இந்த நாட்டில் ஏற்கெனவே இருந்த ஆட்சியை மாற்றுவதற்குப் பெரும் பாடுபட்டார்கள் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.
களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தொகுதிக்கான திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட்டின் தலைமையில் பெரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூலம், கிழக்கு மாகாணத்தை முன்னேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
கடந்த வருடம் கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறைக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்கெனவே சுகாதார அமைச்சராக இருந்த காரணத்தனால், சுகாதாரத்துறை பற்றிய சகல பிரச்சினைகளையும் அவர் தெரிந்தவராக உள்ளார்- என்றார். (ஐ)

31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
07.06.1952

ஆண்டவன் அடியில்
06.01.2017

அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

கடந்த 06.01.2017 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.02.2017) சனிக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், நாளை மறுதினம் (05.02.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் கலந்துகொண்டு அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் பங்குபற்றுவதுடன் அதன் பின்னர் இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தவிர்க்க முடியாத காரணங்களினால் நிகழ்வுகள் தொடர்பான அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுப் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

கடந்த 06.01.2017 வெள்ளிக்கிழமை எமது அன்புத் தெய்வத்தின் மறைவு கேட்டு ஓடோடிவந்து எமக்கு ஆறுதல் கூறியும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த நல் உள்ளங்களுக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மின்னஞ்சல் முகநூல் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், நினைவுப் பதாகைகள் வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் சாத்தி தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகள் மற்றும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியோருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

219, நாவலர் வீதி,
பண்டாரிகுளம், வவுனியா.

குடும்பத்தினர்.
077 364 8163

## சிறுநீர் கழிக்கச் சென்ற மாணவனை வகுப்பறையில் தாக்கிய ஆசிரியர்

### மாணவன் மருத்துவமனையில் சேர்ப்பு

மட்டக்களப்பு,பெப்.3
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள பாடசாலையொன்றில்; மூன்றாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் நேற்றுமுன்தினம் ஆசிரியர் ஒருவரால் கடுமையாக தாக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மத்திய வலயத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது. காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சிறுநீர் கழிப்பதற்காக வகுப் பறையைவிட்டுவெளியே வந்து மீண்டும் வகுப்புக்குச் சென்ற தன்னை, ஆசிரியர் கடுமையாகத் தாக்கியதாக மாணவன் பெற்றோரிடம் தெரிவித்தார். சிறுவனின் உடலெங்கும் சுமார் 25 இற்கும் மேற்பட்ட அடிகாயத் தழும்புகள் உள் ளதாக பெற்றோர் தெரிவித்தனர்.
பெற்றோரின் முறைப்பாட்டையடுத்து காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-ய-46)

## வவுனியா சைவப்பிரகாசா ஆரம்பப் பாடசாலையில் விளையாட்டு முற்றம், பிரதான மண்டபம் திறப்பு

வவுனியா,பெப்.3
மாகாண கல்வி அமைச்சுக்கு குறித்து ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழாக வவுனியா சைவப்பிரகாசா ஆரம்பப் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர்களின் விளையாட்டு முற்றம் மற்றும் பாடசாலையின் பிரதான மண்டபம் என்பன நேற்று முன்தினம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டன.
பாடசாலையின் அதிபர் திருமதி தியாகசோதி யுவராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமை விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் எம். இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் எம்.நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்நிகழ்வில் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொணடதுடன், மாணவர்களின் வரவேற்பு நடனம், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)





# 2020இல் சு.க.வே ஆட்சி அமைக்கும்

## மேல்மாகாண அமைச்சர் உறுதி



கொழும்பு,பெப்.3
சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டமைக்கும் நல்லிணக்கக் கூட்டம் தற்போது நிறைவுக்கு வந்துவிட்டது.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு சு.க.வே ஆட்சியமைக்கும் என்று மேல் மாகாண அமைச்சர் காமினி திலகசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒன்றிணைந்த எதிரணியினரின் நுகேகொடைப் பேரணியில், சு.க. உறுப்பினர்களும் கலந்து கொள்வரென எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால் இறுதியில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கலந்து கொண்டே பேரணியை வழிநடத்திச் சென்றார்.

இதேவேளை- எதிர்காலத்தில், ஆசிரியர்கள், இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள், கலைஞர்கள் எனச் சகலரையும் ஓரணியில் இணைத்துக்கொண்டு 2020 ஆம் ஆண்டு சு.க. ஆட்சி அமைப்பதற்கு சு.க எதிர் பார்த்துள்ளது. இந்த இலக்கை அடைய எமது கட்சி பலமான முயற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது - என்றார். (ஐ)

> இந்த இலக்கை அடைய எமது கட்சி பலமான முயற்சிகளை- மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

# தரமான தலைக்கவசம் அணிவது ஏப்ரல் மாதம் முதல் கட்டாயம்

## போக்குவரத்து அமைச்சு அறிவிப்பு



கொழும்பு,பெப்.3
எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல்தரப் படுத்தப்பட்ட தலைக்கவசங்களையே மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப் பட்டது என்று போக்குவரத்து மற்றும் சிவில் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத் துக்களில் பாதிக்கப்பட்டு, அங்கவீனமுற்ற மக்களுக்கான நிவாரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று அமைச்சில் இடம் பெற்றபோதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விபத்தொன்றை ஏற்படுத்திய நபர் இனங்காணப்படவில்லையாயின், அந்த விபத்தினால் பாதிக்கப்பட்ட நபர் ஆதரவற்றவராகி விடுகின்றனார்.

இவ்வாறு இனங் காணப்படாதவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த 2008 ஆம்ஆண்டு தொடக்கம் நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் 137 பேருக்கு 7.6 மில்லியன் ரூபாவும், 165 குடும்பங்களுக்கு 11.5 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டது.

பாதுகாப்பு வலையமைப்புகள் தவறாக அமைந்துள்ளமையும், வீதியை நேர்த்தியான முறையில் பராமரிக்க முடியாமையுமே, வீதி விபத்துக்கான காரணம்.

இருக்கைப் பட்டிகளை அணியாமல் வாகனம் செலுத்துதல், தரமற்ற தலைக்கவசங்களைப் பயன்படுத்துவதாலும், பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது-என்றார். (ஐ)

இலங்கை பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை



நாணய அரும்பொருட்காட்சிச்சாலை மற்றும் மத்திய வங்கி வெளியீடுகளின் விற்பனைப்பீடமும்

பொதுமக்களுக்காக இல.54 சதாம் வீதி, கொழும்பு 01 இல் உள்ள சென்றல் பொயின்ட் கட்டடத்தில் நாளாந்தம் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 5.00 மணிவரை திறந்திருக்கும் (சனி, ஞாயிறு மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும்).

பள்ளிக்கூடங்களும் பாரிய குழுக்களாக வருவோரும் தமது விஜயம் தொடர்பில் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

011-2477424, 011-2477418 011-2346304 @ dcommunications@cbsl.lk

தொடர்பூட்டல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

மலையகத்தில் போட்டி அரசியல்

# எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும் சந்திக்க நாம் தயாராகவுள்ளோம்

## மத்திய மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு



நுவரெலியா,பெப்.3
நாம் இன்று எம்மால் முடிந்த அபிவிருத்திப் பணிகளை பல போராட்டங்களுக்கு மத்தியில் முன்னெடுத்து வருகின்றோம். மலையகத்தின் போட்டி அரசியலில், இதனைச் செய்வது என்பது சாதாரண ஒரு காரியமல்ல. ஆனாலும், எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும் அதனைச் சந்திக்க இன்று நாம் ஒரு கூட்டணியாகத் தயாராக உள்ளோம் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜாராம் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மாநாடு தொடர்பில், இளைஞர்களுடன் கலந்துரையாடும் கூட்டம், நுவரெலியா கன்றி ஹவுஸ் விருந்தகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக அரசியலில் பெண்களின் பங்களிப்பு அல்லது மலையக அரசியல் கட்சிகளில் பெண்களின் வகிபாகம் மிகவும் குறைவாகவே உள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், அனுசா தர்சினி சந்திரசேகரன் மலையக மக்கள் முன்னணியின் உயர்பீட உறுப்பினராக இணைந்துக்கொண்டமை வரவேற்கக் கூடியது.

இவரது வரவு, எமது கட்சியின் அங்கத்துவர்களுக்கு, ஒரு புதிய உற்வேகத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு செயலாகும். சந்திரசேகரனின் மறைவுக்குப் பின்னால் சிறிய பின்னடைவைக் கட்சி சந்தித்தது. அதன் பின்னர் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலு. இராதாகிருஷ்ணன் தலைமைத்துவத்தை ஏற்றார். அதன்பின்பு நாம் பல வெற்றிகளைப் பெற்றோம். அது தனியே ஒருவருக்கு கிடைத்த வெற்றி என்பதைவிட எமது கட்சியின் அங்கத்தவர்கள் மீண்டும் இந்த கட்சியின் மீது கொண்ட நம்பிக்கைக்கு கிடைத்த ஒரு வெற்றியாகவே அதனை நான் கருதுகின்றேன். இன்னும் பல வெற்றிகளை எதிர்காலத்தில் பெற முடியும் என்ற நம் பிக்கை உள்ளது. அதற்கு பல காரணங்கள் உள்ளன.- என்றார். (ஐ)

# கைதியிடம் சிம் அட்டைகள் மீட்பு

கொழும்பு,பெப்.3
களுத்துறை சிறைச்சாலையி லிருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதியொருவரின் மூக்குக் கண்ணாடி உறைக்குள் இருந்து, 10 சிம் அட் டைகள் (அலைபேசி இணைப்பு அட்டைகள்) கைப்பற்றப்பட்டன. ஈஸி காஷ் (எளிதான பணப் பறிமாற்றம்) ஊடாக, ஹெரோயின்; போதைப்பொருள் வியாபாரம் மேற்கொள்ளப்படுவதாக, சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற சோதனை நடவடிக்கையின் போதே, குறித்த சிறைக் கைதியிடமிருந்து, சிம் அட்டைகள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து குறித்த சிறைக் கைதியை வெலிக் கடை சிறைச் சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுத்ததாக, சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## உலமாக்கள், ஆலிமாக்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

*உலமாக் கிளைத் தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைப் பாரம்பரியத் தாயகமாக அல்லது இந்த மாவட்டங்களில் திருமண உறவைக் கொண்டிருக்கும் உலமாக்கள் மற்றும் ஆலிமாக்களின் விவரங்களைத் திரட்டுவதற்கு யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா கிளை தீர்மானித்துள்ளதாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யதுல் உலமாக் கிளைத் தலைவர் அஷ்ய்க் பி.ஏ.எஸ். சுப்யான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையிலோ அல்லது உலகத்தின் எந்தப் பாகத்திலிருந்தாலும் ஜம்இய்யாவின் எந்த மாவட்டக் கிளையிலும் அங்கத்துவத்தைப் பெற்றிருந்தாலும் அல்லது இதுவரையில் அங்கத்துவத்தைப் பெற்றிராவிட்டாலும் தங்களுடைய விவரத்தை தரவேண்டும்.

தங்களுடையபெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தற்போது பார்க்கும்பணி ஆகிய விவரங்களை எதிர்வரும் 15ம் திகதிக்கு முன்பு 071 3901307 எனும் கையடக்கத் தொலைபேசிக்குகுறுந்தகவல் மூலமோ அல்லது அஷ்ய்க் ய்.புபரூஸ், இல 77, 9ம் குறுக்குத்தெரு, புதியசோனக தெரு, அராலிவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கோஅனுப்பிவைக்குமாறும் தெரிவித்தார். (க-10)

# தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்கு கல்வியே காரணம்

### வட்டக்கச்சியில் வடக்கு முதலமைச்சர்



கிளிநொச்சி,பெப்.3

இந்த நாட்டில் இடம் பெற்ற நீண்ட கால கொடிய போரின் விளைவாக உயிர்ச் சேதம், பொருள் சேதம், இருப்பிடச் சேதம் என அனைத்தையும் இழந்து நிர்க்கதியுற்ற நிலையிலும் எம்மவர்கள் வெட்ட வெட்டத் தழைக்கின்ற வாழை மரம் போன்று இன்றும் தலை தூக்கி நிற்கின்றார்கள் என்றால் அவர்களின் அடிப்படைக் கல்வி அறிவும் விடா முயற்சியுமே அதற்குக் காரணம். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலத்தில்நேற்று காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற கணினி, நூலக, வகுப்பறைக் கட்டடத்தொகுதியின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அன்பார்ந்த மாணவ மாணவியரே! நீங்கள் அனைவரும் கல்வி நட வடிக்கைகளில் சிறப்புறத் திகழ வேண்டும். அதற்கு அல்லும் பகலும் நீங்கள் பாடுபட வேண்டும். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்! இதை மறவாதீர்கள். உங்களுக்குக் கல்வி போதிக்கின்ற ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும் சிரத்தையுடனும் கற்றுத் தந்ததாலேயே நீங்கள் இன்று நல்ல நிலையை அடைந்துள்ளீர்கள். உங்கள் ஆசிரியர்களை எந்தக் காலத்திலும் மறவாதீர்கள். உங்கள் கற்பித்தல் முறைமையானது வெறும் பரீட்சைக்குத் தயார்படுத்தும் நிகழ்வாக அமையாது அறிவுத் தேடலாகவும் அதற்குஉதவுகின்றவழிமுறையாகவும் அமைய வேண்டும் என ஆசைப் படுகின்றேன். தென்னிந்தியாவிலோ இலங்கையிலோ சட்டத்தை தமிழில் முதன் முதலில் கற்பித்த ஆசிரியன் நான். 1971ம் ஆண்டில் அக்கைங்கரியத்தில் ஈடுபட்டேன். சட்டப் பரீட்சைகளில் என்னுடைய மாணவ மாணவியர் எனது விரிவுரைகளை மட்டுமே பாவித்தார்கள். ஆனால் சற்று வெளியே சென்று ஆங்கில நூல்களையும் படித்த மாணவ மாணவியர் பரீட்சைகளில் மிக நன்றாக சித்தி அடைந்தார்கள். ஆகவே மேலதிக வாசிப்பானது பரீட்சைகளில் நன்றாகச் செய்ய அத்தியாவசியமானது. மாணவச் செல்வங்களே! 'கண்டதுகற்கப் பண்டிதன் ஆவான்' என்பார்கள். உங்கள் பாடப் புத்தகங்களுக்குத் தொடர்புடைய மேலதிக வாசிப்புக்களை மறந்து விடாதீர்கள். அவை உங்களைப் பரீட்சைகளில்நல்ல அடைவுகளைப்பெற வழி வகுப்பன. இன்று இந்த அருமையான காலைப் பொழுதை உங்களுடன் செலவழித்த நேரம் எனது மனதில் பசு மரத்து ஆணியாக நிலைத்து நிற்கும் என்றார். (க-21)



## பெண்களின் உரிமைகளுக்கு கையழுத்து வேட்டை

யாழ்ப்பாணம் பெப் 3

தேசத்திற்கான பெண்களின் உரிமைக்குரல் என்ற தொனிப்பொருளில் பெண்களின் அரசியல் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் கையழுத்து வேட்டையும், துண்டுப்பிரசுரங்களை பொதுமக்களுக்கு விநியோகித்தலும் நேற்றையதினம் யாழ் நகரப்பகுதியில் இடம்பெற்றன.

யாழ்ப்பாண பேருந்து தரிப்பிடத்துக்கு அண்மையில் இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பது மற்றும் அவர்களை வலி மைப்படுதுவது தொடர்பில் பொது மக்களுக்கு அறிவுறுதப்பட்டதுடன் துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

மேலும் பெண்களின் பங்களிப்பு அரசியலில் அதிகரிக்க வலியுறுத்த வேண்டும் என்பதற்கான கையெழுத்து வேட்டையும் இடம்பெற்றது. இந்த கையெழுத்து வேட்டையில் பொதுமக்கள் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் கையெழுத்துக்களை இட்டுச் சென்றனர்.

இதில் மகளிர் அமைப்புக்களை ச் சேர்ந்தவர்கள், யாழ்ப்பாண மாவட்டச் செயலக பெண்கள் உதவிப் பிரிவின் அதிகாரி போன்றோர் கலந்து கொண்டனர்.

(க-8,106)

## தும்பளை லூர்து மாதாவுக்கு கொடியேற்றம்

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்.குடா நாட்டில் உள்ள கத்தோலிக்கயாத்திரைத் தலங்களில் ஒன்றான பருத்தித்துறை தும்பளை லூர்து மாதா கோவில் வருடாந்தத் திருவிழா நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு யாவிஸ் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன்ஆரம்பமானது.

தொடர்ந்து நவ நாள் ஆராதனை நற்கருனை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருவிழாத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் திருவிழாத் திருப்பலி இடம்பெறும். வெளியிடங்களில் இருந்து வருகைதரும் யாத்திரிகர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-173)

## கட்டுத் துவக்கு வெடித்ததில் குடும்பத் தலைவர் காயம்

வவுனியாவில் காட்டு யானைக்கு வைத்த கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பத் தலைவர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திசாலையில் சேர்க்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்கிழமை வவுனியா கல்நாட்டினகுளம் பகுதில் இடம்பெற்றறது. இதில் இறம் பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை யான பிரான் சிஸ் (வயது - 45) என்பவரே காயமடைந்தார். கல்நாட்டினகுளம் பகுதியிலுள்ள தனது வயலைப் பார்வையிடு வதற்காக ச் சென்ற இவர் அங்கு காட்டு யானைகள் நின்றதை அவதானித்து அவற்றை கலைத்துக் கொண்டு சென்றபோது வேறு ஒருவரால் வயலில் வைக் கப்பட்ட கட்டுத் துவக்கில் எதிர் பாராமல் அகப்பட்டே காயமடைந்தார். கட்டுத்துவக்கு வெடித்ததில் இரண்டு கால்களும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளன. தற்போது இப்பகுதியில் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் வருவது அதிகரித் துள்ளது. (க-21)

## வடக்கு மாணவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் பயிற்சி



யாழ்ப்பாணம், பெப்.03

வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த அரங்க மாணவர்களுக்கான மகிழ்வூட்டல் மற்றும் ஆற்றுப்படுத்தலுக்கான பயிற்சி அண்மையில் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கிளிநொச்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் விந்தன் மற்றும் யாழ்.இந்துக் கல்லூரி உளவளத் துணையாளர் மகிழ்ச்சிகரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

புனித திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம் மற்றும் நடராஜாராமலிங்கம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தரம் 11இல் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் சுமார் 120 மாணவர்கள் இதில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (த-ய)


## மரண அறிவித்தல்



தோற்றம்
24 . 03 . 1959

மறைவு
31 . 01 . 2017

**தம்பிமுத்து குகானந்தன்**

**(உரிமையாளர் - கொழும்பு தாமோதரவிலாஸ் (பிளாசா)**

நயினாதீவு. 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு. வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து குகானந்தன் (குகன் - உரிமையாளர்- கொழும்பு தாமோதரவிலாஸ் (பிளாசா)) 31.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.K.T. தம்பி முத்து - சொர்ணம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் புனிதவதி தம்பதியரின் அன்பு மருமகனும் வெள்ளிவீதியார் செஞ்சுடர் (ஞானம் ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும் சச்சிதானந்தன் (பட்டயக் கணக்காளர். கணேசலிங்கம் அன் கம்பனி). சிவானந்தன் (மிரண்டாஸ் கொழும்பு). அருளானந்தன் (தாமோதரவிலாஸ் - யாழ்ப்பாணம்) அம்பிகை. அம்பாலிகை. அமுதாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் Dr. இராமச்சந்திரன். பரமேஸ்வரி. குருகுலராணி. Dr. மருதயினார். சகுந்தலாதேவி. கருணாரட்ணம். காலஞ்சென்ற குலமகள் மற்றும் எளினி செஞ்சுடர். முருகு செஞ்சுடர். திருமாறன் செஞ்சுடர். அருள்மாறன் செஞ்சுடர். மகிழ்னன் செஞ்சுடர். குருபர செஞ்சுடர் ஆகியோரின் அருமை மைத்துனரும் Dr. அனசூயா (லண்டன்). Dr. சுமங்கலை (அமெரிக்கா). Dr. ஆரணி (கொழும்பு). பிரணவன் (அமெரிக்கா). வர்ஜிதா (லண்டன்) மற்றும் லண்டனில் வசிக்கும் மருமக்களது பாசமிகு மாமாவும் அர்ச்சனா. சாம்பவி மற்றும் லண்டனில் வசிக்கும் பெறாமக்களினது பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (03.02.2017) மற்றும் 04.02.2017 (வெள்ளி. சனி). காலை 9.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கனத்தை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பொதுப் பயன்பாட்டில் உள்ள காணியை உழுவதை எதிர்த்து பொது மக்கள் போராட்டம்

கிளிநொச்சி, பெப்.3
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள காணியொன்றில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்ட உழவு இயந்திரத்தை மறித்து அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கிளிநொச்சி, பெரியபரந்தன் தாரணிகுடியிருப்பு வானவில் விளையாட்டுக் கழகம் பயன்படுத்தி வரும் காணியே இவ்வாறு உழவு செய்யப்பட்டது. இந்த சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.
விளையாட்டு மைதானம் அமைந்துள்ள காணி தங்களுடையது என்று உரிமை கோரும் இருவர் காணியை உழுவதற்கு முற்பட்டனர். இதே வேளை குறித்த காணியைத் தங்கள் கிராம இளைஞர்களும், முன்பள்ளிச் சிறார்களும் 1991ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்த அப் பகுதி மக்கள் உழவு நடவடிக் கையைத் தடுத்து நிறுத்தினர். உழவு இயந்திரத்தை மறித்து வைத்துத் தங்களின் எதிர்ப்பை வெளியிட்ட அவர்கள், உழவு செய்யப்பட்ட பகுதியை மீளவும் வழமை போன்று சம தரையாக மாற்றியமைத்துத் தருமாறு கோரிப் போராட்டத்தை மேற்கொண்டனர்.



கிளிநொச்சி பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சமரச நடவடிக்கையில் ஈடுப்பட்டனர். உழவு இயந்திரத்தையும் விடுவித்தனர். கிராமத்தின் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள், மற்றும் காணிக்கு உரிமைகோரும் இருவரையும் பொலிஸ் நிலையம் வருமாறு கோரினர். நிலமை சுமுகமான நிலைக்கு கொண்டு வரப்பட்டது.
(க-21,35)



## வவுனியா பொதுப் பூங்கா இன்று திறப்பு

வவுனியா, பெப்.3
சிறுவர்களின் பெரு எதிர்பார்ப்புடன் இன்று வவுனியா பொதுப் பூங்கா புதுப் பொலிவுடன் திறந்து வைக்கப்படுகிறது நகரசபைச் செயலாளர் இ.தயாபரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்குப் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பார். நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், அரசஉத்தியோகத்தர்கள் நகரசபையின் முக்கியஸ்தர்கள் உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
கடந்த வருடம் இப்பூங்கா புனரமைப்புப் பணிக்காக மூடப்பட்டிருந்தது. புனரமைப்புப் பணி நிறைவடைந்த நிலையில் நவீன வசதிகளுடன் ஒரே நேரத்தில் சுமார் 500க்கு மேற்பட்ட சிறார்கள் விளையாடக்கூடியவகையில் புதிய விளையாட்டு உபகரணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உலகவங்கியின் நிதி உதவியுடன் இப்பூங்கா புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(க-402)

# சொந்த மாவட்டங்களிலேயே வாக்காளர் பதிவை தமிழர் மேற்கொள்ளவேண்டும்

### நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.3
வடக்கு கிழக்கை சொந்த இடமாக கொண்ட தமிழ் மக்கள் இனிவரும் காலங்களிலேனும் தமது வாக்காளர் பதிவுகளைத்தமது சொந்த மாவட்டங்களில் பதிய முன்வந்து மாவட்டத்தின் சகல அபிவிருத்தியிலும் பங்கு கொண்டுள்ளீர்கள் என்ற பெருமையை எட்ட முடியுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் விவரம் தெரிவிக்கையில்,
வடக்கு கிழக்கில் நீண்டகாலம் நிலவிய போர் காரணமாக அதிகளவான தமிழ் மக்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தனர்.
மேலும் பலர் நாட்டின் ஏனைய மாகாணங்களுக்குச் சென்று அங்கு குடியேறி வாழ்ந்தனர். சிலர் தொழில் நிமித்தம் சென்று தென்னிலங்கையில் வாடகை வீடுகளில் இன்றும் வசிக்கின்றனர். இவ்வாறு வாழ்ந்தவர்கள் அன்றுள்ள சூழ்நிலைக்காக தமது வாக்காளர் பட்டியலை தாம் தற்காலிகமாக வாழும் மாவட் டங்களிலேயே பதிந்து வருகின்றனர். இதில் சிலர் தற்போது சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பியுள்ள போதும் வாக்காளர் பட்டியல்களை கொழும்பு உள்ளிட்ட மாவட்டங்களிலேயே வைத்துள்ளனர்.
இவ்வாறு தென்னிலங்கையில் பதிவுகளை வைத்திருக் கும் வடக்கு கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்ட தமிழ் மக் கள் தமது வாக்காளர் பட்டியலைஇந்தஆண்டு முதல் உங் கள் சொந்த மாவட்டத்தினில் பதிவு செய்வதற்கு முன்வர வேண்டும். இவ்வாறு பதிவு செய் வது என்பது வடக்குகிழக்கு மாகா ணத்தின் அபிவிருத்திக்கு நீங்கள் செய்யும் உதவியாகவே கருதப் படும்.
அபிவிருத்தி என்பது வெறுமனே பணத்தினை வழங்குவது மட்டுமல்ல. நீங்கள் உங்கள் பெயர்களை வடக்கு கிழக்கில் பதியும் போது மாவட்டத்தின் சனத் தொகை அதிகரிக்கும் . அவ்வாறு காணப்படும் மக்கள் எண்ணிக்கையின் பிரகாரமே பல்கலைக் கழக மாணவர் அனுமதி , புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளி என்கின்ற இரு முக்கிய கல்வி அனுமதிகள் கூடத் தீர்மானிக்கப்படுகின்றன.
இதேபோன்றே நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகரிக்கும். சில திட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தினை விட்டு கை நழுவிப்போவதும் மக்கள் தொகை குறைவாக இருப்பதன் காரணமாகத்தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே தென்னிலங்கையில் வசிக் கும் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் தமது வாக்காளர் பட்டியலை இனிவரும் ஆண்டுகளில் சொந்த மாவட்டங்களில் பதிந்து உங்கள் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஊக்கமளிக்க முன்வரவேண்டும்.
இன்று வட மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 90 ஆயிரம் பேர் தென்னிலங்கையில் வாழ்கின்றனர். இவர்களில் அரைவாசிப் பங்கினர் சொந்த மாவட்டத்தினில் பதிவினை மேற்கொண்டால் வடக்கில் இருந்து பல்கலைக் கழகம் செல்லும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்திற்கும் அதிகரிக்கும். அதேபோன்றே புலமைப் பரிசில் மாணவர் எண்ணிக்கையும் அதிகரிக்கும் , நாடாளுமன்ற உறுப்பினர் தொகையும் அதிகரித்தே கானப்படும்.
எனவே வாக்காளர் பட்டியல் என்பது வெறுமனே அரசியல் என நோக்காது அதுவே மாவட்டத்தின் மொத்த அபிவிருத்திக்கான அத்திபாரமாகவும் அமைவதனால் குறித்த விடயத்தில் வடக்கு கிழக்கு மக்கள் கரிசனையோடு பதிவுகளை மேற்கொள்ள முன் வரவேண்டும். என்றார் அவர் .
(க-101)

## கைதடிப் பகுதியில் கொள்ளையர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம்,பெப்.03
கைதடிப் பகுதியில் ஆயுதங்களுடன் வந்த ஆறுபேருக்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் நான்கு வீடுகளில் கொள்ளையிட்டுச் சென்றதாகப் பொலிஸார் தெரி வித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை வேளையில் கைதடி தெற்குப் பகுதியில் இடம்பெற்றது. பொலிஸார் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,
இரண்டு பவுண் கொண்ட இரண்டு சங்கிலிகள், கைச் செயின் ஒன்று, புதியலுமாலா சைக்கிள் ஒன்று, 21 ஆயிரம் ரூபா பணம் என்பன இந்த நான்கு வீடுகளிலும் கொள்ளையிடப்பட்டன.
ஒரு வீட்டில் நீர் இறைக்கும் இயந்திரத்தைக் கழற்ற முயற்சித்த வேளை கழற்ற முடியாத நிலையில் திருடர்கள் பாதியில் விட்டுச் சென்றுள்ளனர்.
இறுதியாகக் கொள்ளையிடப்பட்ட வீட்டில் கத்தி, பொல்லுகள் என்பவற்றை விட்டுச் சென்றுள்ளனர். கொள்ளையர்கள் வந்ததைக் கண்டு கொண்ட இந்த வீட்டுக்காரர் பயத்தின் மத்தியில் சத்தம் போடாமல் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் நான்கு வீட்டுக்காரர்களும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.
(க-10,288)

## கழிப்பறைகளுக்கான கட்டணம் நிறுத்தம்

சாவகச்சேரி, பெப். 3
சாவகச்சேரி நகரசபையினால் நடத்தப்படும் கட்டணக் கழிப்பறையில் விரைவில் கட்டண அறவீடு நிறுத்தப்படவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.
பொதுமக்கள் வடமாகாண முதலமைச்சருக்கு முறையிட்டதையடுத்து மாகாணத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளினாலும் நடத்தப்படும் கழிப்பறைகளுக்குக் கட்டணம் அறவிடுவதை நிறுத்தி ஊழியர் மூலம் அடிக்கடி துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென கடந்த செவ்வாயன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் கழிப்பறைகளுக்கான கட்டண அறவிடுகள் விரைவில் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(க-9)

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
மத்திய வங்கியின் இலச்சினையைப் பயன்படுத்துதல்
அறிவித்தல்
இலங்கையின் நிதியியல் துறையில் உச்ச நிறுவனமாகவும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையாகவும் விளங்கும் இலங்கை மத்திய வங்கி, அச்சு மற்றும் சமூக வலைத்தளங்கள் அதிகாரமின்றி இலங்கை மத்திய வங்கியின் இலச்சினையைப் பயன்படுத்திவரும் அண்மைய போக்குகள் பற்றி பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றது.
மூன்றாம் தரப்பினரால் விடுக்கப்படும் ஊடக வெளியீடுகள் இலங்கை மத்திய வங்கியின் கருத்தினைப் பிரதிபலிக்காதாகையால் அவற்றில் இலங்கை மத்திய வங்கியின் இலச்சினை பயன்படுத்தப்பட்டிருக்கும் பொழுது இலங்கை மத்திய வங்கி அத்தகைய பயன்பாட்டினை அல்லது அறிக்கைகளை ஏற்றுக்கொள்ளமாட்டாது. சரியான ஒப்புதல் இல்லாமல், செய்தித்தாள்களில் அல்லது சமூக வலைத்தளங்களில் இலங்கை மத்திய வங்கியின் இலச்சினையைப் பயன்படுத்துவது சட்டத்தின் நியதிகளுக்கமைவாக நடவடிக்கையினை எடுக்க இலங்கை மத்திய வங்கியை நிர்ப்பந்திக்கக்கூடும்.
இதற்கமைய, மூன்றாம் தரப்பொன்று, அலுவல்சார் தொடர்பூட்டலொன்றில் இலங்கை மத்திய வங்கியின் இலச்சினையைப் பயன்படுத்த விரும்பும் பொழுது இலங்கை மத்திய வங்கியின் எழுத்து மூலமான ஒப்புதலைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மட்டுமே இதனைப் பயன்படுத்துதல் வேண்டும்.
011-2477424, 011-2477418 011-2346304 dcommunications@cbsl.lk
தொடர்பூட்டல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01



# ஏமனில் கடும்போர்

## 30 ஆயுததாரிகள் உயிரிழப்பு

ஏமனில் செங்கடல் கரையோரமுள்ள மொகா நகரில் இராணுவப் படைக்கும், ஹௌதி ஆயுதக் குழுவுக்கும் இடையே நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போரில் 30 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தகவல் தெரிவித்தது. கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள், தமது இருப்பிடங்களை விட்டு உடனடியாக வெளியேறுமாறு இராணுவத்தரப்பு அறிவித்தது. இந்த அறிவிப்பு குறித்த பகுதிகளில் மேலும் தாக்குதல்கள் உக்கிரமடையலாம் என்பதை சுட்டிநிற்கின்றது என்று கருதப்படுகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் பொதுமக்களில் எத்தனைபேர் கொல்லப்பட்டனர் என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை. ஆயினும் மனித குலத்துக்கு கடும் நெருக்கடி கொடுக்கப்பட்டது என்று ஐ.நா. குறிப்பிட்டது. (ம-எ)

# அமெரிக்கா தொடர்பில் வத்திக்கான் அதிருப்தி

## சுவர்கள் இடிக்கப்பட வேண்டுமே தவிர அமைத்தல் ஆகாது என்றும் தெரிவிப்பு

ரோம், பெப்.3

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நகர்வுகள் தொடர்பில் உரோமன் கத்தோலிக்கர்களின் தலைமையகமான வத்திக்கான் அதிருப்தி தெரிவித்தது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார் ட்ரம்ப். அவரது ஆட்சிக்காலம் 10 நாள்களை எட்டுவதற்கு முன்னர் தனது தேர்தல் பரப்புரைகளில் குறிப்பிட்டதைப் போன்று பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். ஈரான், ஈராக், சிரியா, லிபியா, சூடான், ஏமன், சோமாலியா ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு நுழைவிசைவு வழங்குவதை நிறுத்தி வைக்க உத்தரவிட்டார். அமெரிக்கா மெக்சிக்கோ எல்லைச் சுவர் அமைப்பதில் முழுத்தீவிரமாக உள்ளார். இதனால் அவர்மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. வத்திக்கானும் தனது அதிருப்தியைத் தெரிவித்தது.

அகதிகள் தொடர்பில் ட்ரம்ப் எடுத்துள்ள நகர்வுகள் மிகவும் வலி தருகின்றன. போரின் வடுக்களை சுமந்துவரும் மக்களுக்கு கதவுகளை திறந்துவிட வேண்டுமே தவிர மூடிவிடக் கூடாது. அதேபோல் பன்னாடுகளுடன் உறவையும் ஒன்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேண வேண்டும். அதற்கு எமக்கிடையே சுவர்கள் இருக்கக்கூடாது. அவை இடிக்கப்பட வேண்டுமே, உருவாக்கப்படக் கூடாது என்று வத்திக்கான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக ட்ரம்ப்பின் வரவும் நகர்வும் அமெரிக்க வரலாற்றில் கரிய பதிவு, கிறிஸ்தவ மற்றும் அமெரிக்கர்களின் கனத்தை குறைத்தது என அமெரிக்க கத்தோலிக்க தலைமை தெரிவித்தது. (ம-எ)





# சீனாவுடன் போர் அமெ. நடத்தும்

## என்கிறார் பெனான்

வொஷிங்டன், பெப். 3

அமெரிக்கா இன்னும் சில ஆண்டுகளில் சீனாவுடன் போர் நடத்தும் என்று ட்ரம்பின் நெருங்கிய ஆலோசகரான ஸ்ரீவ் பெனான் தெரிவித்தார்.

ட்ரம்ப் அதிபராக பதவியேற்பதற்கு முன்பே சீனாவுடன் பல விடயங்களில் முரண்பட்டு வந்தார். தென்சீனக் கடலில் சீனா மேற்கொள்ளும் இராணுவ விரிவாக்கத்தை ட்ரம்ப் வன்மையாகக் கண்டித்தார். சீனா, தாய்வானை ஒன்றுபட்ட சீனா என்று அழைத்து வருகிறது. இதை ட்ரம்ப் ஏற்றுக்கொள்ளவில்லை என்றே தெரிகிறது. தைவான் அதிபருடன் ட்ரம்ப் மேற்கொண்ட உரையாடல்களை சீனா வன்மையாகக் கண்டித்தது. இதனால் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் கடும் பகை தோற்றம்பெற வாய்ப்புள்ளது என்று கருதப்பட்ட நிலையில் சீனாவுடன் போர் நடத்தப்படும் என்று பேரதிர்ச்சியைத் தூக்கிப் போட்டுள்ளார். ட்ரம்ப்பின் தேசிய பாதுகாப்பு மற்றும் திட்டக்குழுவில் முதன்மை ஆலோசகராக உள்ள ஸ்ரீவ் பெனான்.

சீன இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கடந்த வாரம், 'அமெரிக்காவுடனான போர் என்பது வெறும் கனவுப் பேச்சு இல்லை. அதற்கான திட்டங்கள் நிறைவேறிக் கொண்டே இருக்கின்றது' என்று தெரிவித்திருந்த நிலையில், அதற்கு பதிலடியாக இந்தக் கருத்து வந்தமைந்தது.

பன்னாட்டு அரசியலில் மூன்றாம் உலகப் போருக்கான சாத்தியம் உண்டெனில், இன்னும் சில வருடங்களில் எதிர்பார்க்கப்படும் இந்த சீன - அமெரிக்கப் போர் அதற்கான கருவாக இருக்கலாம் என்பது அரசியல் நோக்கர்களின் கணிப்பு. (ம-எ)

# அதிபர் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை

## பான் கீ – மூன்



சியோல், பெப். 3

தென்கொரிய அதிபர் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் போட்டியிட விருப்பமில்லை என்று சூசகமாக அறிவித்தார் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலரும் தென்கொரியாவைச் சேர்ந்தவருமான பான் கீ - மூன். தென் கொரியாவின் அதிபர் பார்க் கியுன் ஹை, தனது நெருங்கிய தோழி சோய் சூன் சில்லுடன் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கினார். இதனால் அவர் இடைக்காலத் தடைக்கு உட்பட்டுள்ளார். அவர் மீது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவர் நிரந்தரமாக நீக்கப்பட்டு, அதிபர் தேர்தல் நடத்தப்படும் என்பதே பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது.

அவ்வாறு அதிபர் தேர்தல் நடத்தப்பட்டால் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளரான பான் கீ - மூன், அதில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் அவர் அதிபர் தேர்தலில் போட்டியிட விரும்பமில்லை என்பதை சூசகமமாக தெரிவித்தார்.


சியோலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், அரசியல் மாற்றத்துக்கு தலைமைதாங்கி வழிநடத்தும் முயற்சியை விட்டு விடுவது என நான் முடிவு செய்து விட்டேன் என அவர் தெரிவித்ததை அடுத்தே, அதிபர் தேர்தலில் பான் கீ- மூன் போட்டியிடமாட்டார் என்று கருதப்படுகிறது. (ம-எ)

# இந்தியா - பாக். இணக்கம்

காத்மண்டு, பெப். 3

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் சார்க் நாடுகளின் முக்கிய ஆலோசனைக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தியா- பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே எல்லை விவகாரம் தொடர்பில் முறுகல் நிலை கருத்துமோதல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இணக்கமான நிலையில் முதல் நாள் ஆலோ சனை இடம்பெற்று முடிந்தது. சார்க் நாடுகளின் கூட்டமைப்பில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட 8 தெற்காசிய நாடுகள் உள்ளன. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு நாட்டில் மாநாட்டுக்கான கூட்டம் இடம்பெறும். கடந்த வருடத்துக்கான கூட்டம் பாகிஸ்தானில் நடைபெறவிருந்தது. அந்தக் காலப்பகுதியிலேயே இந்தியாவின் எல்லையில் உள்ள இராணுவ முகாம்களில் ஒன்றான ஊரியில் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினர்.


பாகிஸ்தான் இதற்கு உடந்தையாக இருந்தது என்று தெரிவித்து, மாநாட்டைப் புறக்கணித்தது இந்தியா. ஏனைய சில நாடுகளும் புறக்கணிக்க மாநாடு பிற்போடப்பட்டது. இந்த நிலையில் நேபாளத்தில் சார்க் அங்கத்துவ நாடுகளின் முக்கிய அங்கத்துவக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. முதல் நாளில் இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் உள்ள முறுகல் நிலையைத் தணித்தல், வரவு- செலவுத்திட்டங்கள் என்பன தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது. (ம-எ)



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ







மல்லாகம்

# அருள்மிகு காளிகாதேவி தேவஸ்தானம் மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

## [ 03.02.2017 வெள்ளிக்கிழமை ]

### கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச்செய்தி

எல்லாம் வல்ல மல்லாகம் பதியுறை காளிகா தேவியின் பேரருளால் இவ் ஆலயம் இன்று புதுப் பொலிவு பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெறு கிறது. இவ் ஆலயம் 30 ஆண்டுகளாக எனது மாமனார் மைத்துனர். பூசித்து வந்த நிலையில் இவ்வாலயத்தின் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகம் நடத்துவதை எண்ணி மன மகிழ் கிறேன். இவ்வாலயத்திற்கு சகல வழி களிலும் உதவிய அம்பிகை அடியார்க ளுக்கு நல்லாசி கிடைக்க வேண்டுகி றேன்.

**ஆலய பிரதமகுரு**
**கிரியா ரத்தினம் சிவஸ்ரீ**
**ச.பரமேஸ்வரக்குருக்கள்**
**(கந்தரோடை)**

### ஆசிச் செய்தி

ஆதிசக்தியின் அம்சமாகிய மல்லாகம் விஸ்வப்பிரம்ம ஆசாரி களால் புதுப்பிக்கப்பட்ட காளிகாதேவியின் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் இன்று (03.02.2017) தை இருபத்தொ ராம் நாள் வெள்ளிக்கிழமை நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இவ் ஆலயத்தில் எமது இளமைக் காலத்தில் நானும் எனது அண்ணனும் நித்திய பூஜைகள் செய்து வந்த அச்சிறு ஆலயம் இன்று வளர்ச்சிகண்டு மஹோற்சவம் நடைபெறும் அளவுக்கும் வெகுவிரைவில் சித்திரத் தேரோடும் கோவிலாகவும் அமையப் பெற்றுள்ளதை எண்ணி உள மகிழ்ந்து கொண்டு அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆசார சீலராக வந்து நடைபெறுகின்ற கிரியைகளில் கலந்துகொண்டு மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டு பேரருள் பெற எமது நல்லாசிகளை வழங்கு கின்றேன்.

**சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்**
**பிரதம சிவாச்சாரியார்,**
**ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

### ஆசிச் செய்தி

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய காளிகாதேவி ஆலயத்தின் புனருத் தாரண மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று (03.02.2017) வெள்ளிக்கிழமை நடைபெறுவதையிட்டு இந்துக்களாகிய நாம் எல்லோரும் மனமகிழ்வதோடு புதுப் பொலிவுடன் அமைக்கப்பெற்ற ஆலயத்தின் தோற்றத்தைக் கண்டு வியக்குமளவுக்கு எதிர்பாராத வளர்ச்சி கண்டுள்ள ஆலயத்தை வந்தடைந்து வழிபடுவோமாக. பன்னிரண் டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ளும் அம்பிகை அடியார்களுக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவரது ஆசிகள் உரித்தாவதோடு. ஆலய வளர்ச்சியில் பங்கெடுத்த அனைவருக்கும் என் சக நிர்வாக சபையின ருக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**வி.சுகுணதாசன்.**
**ஆலய நிர்வாகசபை,**

### ஆசிச் செய்தி

"அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்."

மல்லாகம் காளிகோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். ஆலயங்கள் காலத்துக்கு காலம் புனருத்தாரணம் செய்தல் மிகவும் அவசியமாகும். அருட்சிறப்பு மிக்க காளியம்பாளின் பக்தர்கள் பல லட்சம் ரூபா செலவில் கோயிலை அழகுபடுத்தி தெய்வீகத் திருப்பணியை நிறைவேற்றி இருப்பது பெருமைக் குரிய விடயமாகும். திருக்கோயில்களை சீரிய முறையில் பேணிப் பாதுகாக்க வேண்டும். கும்பாபிஷேகத்துக்குப் பின்பும் ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற வேண்டும். கூட்டுப் பிரார்த்தனைகள். பொங்கல் வழிபாடுகள் நன்முறையில் இடம்பெற வேண் டும். தெய்வ சந்நிதானங்களை எம்முன்னோர் கட்டிக் காத்த வகையில் அனைவரும் ஒன்று பட்டு பாதுகாத்தல் காலத்தின் கட்டாய கடனாகும். அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற பிரார்த்தித்து அடியார்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வ நல்லாசிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

**ஆறுதிருமுருகன்**
**தலைவர்- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

### ஆசிச் செய்தி

எல்லாம் வல்ல எங்கள் குல தெய்வமாகிய காளித்தாயை வணங்கிக் கொண்டு காளிகாதேவியின் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டுகளிப்பதில் பேரின்பமடைகிறேன். இவ்வாலயத்தில் பல மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டு தரிசித்தாலும் இவ்வாலய வரலாற்றில் இன் றைய கும்பாபிஷேகமானது மிக முக்கியமான்தாகும்.

இவ்வாலயம் சிறுகுடிலில் ஆரம்பித்து படிப்படியாக கட்டட வளர்ச்சியில் மட்டுமன்றி மஹோற்சவம் நடைபெறுமளவுக்கு வளர்ச்சியடைந்ததை மனமகிழ்ந்து கொண்டு கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கால வரலாற்றைக் கொண்ட ஆலயத்தில் இப்பொழுதுதான் மஹோற்சவம் செய்யும் பாக்கியம் கைகூடி உள்ளதை எண்ணி இங்கு வாழும் அனை வரும் மகிழ்ந்து கொள்ளவேண்டிய தருணத்தில் இக்கைங்கரியம் நடைபெற பாடுபட்ட நிர்வாகசபையினர். அம்பாளின் மீளா அடியவர்கள். கிராம மக்கள் அனைவருக்கும் நன்றிகளையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.கந்தசாமி.**

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

அனோஜன் றேடர்ஸ்
ANOJAN TRADERS
K.K.S.Road,Mallakam
Tel. 021 320 5132

MANGALAGANAPATHY
PRINTERS
K.K.S.Road,
Mallakam.

நியூ மஞ்சுளா
சலூன்
K.K.S.வீதி, மல்லாகம்
உரிமையாளர் - ஐ.அருள்ராஜ்

ஈசன்
போட்டோ & வீடியோ
ரெயிலறிங்
K.K.S.வீதி, மல்லாகம்.

LEDCHUMANAN 'A'
HARDWARE
K.K.S.Road, Mallakam.
Tel. 077 392 2317

ESWARY
TIMBER DEPOT
K.K.S.Road, Mallakam
Regd.no.TD 186/V

பரணிகா
மல்ரிசென்ரர்
K.K.S.வீதி, மல்லாகம்

KIRISHAN STAINLESS
STEEL WORKS
MALLAKAM
077 134 5485

SIEELAN
பேனிச்சர்ஸ் அன் மல்ரி றேட் சென்ரர்
தொ.பே. 077 661 7501
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

Ranjanas Tex
ரன்ஜனாஸ் புடைவையகம்
புடைவைத் தினுசுகளின் சங்கமம்
இல.4A, மத்திய சந்தை, சுன்னாகம்.
தொ.பே.021 222 6278

அருள் மோட்டார்
வேக்ஸ் சொப்
K.K.S.Road, Mallakam

இதழ் ஆக்கம் : ம.கிருசுதன்



நுட்பம்

## புதிய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் கண்டறிவு

**தோ**ற் புற்று நோய்த் தாக்கத்தை மருத்துவர்களின் உதவி இன்றிச் சோதனை செய்து கண்டு பிடிக்கக்கூடியதான புதிய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஸ்டன்போர்ட் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகளே ஆரம்ப நிலையிலேயே துல்லியமான முறையில் தோற் புற்றுநோயைக் கண்டறிவதற்கான செயற்கை நுண்ணறிவு முறையை உருவாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக மருத்துவர்கள் உறுதி செய்வதை விடத் துல்லியமாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது நோயைக் கண்டறிந்து உறுதிசெய்துகொள்கிறது. இவற்றை அதிதிறன்கைபேசிகளில் இணைப்புச் செய்து கொள்வதன் மூலம் பரிசோதனைகளை மேற்கொள்ள முடிகிறது.

மனிதர்களை மிகவும் அச்சுறுத்தும் நோய்களுள் ஒன்றாக புற்றுநோய் விளங்குகிறது.தோல்ப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், மூளைப்புற்றுநோய் என இவற்றின் பட்டியல் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது.

இந்நிலையிலே புற்றுநோயைக் கண்டுபிடிப்பதற்கான புதிய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

தவிர புற்றுநோய்களை ஆரம்ப நிலையிலே கண்டறிந்தால் நோயின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பது மருத்துவர்களின் கருத்தாக இருந்து வருகிறது.புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதற்கான ஆய்வுச் செயற்பாடுகளை விடவும் அதனை கண்டறிவதற்கான பரிசோதனை ஆய்வு என்பது தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றமை நோக்கத்தக்கது.



## தொழில் முயற்சிக்கான விருது வழங்கும் நிகழ்வு

திருகோணமலை மாவட்ட கைத் தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுக்கான தொழில் முயற்சியாளர் விருது வழங்கும் நிகழ்வுகள் அண்மையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன.

மாவட்ட கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத் தலைவர் கே.குலதீபன் தலைமையில் இடம் பெற்றுள்ள மேற்படி நிகழ்வில் நிதித்திட்டமிடல் அமைச்சர் ரவி கருணாநாயக்க முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் சிறந்த முறையிலே தொழில் முயற்சி சார்ந்து வினைத்திறனாகச் செயற்பட்டவர்களுக்கான விருதுகள் அவரால் வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப் மற்றும் கிழக்கு மாகாண காணி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலப்பதி ஆகியோரும் கலந்துகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிதி முறைமை தொடர்பான ஆய்வு நூல் மத்திய வங்கியால் வெளியிடப்பட்டது

இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் பி.சமரசிறியால் எழுதப்பட்ட நிதி முறைமை தொடர்பான ஆய்வு நூல் ஒன்றை மத்தியவங்கி அண்மையில் வெளியிட்டது.

மாணவர்கள்,ஆசிரியர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள மேற்படி நூலானது நிதி நடவடிக்கைகள்,நிதி முறைமைகளின் செயன்முறை அடிப்படைகள் தொடர்பான பல தகவலளிப்புகளை கொண்டமைந்துள்ளது.

மேலும் இலங்கை மத்தியவங்கி தற்போது வெளியிட்டுள்ள நிதி முறைமை தொடர்பான ஆய்வு நூலானது நூலாசிரியரால் தொகுக்கப்பட்டுள்ள நான்காவது நூலுருவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பாக பணப்பரிமாற்றம்,வங்கியியலும் பொருளாதாரமும்,அடிப்படைப் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான பகுப்பாய்வு,பொருளாதார நிய மங்கள் மற்றும் கொள் கைகள் தொடர்பிலான பகுப்பாய்வு போன்றதான நூலுருக்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிட்டு நோக்கத்தக்கது.

தவிர,இலங்கையை மையப்படுத்திய விதமான நிதி முறைமைகளை இந்த நூலானது, ஐந்துவகையான



பணமூடுகை மூலக்கூறுகள்,மத்திய வங்கி,நிதி நிறுவனங்கள்,நிதிச் சந்தைகள் மற்றும் நிதிப் பாதுகாப்பு வலைச் செயன்முறை பிரிவுகளாக முன்னிலைப்படுத்தியுள்ளது.அத்துடன் நிதி சார்ந்த மேலதிக தகவல் தேடல்களை மேற்கொள்வதற்கான வழிகாட்டியாகவும் இந்த நூல் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூரைச் சூரியப் படல்கள் தேசிய மின்கட்டமைப்புடன் இணையவுள்ளது

*இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பணிப்பு*

கூரைச் சூரியப் படல்கள் எதிர்வரும் இரு வாரங்களில் தேசிய மின்கட்டமைப்புடன் இணையவுள்ளதான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மின்சேவை வழங்குநர்களான இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா எலெக்ரிசிற்றி நிறுவனங்களுக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித்த குமாரசிங்கவால் மேற்படி இணைவு தொடர்பான பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும்,

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர், "மரபுக்குப் புறம்பான, புதுப்பிக்கக்கூடிய சக்தி மூல வளங்களின் மத்தியில் கூரைச் சூரியப் படல் தொழில்நுட்பமானது மின்கட்டமைப்புடன் இணைத்தல் மற்றும் பொருத்துதல் ஆகியவற்றுக்கான அதிவிரைவான தொழில்நுட்ப செயன்முறையாகக் காணப்படுகிறது. அதேபோன்று அரசின் 'சூரிய சக்தி புரட்சிக்கு' எனும் நிகழ்ச் சித்திட்டமானது வருங்கால மின்சக்தித் தேவையைக் கணிசமான அளவு தீர்க்கக் கூடியதான சிறந்த திட்டமாக விளங்குகிறது.2016 ஆம் ஆண்டில் கூரைகளில் பொருத்தப்பட்ட சூரியப்படல்கள் மூலமாக இலங்கையானது 42 மெகாவாட்ஸ் கொள்ளளவை தேசிய மின்கட்ட மைப்பிற்குச் சேர்த்துள்ளது" என்றார்.



2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையான தகவல்களின்படி இலங்கையில் கூரைச் சூரியப் படல் மின்னுற்பத்தி நிலையங்கள் 7ஆயிரத்து904பொருத்தப்பட்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டும் உள்ளமை நோக்கத்தக்கது.



'ருக் ருக் சபாரிஸ்'

இலங்கைக்கு வருகை தரும் பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விதமாகவும் அவர்களைக் கவரும் விதமாகவும் பலவித உற்பத்திக் கூறுகளை அவர்களுக்காகவென சுற்றுலாத்துறை வழங்கிவருகிறது. அந்தவகையிலே சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமான திறந்த அமைப்புடைய 'ருக் ருக் சபாரிஸ்' முச்சக்கர வண்டிகள் தற்போது அறிமுகம் பெற்றுள்ளது. இவற்றில் பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகள் கொழும்பு நகரத்தின் அழகுசார் சுற்றுலா மையங்களையும்,கலை அம்சம் சார்ந்த விடயங்களையும் பாரம்பரிய உணவு பரிமாறல்களையும் அனுபவித்துக் கொள்வதுடன் அதற்கு மேலதிகமான பயண அனுபவங்களை 'ருக் ரக் சபாரிஸ்' பயணம் மூலம் பெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.



# சிறுதுளி பெருவெள்ளம்

மருத்துவர் சி.யமுனாநந்தா

அண்மைய மாரி மழையில் சில மணிநேர மழையிலேயே யாழ்ப்பாணத்தின் பல வீதிகள் ஒழுங்கைகளில் வெள்ளம் நிரம்பியதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் குறிப்பிடத்தக்க அளவில் பெரிய மழைவீழ்ச்சியால் ஏற்பட்ட வெள்ளம் அல்ல இது. வடிகாலமைப்பு இல்லாததால் ஏற்பட்ட வெள்ளம் என்று கூறுவதைவிட மழைநீரைச் சேமிக்கும் ஆற்றல் இன்மையால் ஏற்பட்ட வெள்ளம் என இதனைக் கூறலாம்.

மழைநீரைச் சேமிப்பது என்பது பாத்திரங்களில் மழைநீரைச் சேமிப்பது என்று மட்டும் பொருளல்ல. தரையில் தாவரங்களை நட்டு நீர் பற்று திறனை அதிகரித்து மழைநீரைச் சூழலுக்கு ப் பசுமையாகச் சேமிக்கலாம்.ஆனால் இன்றைய நாகரிக மோகம் வீடுகளுக்கு மாபிள் தரை அமைப்பதோடு அமையாது, வீட்டின் எஞ்சிய வளவுக்கும் கற்களைப்பதிக்கும் நிலைக்கும் மாறியுள்ளது. இதனால் வீட்டு வளவினுள் உள்ள மழைநீரும் வெள்ளமாக வீதிக்கு வந்துவிடுகின்றது.

மழைநீரை மறைமுகமாகவோ நேரடியாகவோ சேமிப்பது எமது சக்தி நுகர்வின் அளவைக் குறைக்கும். இது சூழல் மாசடையும் வீதத்தைக் குறைக்கும். எனவே "சிறுதுளி பெருவெள்ளம்" என்பதைச் சக்தி சேமிப்பிலும் ஒவ்வொரு குடிமகனும் கருத்தில் கொள்ள வேண்டும்.

முன்னைய காலங்களில் காப்பெற் வீதி இல்லை ஒழுங்கைகளும் குண்டும் குழியுமாகவே அமைந்து இருந்தன. இதனால் வெள்ளம் வீதிகளுக்குக் குறுக்காக வளவுகளுக்கும்வேலிகளுக்கும் இடையே பாய்ந்தோடிவிடும். ஆனால் இன்று மதில்கள் வேலியை மாற்றிவிட்டது. அடுத்து வீட்டு மதில்களைப் போட்டி போட்டுக் கொண்டு வீதிகளும் உயர்ந்து விட்டன. வீதிகளுக்கு காப்பெற் காப்பு ஒரு படிமேல். இதனால் வீடுகளிலிருந்து வெளியேறும் மழைநீர் வீதியோரங்களிலேயே சிறைப்பட நேரிடுகின்றது. இந்த வீதியோர வெள்ளம் பெருவீதி, சிறுவீதி சந்திக்கும் இடங்களில் முழுமுற்றுகைக்குள் அகப்பட்டு சிறுவீதிகளை சில நாள்களுக்கு சிறுகுளமாகவே மாற்றி விடுகின்றது.

> நீருடன் பிளாஸ்ரிக் சேர்தல் பெரிய சூழல் மாசடைதல் பிரச்சினையாகும். மழைகாலங் களில் கடலைநோக்கிப் பாயும் வடிகால் களையும் கடற்கரை களையும் பார்க்கும் போது ஏராளமான பிளாஸ்ரிக் கழிவு கள் யாழ்ப்பாணக் கடல் நீரேரியினுள் விடப்படு கின்றன. பிளாஸ்ரிக் கழிவு கள் பிரிகை அடைய 500 தொடக்கம் 1000 வருடங்கள் தேவை. இவை கடலில் உள்ள சாகியத்தை பாதிக்கின்றது.





பொது இடங்களில் இவ்வாறு கைவிடப்பட்ட சிறுவெள்ளத்தின் அநாதரவாக வீதியோரங்களில் குப்பைத்தனமான மக்களின் செய்கைகளால் வீசப்படும் குப்பைகள், பிளாஸ்ரிக் கழிவுகள் தத்தெடுக்கின்றன. இந்த இடங்களில் வெள்ளம் வழிந்தோட நுளம்புகளின் பெருக்கம் அதிகமாகும்.

நீருடன் பிளாஸ்ரிக் சேர்தல் பெரிய சூழல் மாசடைதல் பிரச்சினையாகும். மழைகாலங்களில் கடலைநோக்கிப் பாயும் வடிகால்களையும் கடற்கரைகளையும் பார்க்கும் போது, ஏராளமான பிளாஸ்ரிக் கழிவுகள், யாழ்ப்பாணக் கடல் நீரேரியினுள் விடப்படுகின்றன. பிளாஸ்ரிக் கழிவுகள் பிரிகை அடைய 500 தொடக்கம் 1000 வருடங்கள் தேவை. இவை கடலில் உள்ள சாகியத்தை பாதிக்கின்றது.

மைக்குரோ பிளாஸ்ரிக் பதார்த்தங்களும் நனோ பிளாஸ்ரிக் பதார்த்தங்களும் கடற் சாகியத்தைப் பாதிப்பதுடன், கடலுணவு மூலம் மனிதரையும் பாதிக்கும்.

பிளாஸ்ரிக் கழிவுகளும் எம்மை ஊனப்படுத்துகின்றது என்ற உண்மையை மக்கள் அறிவார்களேயானால் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையைக் கட்டுப்படுத்தி கண்டபடி தெருவோரங்களில் வீசமாட்டார்கள்.

மழைபொழிந்தபின் பலர் டெங்கு நோயால் பாதிக்கப்பட சூழல் சுகா தாரமே முக்கியமான காரணமாக இருக்கின்றது.

இதனால் பலர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு, பலதுளி குருதிகளால் குருதிப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

பலருக்குக் குருதியேற்றலும் சேலைன் ஏற்றலும் மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு மருத்துவர்கள் தள்ளப்படுகின்றனர். சிறுதுளி பெருவெள்ளம் என்பது மருத்துவ சிகிச்சைக்கும் பொருந்துகின்றது.

வருமுன் காத்தல் சிறந்ததே. எமது வறண்ட பிரதேசத்தில் நாம் சிறப்பான நீர் முகாமைத்துவத்தை குறிப்பாக மழைநீரைச் சேமிப்பதற்கு மேற்கொள்வோமாயின், அநாவசியமான வெள்ளம் ஏற்படுவதையோ அதன் கழிவுகள் சேர்ந்து சூழல் மாசடைதலையோ தடுக்கலாம். ஒவ்வொருவரும் எடுக்கும் சிறு முயற்சிகள், சூழலை நலத்துடன் காக்கப் பெருமளவில் உதவும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழ் மக்களின் பொறுமை இழப்பு

தமது சொந்தக் காணிகளை வான்படை விடுவிக்கவேண்டும் என வலியுறுத்தி கேப்பாப்புலவு, பிலவுக்குடியிருப்பு மக்கள் தொடர் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட் டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குள் அமைந்துள்ளது பிலக்குடியிருப்பு கிராமம். விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களின் சிறிய வான்படை, புலக்குடியிருப்பையொட்டிய காட்டுப் பகுதியைப் பயன்படுத்தி வந்தது. வானூர்தி ஓடுபாதை ஒன்றும் அங்கு இருந்தது. போருக்குப் பின்னர் அந்தப் பகுதியைத் தம் வசப்படுத்திக்கொண்ட இலங்கைப் படைகள் பின்னர் அந்த இடத்தில் தமது வான்படைத் தளத்தை அமைத்தன.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திய புலிகளுக்குச் சொந்த மானவை எல்லாமும், புலிகள் ஆண்டனுபவித்த எல்லாமும் கொழும்பு அரசுக்கே சொந்தம் என்ற கொள்கையின்படி புலிகளின் வான்படைத் தளம் அமைந்த பகுதியையும், அதனை அண்டிய பகுதிகளையும் அரச வான்படை தனக்குரியதாக்கிக்கொண்டது. இதனால் புலக்குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியமரமுடியாத நிலை ஏற்பட்டது. புலிகளின் வானூர்தி ஓடுபாதை அமைந்திருந்தபோதிலும் இந்தப் பகுதியில் மக்கள் குடியிருக்க அனுமதிக்கப் பட்டிருந்தார்கள் என்பது உற்றுநோக்கற்பாலது.

2009 மே மாதத்தில் வன்னியில் இறுதிப் போர் முடிவுக்கு வந்த போது மக்கள் அவைரையும் ஓமந்தையில் மாணிக்கம் பண்ணை (மனிக் பாம்) இடைத்தங்கல் முகாமில் அடைத்து வைத்திருந்தது அரசு. மனித உரிமை அமைப்புக்களது நெருக்கடியாலும், உலக நாடுகளின் அழுத்தத்தாலும் அந்த முகாமை அரசு மூடவேண்டியிருந்தது. 2012 புரட்டாதி மாதம் மாணிக்கம் பண்ணை முகாமை மூடுவதற்கு அரசு முடிவெடுத்தபோது, கேப்பாப்புலவைச் சேர்ந்த மக்கள் மட்டுமே அங்கு மீதியாக இருந்தார்கள். அவர்களின் காணிகளில் வான் படையினர் நிலைகொண்டிருந்தனர். எனவே அவர்களுக்கு கேப்பாப்புலவிலேயே சூரியப்புலம் என்ற இடத்தில் காடுவெட்டி கால் ஏக்கர் காணி வீதம் வழங்கி, புதிய குடியிருப்பு ஒன்றை ஏற்படுத்தினார்கள். அதிலிருந்து இரு கிலோ மீற்றருக்கும் குறைந்த தூரத்தில் அவர்களின் சொந்தக் காணிகள் இருந்தன. அவற்றுக்கான காணி உறுதிகள் அல்லது ஆவணங்களை அவர்கள் தம் வசம் கொண்டிருந்தார்கள்.

மகிந்த அரசு இந்த மக்களை சூரியப்புலத்தில் பலவந்தமாகக் குடியமர்த்தியபோதே, அவர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்தார்கள். தமக்குத் தமது சொந்த மண்ணே வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். எனினும் இராணுவ அடக்குமுறைக்குப் பெயர்போன மகிந்த ஆட்சி மக்களை அச்சத்துக்குள் ஆழ்த்தி சூரியப்புலத்தில் அடக்கி வைத்தது.

மைத்திரிபால சிறிசேன அரச தலைவரானதும், மகிந்தவின் ஆட்சி மாறி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி ஏற்பட்டதும், அவர்கள் வாக்குறுதியளித்தபடி தமது காணிகள் தம்மிடம் மீள வந்துவிடும் என்று இந்த மக்கள் நம்பியிருந்தார்கள். ஆனால் கிட்டத்தட்ட இரு வருடங்கள் கடந்தபோதும் அது நடைபெறவில்லை. அதனால் இப்போது மக்கள் பொறுமை-இழந்துவிட்டார்கள். பொங்கவும் தொடங்கிவிட்டார்கள். கேப்பாப்புலவு மக்களின் போராட்டம் அதைத்தான் தெளிவாக உணர்த்துகிறது.

மைத்திரி – ரணில் அரசு, தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித்த காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணால்ஆக்கப் பட்டவர்கள் விவகாரம் மற்றும் அரசியல் தீர்வு என்பவற்றில் மிக மெத்தனமாகவே செயற்பட்டு வருகிறது. மக்கள் எதிர்பார்த்த வேகம் அதிலில்லை. இதனால் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகமுமே அதிருப்தியிலும் கொந்தளிப்பு நிலையிமே இருக்கிறது. சிங்கள அரசியல் தலைவர்கள் எதையும் தரமாட்டார்கள், ஏமாற்றிவிடுவார்கள் என்று நம்பத் தலைப்படுகிறது. போராட்டம் மட்டுமே உரிமைகளைப் பெறுவதற்கான ஒரே வழி என்று சிந்திக்கிறது.

அதனால்தான் உயிர்ப் பயத்தையும் துறந்து, படையினரின் முகாமுக்கு எதிரே போய் நின்று – எந்த அரசியல் பின்புலமும் இன்றி – போராடத் துணிந்திருக்கின்றனர், கேப்பாப்பிலவு மக்கள். அதிலும் கணிசமான அளவினர் பெண்கள். அரசின் மெத்தனம் மற்றும் தமிழர்களின் பிரச்சினைகளை இரண்டாம் பட்சமாக அணுகும் நிலை என்பவற்றாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அதிருப்தியும் கோபமும் அடைந்துள்ள மக்களை அமைதிப்படுத்தும் வகையில் அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவேண்டும்.



# கேள்விக்குறியாகும் வடக்குக் கிழக்கு தமிழர் பொருளாதாரம்

வீ. எஸ். எஸ். தனஞ்சயன்

1983ம் ஆண்டுவரை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2ஆவது பெரிய பங்களிப்பை வடக்கு கிழக்கு மாகாணங்களே வழங்கியிருந்தன. ஆனால் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்கள் 8வது, 9வது இடங்களை வகிக்கின்றன. இது தற்காலச் சூழலில் தமிழர்களின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் வளங்கள் நிரம்பிய பிரதேசங்களாக காணப்படினும்கூட, அந்த வளங்களை உபயோகப்படுத்த முடியாத நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு வலயங்கள் எனும் பெயரிலான இராணுவ நில ஆக்கிரமிப்பு, பௌத்த சிங்களமயமாக்கலின் ஒரு பகுதியாக நடைபெறும் குடியேற்றங்கள் போன்றவற்றினால் மக்கள் தமது குடியிருக்கும் மற்றும் விவசாய நிலங்களை இழந்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலும் வடமாகாணத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும், தமிழ் விவசாயிகள், தமது பூர்வீக விவசாய நிலங்களை இழந்து வருகின்றனர். விவசாயத் துறைக்கு ஊக்குவிப்புக்கள் குறைவாகவும், உற்பத்திகளுக்கான போதிய சந்தைப்படுத்தல் வசதிகளும் அற்றுக் காணப்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணங்கள்கண்டமேடைகள்கொண்ட நீண்டகடற்கரையைக்கொண்டுள்ள மாகாணங்களாகத் திகழ்வதால், வடக்கு கிழக்கு கடற்பரப்பு மீன்பிடிக்கு உகந்த பிரதேசங்களாகக் காணப்படுகின்றது. மீன்பிடி தமிழர் பொருளாதாரத்தில் ஓர் முக்கிய இடத்தைக் கொண்டிருப்பதுடன், இந்தப் பிரதேசங்களில் தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். போர்க் காலப் பகுதியில், மீன்பிடித் தொழில் கடும் பின்னடைவைச் சந்தித்ததுடன், மீனவர்களின் மீன்பிடிப் படகுகள், உபகரணங்கள் அழித்துச் சேதமாக்கப்பட்டன. தற்போது போருக்குப் பின்னரான காலப்பகுதியில், வடக்கு கிழக்கு கடற்பரப்பில் அதிகரித்துவரும் சிங்களமீனவர்களினுடைய ஆதிக்கம், தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாகியுள்ளது. முல்லைத்தீவின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், அளம்பில், செம்மலைப்-பகுதிகளில் சிங்கள மீனவர்கள் புதிதாக வாடிகள் அமைத்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தின் கெடுபிடிகளுடனேயே தற்போதும் தமிழ் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர், மேலும் யாழ் மாவட்டத்தின் சில பகுதிகள் இன்னமும் மீன்பிடிக்காக அனுமதிக்கப்படவில்லை. போதிய இறங்கு துறைகள், பதனிடல் வசதிகள், சந்தைப்படுத்தல் வசதிகள் என்பவை மூலம் மீன்பிடித்துறையை வடக் குக் கிழக்கில் மேம்படுத்தப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

### வளங்கள் இருந்தும் போர் காரணமாக கைத்தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்படவில்லை

கைத்தொழில் துறைக்குத் தேவையான மூலப்பொருள்கள், கனிய வளங்கள் பல, வடக்கு கிழக்குப் பகுதிகளில் செறிந்து காணப் படுகின்றன. யாழ். மாவட்டத்தில் சீமெந்து உற்பத்திக்கு அவசியமான முருகைக் கற்கள் காணப்படுகின்றன, 1983ம் ஆண்டில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில், 113, 147 மெற்றிக் தொன் சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டது. போரின் போது இடைநிறுத்தப்பட்ட இந்தச் சீமெந்து தொழிற்சாலைசெயற்பாடுகள் இன்னமும் மீளமைக்கப்படவில்லை. ஏற்கனவே இயங்கிய ரயர் தொழிற்சாலையும் கைவி



> தமிழர் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை பொருளாதார வல்லுனர்களின் ஆலோசனை மிகக் குறைவாகக் காணப்படுகின்றது, மிகவேகமாக மாறிவரும், நவீனத்துவமடையும் உலகில், தமிழர் பொருளாதாரம், பொருளாதார வல்லுனர்களின் ஆலோசனையைப் பெற்று சரியான பாதையில் வழிநடத்தப்பட வேண்டும்.

டப்பட்ட நிலையில் உள்ளது. யாழ் மாவட்டத்தின் வல்லிபுரம், குடத்தனை, நாகர்கோவில் மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் கண்ணாடி உற்பத்திக்கு தேவையான சிலிக்கா மணல் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட முடியும். முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் பகுதியில், ஓட்டு உற்பத்திக்குத் தேவையான களிமண் காணப்படுகின்றது. 1980 இற்கு முன்னரும், விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழான காலத்திலும் சிறப்பாக இயங்கி, வடக்குக் கிழக்குக்கான ஓட்டுத் தேவையைப் பூர்த்தி செய்த ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை தற்போது செயலற்றுக் கிடக்கின்றது. புல்மோட்டையில் காணப்படும் இல்மனயிட் வெளிநாட்டுக்குத் தாரை வார்க்கப்பட்ட நிலையில் அதன் பயனை மத்திய அரசே அனுபவிக்கின்றது. அந்தப் பிரதேச மக்கள் அந்த வளத்தின் பயனைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**பொருளாதார ஒடுக்குமுறைகளே ஆயுதக் குழுக்களின் தோற்றத்துக்கு வழி வகுத்தன**

இலங்கையில் தமிழர்கள் மீதான பொருளாதார ஒடுக்குமுறைகள் தேசிய இனமுரண்பாட்டுக்கும், தமிழ் ஆயுதக் குழுக்களின் தோற்றத்துக்கும் ஓர் முக்கிய காரணமாக அமைந்தன. அசாதாரண சூழல் நிலவிய காலத்தில் இது மேலும் மோசமடைந்தது. தொடர் இடப்பெயர்வுகள், பொருள்களுக்கான தட்டுப்பாடு, வியாபார நிலையங்கள் அழிவடைந்தமை, தமிழ் வர்த்தகர்களைத் தமது தொழிலைக் கொண்டு நடத்த முடியாத நிலைக்கு இட்டுச்சென்றன. 2009 இற்குப் பிற்பட்ட காலத்திலும், தமிழ் வர்த்தகர்களைப் பொறுத்தவரை வியாபாரத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாண தமிழ் வர்த்தகர்கள் 2009 இற்கு பின்னர் வருகை தந்த முஸ்லீம் வர்த்தகர்கள், தென்னிலங்கை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் நிறுவனங்களுடன் போட்டி போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, யாழ்.நகர்ப்பகுதியில் புடவை வியாபாரத்தில் ஈடுபடும் தமிழ் வர்த்தகர்கள், 2009 இற்கு பின்னர் வருகை தந்த புதிய வர்த்தகர்களுடன் கடும் போட்டியை எதிர் நோக்குகின்றனர். வடக்கில் பாரம்பரிய தனியுடமை வணிக அமைப்பில் தொழிற்படும் தமிழ் வர்த்தகர்கள், புதிய, நவீனத்துவமான சந்தைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை தற்பொழுது உணரப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் வர்த்தகம் ஓர் பொறிவைத்த, மீண்டுவரக் கடினமான நிலையிலேயே காணப்படுகின்றது. அனேகமான தமிழர் வணிக நிலையங்கள், ஒப்பீட்டளவில் மூலதனம் குறைந்தவைகளாகவும், தத்தம் பகுதிகளிலுள்ள தமிழ் நுகர்வோரை மாத்திரம் எதிர்பார்த்து, வியாபார கருமங்களை ஆற்றுபவையாவும் காணப்படுகின்றன. அதிக நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் மக்கள், அரிசி ஆலைகள் அமைத்து வியாபாரத்தை விருத்திசெய்யும் விருப்பிருந்தும், மூலதனம் இன்மையால் தமது நெல்லை அறாவிலைக்கு விற்று வருகின்றனர்.

**புலம்பெயர் தமிழர்களால் வடக்கு கிழக்கில் பொருளாதாரத்தை முன்னேற்ற உதவ முடியும்**

புலம்பெயர் தமிழ் உறவுகளினுடைய உதவிகள் இலங்கைத் தமிழர்களின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஓர் முக்கியமான சாதகமான காரணியாகவுள்ளது. கடந்த மூன்று தசாப் தங்களாக தொடர் இடப்பெயர்வுகளையும், இழப்புகளையும் சந்தித்த தமிழினம், மீளவும் தலைதூக்கி நிமிர்வதற்கு புலம்பெயர் தமிழர் உதவிகள் இன்றியமையாத ஒன்றாக அமைந்தன. 2009 இற்கு பின்னரான காலப்பகுதியில், புலம்பெயர் தமிழர்கள் வடக்கு கிழக்கில் காணிகளில் அதிகம் முதலிடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய முதலீடுகள் சில சந்தர்ப்பங்களில், இலங்கைவாழ் தமிழர்களுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அதிக முலதனம் உள்ள புலப்பெயர் உறவுகள், வடக்கு கிழக்கில் கைத்தொழிற்சாலைகளை அல்லது பெரிய வணிக நிறுவனங்களை அமைப்ப தற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான முதலீடுகள் இலங்கைவாழ் தமிழர்களுக்கும் நன்மை பயக்கக்கூடியவை. புலம்பெயர் உறவுகள் தமது உறவுகளுக்கு மாதாந்த உதவிகளை வழங்கும் போக்கு, பரவலாகக் காணப்படுகின்றது, மாறாக தமது உறவுகளின் நிலையான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் தொழில் முயற்சிகளுக்கான உதவிகள் மேலும் பயனுள்ளதாக அமையும்.



வேலையில்லப் பிரச்சினை தமிழ் இளைஞர் யுவதிகள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது. அதிலும் பட்டதாரிகள் பட்டம் பெற்ற பின்னர் மத்திய அல்லது மாகாண அரசின் கீழ் நியமனம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள பல வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது. கோழிமேய்த்தாலும் கவர்மென்டு வேலை தான் வேண்டும் என்ற மன நிலையிலுள்ள மக்கள், தனியார்துறை நோக்கிச் செல்லத் தயக்கம் காட்டுவது வேலையில்லாப் பிரச்சினையை மேலும் அதிகரிப்பதாக உள்ளது.

தமிழ்ப் புத்திஜீவிகளினுடைய வெளியேற்றமும் தமிழர் பொருளாதாரத்தைப் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது.


மிகவேகமாக மாறிவரும், நவீனத்துவமடையும் உலகில், தமிழர் பொருளாதாரம், பொருளாதார வல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்று சரியான பாதையில் வழிநடத்தப்பட வேண்டும்.

வடக்குக் கிழக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும், மத்திய, மாகாண அரசுகள் அது குறித்து அதிககவனம் செலுத்தாதுள்ளன. தமிழர் களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வொன்று கிடைக்க வேண்டிய அதேவேளையில், தமிழர்களுடைய பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் என்பனவும் முன்னேற்றமடைய வேண்டும்.

அவ்வாறான முன்னேற்றம் தான், தமிழர் தரப்பில் ஓர் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்ததும். தமிழ் மக் கள் பிரதிநிதிகள் எப்பொழுதுமே அரசியல் தீர்வு தொடர்பான கலந்துரையாடல்களோடு மட்டும் தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாது, பொருளாதார, கல்வி, சுகாதார முன்னேற்றங்களுக்கான முயற்சிகளையும் மேற்கொள்வது காலத்தின் கட்டாயம் ஆகும்.

*(செயலிழந்து போயுள்ள காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைப் பகுதிகளது படங்களே கட்டுரையில் பிரசுரமாகியுள்ளன.)*





# வாசகர் திருமுகம்

## கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் மறுக்கப்படல் தகுமோ?

பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாவதால், மாணவர்களும் பெற்றோர்களும் படும்பாடு சொல்லுந்தரமன்று. இந்த இடர்ப்பாடுகளை அவர்கள் வெளியில் சொல்ல முடியாதவர்களாக இருப்பதாகவே தோன்றுகிறது. காலையில் மாணவர்களும், பெற்றோர்களும் ஆசிரியர்களும் அனுபவிக்கும் பரபரப்பு, களிப்பு, பதற்றம் என்பவை இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. (Break fast is the main meal of the day) என்று பாடப்புத்தகம் கற்பிக்கிறது. ஆனால் பெரும்பாலான மாணவர்கள் காலையில் சாப்பிடாமலேயே பாடசாலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் அனுபவிக்கும் இடர்ப்பாடுகளை இங்கு தொட்டுக்காட்ட முடியுமே தவிர, புட்டுக் காட்ட முடியாது.

ஒரு திட்டத்தைச் செயற்படுத்தும் போது அந்தத் திட்டத்தின் பிரதான பயனாளிகளின் அபிப்பிராயம் பெறப்படுதல் அவசியம். மேற்படி திட்டத்தில் பெற்றோர், மாணவர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கப் போதிய கால அவகாசம் வழங்கப்படவில்லை. நான்கு கண்ணாடிச் சுவர்களுக்கு மத்தியில் இருந்து நான்குபேர் எடுக்கும் தீர்மானத்தை, இலட்சக்கணக்கான மாணவர் மீதும், பெற்றோர் மீதும் ஆசிரியர்கள் மீதும், சுற்றுநிருபமாக மாற்றித் திணிக்க முடியாது. இதுவும் ஒருவகையில் சர்வாதிகாரமே. மாகாணக் கல்வி அமைச்சைச் சேர்ந்தோர், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி போல நடந்து கொள்ள முடியாது. இது வாக்களித்த மக்களின் கருத்துச் சுதந்திரத்தைப் புறக்கணிப்பதாகும்.

மக்களுக்கு தமது கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் கிடையாதா? அப்படியானால் இது ஜனநாயக நாடு தானா? என்ற கேள்வி எழுகிறது. எனவே பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தை மறுபரிசீலனை செய்வதே மாகாணக் கல்வி அமைச்சின் அவசர அவசிய பணியாகும். செய்வார்களா?

*விஸ்வாஸ், வல்வெட்டித்துறை*

## வீதி விளக்குகள் ஒளிர வகை செய்யப்படுமா?

கந்தரோடை, ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள கந்தரோடை வீதியின் வீதி விளக்குகள் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக ஒளிர்வதில்லை. இது குறித்து முறைப்பாடு செய்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. திருட்டுக்களும் திருட்டு முயற்சிகளும் அடிக்கடி அரங்கேறும் குறித்த பகுதியில், இது திருடர்களுக்கு, வாய்ப்பாக அமைந்து விடுமென மக்கள் அச்சமடைந்துள்ளனர். பீதியுடன் இரவுப்பொழுதைக் கழிக்கும் இந்தப்பகுதி மக்களுக்கு விடிவே இல்லையா? இது சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு.

*க.கணேசவேல், கந்தரோடை*



வாங்கம்மா வாங்க இளநீரை வாங்குங்களம்மா...
கோக் குடிச்சா சுகர் வரும்... இளநீரை குடிச்சா
இளமை திரும்பி வரும்

எங்க, வீட்டுக்குள்ள திருடன்
வந்துட்டான். பொலிஸுக்கு போன் போடுங்க



விடடீ! அவனாவது திருடீட்டுத்தான் போவான். அவங்க
வந்தா வீட்டை கொளுத்திடுவாங்க!

# தல57 மிரட்டும் முதற்பார்வை கட்டவுட் மற்றும் தலைப்பு

அஜித்தின் நடிப்பில் இந்த வருடத்தின் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கும் படம் தல57. இந்தப் படத்தின் முதற்பார்வை கட்டவுட் தற்போது வெளியாகியுள்ளது. இந்த கட்டவுட்களில் அஜித் சட்டையில்லாமல் உடம்பை முறுக்கேற்றி வைத்துள்ளது போல் செய்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் படத்துக்கு விவே கம் என்று தலைப்பு வைத்துள்ளனர். இந்த படத்தில் அஜித் ஒரு உளவுத்துறை பொலிஸ் அதிகாரியாக நடித்துள்ளார். இந்தப் படம் 2016இல் தொடங்கி படப்பிடிப்பு நீண்டநாள்களாக இடம்பெற்று வருகிறது. இன்னும் ஒரு மாதத்துக்குள் முழு படப்பிடிப்பும் முடிந்து விடும் என்று தகவல் கூறுகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் படத்தை ரம்மான் நாளன்று வெளியிட முடிவு செய்துள்ளது படக்குழு என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




காற்றின் நண்பன்

எல்லாத்தையும்
சொல்லுபவர்களைவிட
எதையும்
சொல்லாதவர்களுக்கே
மதிப்பு அதிகம்.

19 173 74



மீன் குழம்பு
செய்வது எப்படி?
தேவையான பொருள்கள்...
மீன் அரைகிலோ
புளி கொஞ்சம்
தக்காளி 3
சின்ன வெங்காயம் 4
ஒரு பொலிஸ்
பொலிஸ் எதுக்கு...?
அடுப்பு பத்தவைக்க...!
பொலிஸ்னா சும்மாவா! நெருப்படா...!




நயாகரா நீர் வீழ்ச்சி
அருகே சுற்றுலாப்
பயணிகளிடம்... ஒரு
வழிகாட்டி சொல்கிறார்...
"இதுவே உலகின் மிகப் பெரிய
அருவி..
இதன் ஓசை அளவிட முடியாதது...
ஒரே நேரத்தில் 20 அதிவேக
விமானங்கள் எழுப்பும்
ஒலியைவிட அதிகமானது...
அம்மணிகளே..!
சற்று அமைதியாக இருங்கள்..
அருவியின் ஓசையை நன்கு
கேட்கலாம்...!"

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 5 | | | |
| | 5 | 2 | | 7 | | 4 | 3 | |
| 7 | | | | | | | | 1 |
| | | 6 | 4 | | 7 | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| | | 4 | 8 | | 1 | 7 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 8 | 3 | | 1 | | 6 | 9 | |
| | | | 5 | | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | 3 | 6 | 8 | 1 | 9 | 5 |
| 1 | 3 | 5 | 2 | 4 | 9 | 7 | 8 | 6 |
| 9 | 6 | 8 | 1 | 5 | 7 | 2 | 4 | 3 |
| 6 | 8 | 2 | 4 | 9 | 3 | 5 | 1 | 7 |
| 3 | 5 | 1 | 8 | 7 | 2 | 4 | 6 | 9 |
| 4 | 7 | 9 | 6 | 1 | 5 | 8 | 3 | 2 |
| 7 | 1 | 4 | 5 | 3 | 6 | 9 | 2 | 8 |
| 8 | 9 | 3 | 7 | 2 | 1 | 6 | 5 | 4 |
| 5 | 2 | 6 | 9 | 8 | 4 | 3 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**மேடம்:** சிறு செயலும் உங்களுக்கு கடினமாகத் தோன்றும். குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பெற்றோர் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**இடபம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். நண்பரிடம் சந்தோசத்தை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் வந்து சேரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்புக்கான நற்புலன் கிடைக்கும். உங்களின் திறமையைக் கண்டு அனைவரும் வியப்பர். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். குடும்பத் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** குடும்ப பிரச்சினையை பிறரிடம் சொல்ல வேண்டாம். கடின உழைப்பால் பணி இலக்கு நிறைவேறும். பணவரவு சுமாராக இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**சிங்கம்:** அடுத்தவர் மீது அதிக அக்கறை வேண்டாம். பணிகளை பொறுப்புடன் நிறைவேற்று வீர்கள். தொழில், வியாபாரத்தில், மந்த நிலை மறைந்து, லாபம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.

**கன்னி:** சமூகத்தில் மதிப்பு மிக்கவராகத் திகழ்வீர்கள். நண்பரிடம் கேட்ட உதவி எளிதாகக் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**துலாம்:** நண்பரிடம் குடும்ப விடயங்களைப் பேசுவீர்கள். பிரச்சினைக்கான ஆலோசனை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும். வெகுநாள் தேடிய பொருள், புதிய முயற்சியால் கிடைக்கும்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை உடனடியாகச் சரி செய்வது நல்லது. சுமாரான வருமானம் கிடைக்கும்.

**தனுசு:** வழக்கத்துக்கு மாறான பணியில் ஈடுபட நேரிடலாம். செயல் நிறைவேற விடா முயற்சிதேவைப்படும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

**மகரம்:** செயலில் நேர்மை நிறைந்திருக்கும். பலரும் பாராட்டும் விதத்தில் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

**கும்பம்:** மனக்குழப்பத்தில் இருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவீர்கள். லாபம் சீராக இருக்கும். அரசு வகையில் நன்மை உண்டாகும்.

**மீனம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபவிடய பேச்சு நடக்கும்.

## மருத்துவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடுமுழுவதும் இன்று காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை மருத்துவர்கள் அடையாள பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்தது.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறும் கோருகிறோம். நேற்று மாலை கூடிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்க நிறைவேற்றுக் குழு, பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதாகத் தீர் மானித்தது என்று சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4,5,7)

## கருத்துப் பகிர்வு

யாழ்ப்பாணம், ஜன.3

'சமகால ஆட்சியும் மக்கள் திரள் போராட்டத் தின் அவசியமும்' ஒரு கருத்துப் பகிர்வு நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமைமாலை 4 மணிக்கு இல.361, ஸ்ரான்லி வீதியில் உள்ள டீ.எம்.ஐ. கல்வி நிலையத்தில் ஏ.சி.ஜோர்ச் தலைமை யில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 இல் பிறந்த புனர்பூசம் நட்சத்திரம் மிதுனராசி கம்பியூட்டர் கிராபிக்ஸ் (மீடியா) சொந்தமாக பணி செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை

தொடர்பு: 077 905 8615 / 077 6467131

### வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

**கோப்பாய் எரிபொருள் நிலையத்தில் பம் பவுண்டேசன், பம் கணப்பி, பெயின்ற் வேலை, அலுமினிய றாக்கை, லைற் வேலை செய்வதற்கான கேள்வி கோரல்**

மேற்படி நிலையத்தின் வேலைகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பப் படிவங்களைத் தலைமைக்கந்தோரில் வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி **10.02.2017** ஆகும். (21.01.2017 ஆம் திகதிய இயக்குநர் சபை தீர்மானப்படி)

**பொதுமுகாமையாளர்,**
**வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**

### காயத்திரி திருமண சேவை

சுவிஸில் 25 வருடமாக இயங்கி வரும் எமது ஸ்தாபனத்தின் கிளை நிறுவனம் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட உள் ளது. உங்களது பிள்ளைகளின் திருமண ஒழுங்குகளை சிறந்த முறையில் தெரிவு செய்ய எம்மை நாடுங்கள்.

**தொலைபேசி இலக்கங்கள்:**
(0041)615544242 (சுவிஸ்)
(0041)768185443 (சுவிஸ்)
(0094)776856072 (ஸ்ரீலங்கா)

### அனெக்ஸ் வாடகைக்கு

நல்லூர் கோயில் வீதிக்கு அண்மையில் 2 பேருக்கு மட்டும் அளவான சிறிய அனெக்ஸ் உண்டு. பி.ப 6 மணிக்குபின் 011 2362 611

### பெயர்மாற்றம்

பொந்திலேன், பண்டத்தரிப்பைச் சேர்ந்த **ஜெசிக்கா அணோதினி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **ஜெசிக்கா அணோதினி அல்போன்சஸ்** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

ஜெசிக்கா அணோதினி அல்போன்சஸ்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்




கொழும்பு B.M.I.C.H இல் 31.01.2017 இல் நடை பெற்ற பட்டமளிப்பு விழாவில் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழிமூலம் முதலாவது ஆசிரிய மாணவியாக, இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் தேசிய கல்வி நிறுவக கல்வி இளமாணிப்பட்டத்தினை பெற்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியின் முதலாம் அணி மாணவியும் யாழ் ஒஸ்மானியக்கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியையும், இலங்கை பூராகவும் வெளிவரும் தமிழ், ஆங்கில "விஞ்ஞான ஊக்கி" நூல்களின் நூலாசிரியருமாகிய

**திருமதி யோகேந்திரி சுகுந்தன்**
**Dip in Teach(Merit), BEd(Hons) 2nd upper)**

அவர்களை மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று இன்னும் பல நூல்களை எமது மாணவச் செல்வங்களிற்காக எல்லா துறைகளிலும் வெளியிட்டு சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**யாழ் புத்தகசாலை**
22,கன்னாதிட்டி சந்தி,யாழ்ப்பாணம்
கனகபுரம் விளையாட்டுக்கழகச் சந்தி, கனகபுரம்,கிளிநொச்சி.

மேற்படி நூல் ஆசிரியையின் தரம் 6 ஆங்கில மொழிமூலம் சுகாதாரம் கற்கும் மாணவர்களுக்கான தமிழ்/ஆங்கில விளக்கத்துடன் கூடிய இருமொழிக்கற்கை நூலும்(Bi lingual -Health) வெளிவந்து விற்பனையாகின்றது.

## வேலணை பிரதேச சபை
## புங்குடுதீவு முற்றவெளி சந்தையில் அமைந்துள்ள கடைகளை நீண்ட காலக்குத்தகைக்கு வழங்குவதற்கான
# கேள்வி அறிவித்தல் - 2017

வேலணை பிரதேச எல்லைக்குட்பட்ட புங்குடுதீவு முற்றவெளி சந்தையில் அமைந்துள்ள கீழ்வரும் கடைகளினை 01.03.2017 ஆம் திகதியிலிருந்து நீண்ட காலகுத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 06.02.2017 தொடக்கம் 20.02.2017 நண்பகல் 12.00 மணிவரையான அலுவலக நேரம்.
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித்திகதி - 22.02.2017 பிற்பகல் 1.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி - 22.02.2017 பிற்பகல் 1.30 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் - தலைமை அலுவலகம் பிரதேசசபை, வேலணை.

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்வி படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | கடை இல-01 | 78000 | 7800 | 2000.00 |
| 02 | கடை இல - 02 | 78000 | 7800 | 2000.00 |
| 03 | கடை இல - 03 | 78000 | 7800 | 2000.00 |
| 04 | கடை இல - 04 | 78000 | 7800 | 2000.00 |
| 05 | கடை இல - 05 கன்ரீன் | 72000 | 7200 | 2000.00 |
| 06 | கடை இல - 06 | 42000 | 4200 | 2000.00 |
| 07 | கடை இல - 07 | 42000 | 4200 | 2000.00 |

### நிபந்தனைகள்:

01) விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.

02) கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை/செல்லுபடியான கடவுச்சீட்டு / செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.

03) கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர் பிரதேசசபை வேலணை எனும் முகவரிக்கு அரக்கு முத்திரை யிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 22.02.2017 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

04) ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக் முடியும்

05) மாதாந்தக்கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்குள் செலுத்திப்பற்றுச் சிட்டினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக்கட்டணப் பணமாக10% அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப்பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்த வேண்டும்.

06) கேள்விப்படிவக்கட்டணம் கேள்விதொகை என்பவற்றுக்கு15%(vat) பெறுமதி சேர்வரி செலுத்தப்படல் வேண்டும்

07) கேள்விச் சித்திகரராகத் தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டுபிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்து கொள்ள வேண்டும்.

08) சித்திகரர் குத்தகைதாரர் வேலணை பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதி முறைகளுக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.

09) சித்திகரர் குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக 03 மாதக்கடை வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்த வேண்டும்.

10) சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

11) மேலதிக விவரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**அ.குருநாதன்.**
**செயலாளர்,**
**பிரதேசசபை வேலணை.**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# யோகாசனம்

**சூரிய நமஸ்காரம்**

முள் எலும்பு உபாதைகள் உள்ளவர்களும், எலும்பு முறிந்தவர்களும் இந்த அப்பியாசங்களை தவிர்ப்பது நல்லது.

**ஆசனம் செய்யும் முறைகள்**

**பயிற்சி-5**

வலது காலையும், இடதுக் காலையும் பின்னோக்கிச் சேர்த்து நீட்டி (குதிகால் மேலே உயர்ந்து) கைளை மட்டும் அப்படியே வைத்திருக்கவும். முகம் தரையைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதாவது உடலின் மற்ற பாகங்கள் தரைக்கு மேலே தூக்கி நிற்க, உள்ளங் கையையும், பாதங்களின் விரல்களும் மட்டுமே தரையைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஒரு முக்கோண அமைப்பு வர வேண்டும்.

உடலின் பாரம் முழுவதும் கைகளின் மீது விழ வேண்டும். (அதற்காக முக்க வேண்டாம்) எந்த ஒரு பாகமும் வளையலாகாது (முட்டிகள் உட்பட)

இந்த ஆசன நிலை முழுவதும் மூச்சை தம் கட்டி உள்ளேயே வைத்திருப்பது அவசியம்.

**பயிற்சி-6**

அடுத்தபடி முழங்கைகளையும், முழங்கால்களையும் சற்றே கீழிறக்கிய நிலையில் பிருஷ்டப் பகுதி மட்டும் தரையிலிருந்து மேலே தூக்கி நிற்கட்டும்.உள்ளங்கை முதலில் மற்ற பாகங்கள் தரையைத் லேசாகத் தொட்டுக் கொண்டிருக்கும்படி வைக்கவும். இந்த நிலையில் மூச்சை நன்கு வெளியே விட வேண்டும்.

**பயிற்சி-7**


ஏழாவது நிலையாக மூச்சை நன்கு உள்ளிழுத்தவாறே தலையையும், மார்பையும் மேலே நிமிர்த்தவும். தலையை கூடிய வரை பின்னே வளைக்கவும். உடலின் கனத்தை உள்ளங்கைகளிலும், முழங்காலிலும் படும்படி அமைக்கவும்

**பயிற்சி-8**

அடுத்தபடி, கை கால்கள் முந்திய நிலையில் அப்படியே இருத்தி வைத்து, பிருஷ்ட பாகத்தை மட்டும் முடிந்த வரை மேலே உயர்த்திடுங்கள். அதை மேலே உயர்த் தும்போது, குதிகால்களை நன்கு தரையில் அழுத்தி வைத்துக் கொள்க. முக வாய்க்கட்டையை மார்பை ஒட்டி வைத்துக் கொள்க. தலையை உட்புறமாகத் தொங்க விடுங்கள். முழங்கால்கள் (முட்டிகள்) சற்றும் வளையலாகாது. இந்த நிலையில் மூச்சை வெளி விடாமல் தம் கட்டி உள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இரு நொடிகள் இந்நிலையில் (முக்கோணம் போல) நிற்கவும்

**பயிற்சி-9**

அடுத்ததாக, இடது காலை




மட்டும் முன் வைத்து இரண்டு கைகளுக்கு நடுவில் தரையில் வைத்து விடுங்கள். வலதுக்காலை பின்னால் நன்கு (முட்டி மடியாமல்) நீட்ட வேண்டும். இந்தப் பயிற்சி 9 நிலையிலும்மூச்சை தம் பிடித்து உள்ளேயேமார்புவிம்ம (வெளியேவிடாமல்) வைத்திருக்க வேண்டும்.

(தொடரும்)




## மசாஜ் கருவி

தலை, உடல் மசாஜ் கருவி அறிமுகமாகியுள்ளது. ஒரே கருவியில் பல்வேறு மசாஜ் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும். இந்தக் கருவி 400 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.



## தலையலங்காரம்

1 படத்தில் காட்டியவாறு இரண்டாகப் பிரித்துக் கட்டுக.

2 முதல் கட்டிய தலை முடியை படத்தில் காட்டியவாறு வூல் பாண்டுக்குள் நுழைத்து எடுத்துக் கொள்க.

3 அதனை இரண்டாகப் பிரிக்குக.

4 மீதி கீழே உள்ள முடியை இரண்டாகச் சுருட்டி கிளிப் செய்க.

5,6,7,8 இதே படிமுறையை கீழ் பகுதி தலைமுடிக்கும் செய்க.

## அதிக நன்மைகள் நிறைந்த சிவப்பு நிறக் கொய்யா



கொய்யா பழத்தில் இரண்டு வகைகள் உள்ளது. அவை தான் சிவப்பு மற்றும் வெள்ளை நிறமுள்ள கொய்யாப் பழங்கள்.

இந்த இரண்டு வகை நிறமுள்ள கொய்யாப் பழங்களும், நிறத்தில் மட்டுமல்ல, அதனுடைய மருத்துவ நன்மைகளிலும் பல வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

சிவப்பு நிறத்தில் இருக்கும் கொய்யாப் பழத்தில், கரட் மற்றும் தக்காளிப் பழத்தில் இருக்கும் கரோட்டீனாய்டு என்னும் நிறமி அதிகம் உள்ளது. மேலும் இதில் நீர்ச்சத்து, விற்றமின் சி போன்ற சத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளது.

சிவப்பு கொய்யாப் பழமானது, நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற அற்புதமான ஒரு பழமாகும். அவர்கள் இந்த கொய்யாவை அடிக்கடி சாப்பிட்டு வந்தால், டைப்-2 நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்பும் குறைகிறது.

சிவப்பு நிறமுள்ள கொய்யாப் பழத்தில் விற்றமின் சி அதிகமாக உள்ளதால், இது நமது உடம்பில் இருக்கும் பல்வேறு வைரஸ் மற்றும் பக்ரீரியாக்களை எதிர்த்துப் போராடி, நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலிமையுடன் பாதுகாக்கிறது.

நமது கண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விற்றமின் ஏ சத்துக்கள் சிவப்பு கொய்யாப் பழத்தில் அதிகமாக உள்ளது. எனவே இந்தப் பழத்தை தினமும் ஒன்று சாப்பிட்டு வந்தால், கண்பார்வை பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்கிறது.

சிவப்பு கொய்யாவில் உள்ள ஆன்டி-மைக்ரோபியல் தன்மை, நமது வயிற்றில் ஏற்படும் பிரச்சினைகளை தடுத்து, வயிற்றுப்போக்கு மற்றும் வயிற்று வலியைக் குறைத்து, நமது உடலில் நீர்ச்சத்தைத் தக்க வைக்கிறது.

அன்டி-ஒக்ஸிடன்ட்டுகள் இந்த சிவப்பு நிறமுள்ள கொய்யாப் பழத்தில் அதிகமாக உள்ளது. எனவே அந்தப் பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால், நமது உடம்பில் புற்றுநோய் செல்களை எதிர்த்துப் போராடி, புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கிறது.

## கண்ணீர் அஞ்சலி



மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாக்கள் சபையின் ஆரம்பகால உறுப்பினரும் தொண்டுகளும் திருப்பணி வேலைகளிலும் பங்கு பற்றிய மானிப்பாயைச் சேர்ந்த


**கயிலாயபிள்ளை சுந்தரலிங்கம்**

இலண்டனில் இறைபதம் அடைந்து விட்டார் என்பதனை அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி விநாயகர் துணை நிற்பாராக. இவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆலய தர்மகர்த்தா சபை சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

**தர்மகர்த்தாக்கள் சபை**
**மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவரும் பாடசாலையின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றிய

**வைத்திய கலாநிதி**
**சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்**
**(கடவுள்)**
**(ஓய்வுநிலை வைத்தியப் பொறுப்பதிகாரி)**

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு துயரமடைகின்றோம். அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினரதும் பிரதேச மக்களினதும் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**
**சங்கத்தானை, சாவகச்சேரி.** பாடசாலை சமூகம்

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நடராசா (செட்டியார்)

நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா (செட்டியார்) நேற்று (02.02.2017 ) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி மார் கண்டு தம்பதியரின் மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், செந்தூரன், தனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசிகா வின் அன்பு மாமனும், காலஞ்சென்றவரான மகேந்திரன் மற்றும் செல்வராசா, கனகேஸ்வரி, மகாலிங்கம், கனகராசா ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2017) வெள்ளிக் கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி கிழக்கு, மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(j/9516) (10,19)

## ஐயாத்துரை சண்முகராசா

### (கருணாநிதி மில் உரிமையாளர்)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1939.07.26 | 2017.02.02 |

புங்குடுதீவு 8, ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, வட்டக்கச்சி இராமநாதபுரம். 5Unit No. 294 ஐ வதிவிடமாவும் கொண்ட ஐயாத்துரை சண்முகராசா நேற்று (02.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை - பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - நல்லதங்கம் தம்பதியரின் மருமகனும் அரியமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் சக்தியவாணி, கண்ணதாசன், விக்னேஸ்வரன், சத்தியபாமா, சத்தியராஜ் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 0652 308**

### புதிய...

உறுப்பினர்களிடம் நேரடியாகத் - தெளிவாகத் தெரிவித்துள்ளார். கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாலோசனைச் செயலணியின் 11 உறுப்பினர்களுக்கும் இடையேயான சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போதே மேற்படி விடயத்தை அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்தார்.

நல்லிணக்கச் செயலணி நிலைமாறு கால நீதிச் செயன்முறை தொடர்பில் நாடு முழுவதிலும் மக்களிடம் கருத்துக்களைக் கேட்டறிந்து அறிக்கை தயாரித்தது. கடந்த ஆண்டு நவம் பர் மாதம் 17ஆம் திகதி அறிக்கை தயாரிக்கப்பட்டாலும், அரச தலைவர் மைத்திரிபாலவிடம் கையளிப்பதில் நீண்ட இழுபறி நிலவியது. அறிக்கையை கையேற்காவிடின் அது பகிரங்கப்படுத்தப்படும் என்று செயலணியினர் தெரிவித்தனர். பின்னர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிக்கையை கையேற்பதற்கு நேரத்தை ஒதுக்கினார்.

ஜனவரி 3ஆம் திகதி அறிக்கை கையளிப்புக்கு அரச தலைவர் நேரம் வழங்கியிருந்தாலும் திடீரென அந்த நிகழ்வில் பங்கெடுப்பதிலிருந்து மைத்திரிபால தவிர்த்திருந்தார். இருப்பினும் அறிக்கை கையளிப்பு திட்டமிட்ட ரீதியில் நடைபெற்றது. இந்த அறிக்கையில், இலங்கையின் போர்க் குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இது அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்வலையைத் தோற்றுவித்திருந்தது.

அறிக்கை வெளியிடப்பட்டு 26 நாள்களின் பின்னர், அந்தச் செயலணியை அரச தலைவர் மைத்திரிபால சந்தித்துள்ளார். சந்திப்பில், அறிக்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இதன் பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த அரச தலைவர் மைத்திரிபால, புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிக்கே தற்போது முக்கியத்துவம் வழங்கப்படும். அதன் பின்னர் நிலைமாறு காலநீதி செயன் முறை அனைத்து சமூகத்தினரையும் அரவணைத்து முன்கொண்டு செல்லப்படும் - என்றார். (வ-5)

### சுமந்திரன்...

கடந்த மாதம் 13 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்ததாகத் தெரிவிக்கப்பட்டு 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்குச் சிறப்பு அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இளைஞர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று நடைபெற்றது. இதன்போது எதிரிசார்பில் மன்றில் சுமந்திரன் முன்னிலையாகியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் வாகனத்துடன் சிறப்பு அதிரடிப் படையினரின் வாகனம் பாதுகாப்பு வழங்கிச் சென்றது. அத்துடன் நீதிமன்றச் சுற்றாடலிலும் வழமையை விட அதிகளவிலான பொலிஸார் காணப்பட்டனர். (த-5-37)













## மரண அறிவித்தல்

# கிருஸ்ணர் சிவபாக்கியன்

### (இளைப்பாறிய புகையிரத நிலைய ஊழியர்)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், பிறவுன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணர் சிவபாக்கியன் நேற்று (02.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர்-பார்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் லட்சுமியின் அன்புக் கணவரும் சிவகுமார்(ராசன்), சிவராசா (கண்ணன்), சாந்தகுமாரி (சாந்தி), சிறிகந்தராசா (சிறி),ரஞ்சன், வசந்தகுமாரி (பப்பி) ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.02.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிறவுன் வீதி,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## போர்க்குற்ற...

பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் சிறப்பாக இடம்பெறுகின்றன. எதிர்க்கட்சியினரும் சில தீவிரவாதப் போக்குடையவர்களும் எதிர்க்கின்ற போதிலும், பெரும்பான்மையினத்தவர்களின் ஆதரவுடன் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நல்லிணக்கம் என்பது நீண்டகாலப் பயணம்.

புதிய அரசமைப்பை தற்போது கொண்டு வருவதே அவசரத் தேவை. அதன் பின்னர் காணாமற்போனோர் குறித்த அலுவலகம் அமைக்கப்பட வேண்டும். இவை இரண்டும் ஏற்படுத்தப்பட்டால் போர்க் குற்றங்களை விசாரணை செய்வதற்கான நீதிமன்றங்களுக்கான அவசியம் காணப்படாது.

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாலோசனைச் செயலணி, கலப்பு நீதிமன்றத்துக்கு பரிந்துரைத்தமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த சந்திரிக்கா, நல்லிணக்கப் பொறிமுறைகள் குறித்த செயலணிக்குக் கருத்துத் தெரிவிப்பதற்கான அதிகாரங்கள் இல்லை. பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்று மக்களிடம் சமர்ப்பிப்பதற்காக மாத்திரமே அந்தக் குழு ஏற்படுத்தப்பட்டது. அவர்களின் பணி அது மாத்திரமே. அவர்கள் தமது சொந்தக் கருத்தையும் தமது அறிக்கையில் சேர்த்துள்ளனர் என்று நான் கருதுகின்றேன்.

மேலும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு உயிர்கொடுக்க விரும்புவர்கள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நெருக்கமாகயிருந்தவாறு முன்னாள் அரச தலைவர் மகிந்தவுடன் பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர். நான் அவர்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். அவர்கள் தாங்கள் கட்சியைப் பிளவுபடுத்தப் போவதில்லை எனத் தெரிவிக்கும் அதேவேளை, ராஜபக்ச குடும்பத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொள்ள வேண்டும் எனக் கோரி வருகின்றனர் - என்று அந்தச் செவ்வியில் சந்திரிகா தெரிவித்தார். (வ-5)

## 3ஆவது நாள்...

விமானப் படையினர் வேலிகள் போடுவதற்கு நேற்றுக் காலை முயற்சித்தபோது மக்களின் எதிர்ப்பையடுத்து அவர்கள் தமது நடவடிக்கைகளை கைவிட்டு பின்வாங்கினர்.

பிலக்குடியிருப்பு மக்கள் கடந்த 31ஆம் திகதி தமது காணிகள் அடையாளப்படுத்துவதற்கு அரச அதிகாரிகளால் அழைப்பு விடுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டனர். ஏமாற்றமடைந்த மக்கள், தமது சொந்தக் காணிக்குள் கால் வைக்கும் வரையில் அங்கிருந்து அகல மாட்டோம் எனத் தெரிவித்துப் போராட்டத்தில் குதித்தனர். இரவிரவாக போராட்டம் நடத்தினர். நேற்றுமுன்தினம் இரவு பாதுகாப்புத் தரப்பினர், போராட்டம் நடத்தப்படும் இடத்துக்கான மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் விநியோகங்களை நிறுத்திப் போராட்டக்காரர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டனர். மக்கள் அசராமல் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் அங்கு சென்று மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு கால அவகாசம் கோரினர். மக்கள் ஒரேயடியாக மறுதலித்து விட்டனர். போராட்டத்தைத் தொடர்ந்தனர். நேற்றுமுன்தினம் இரவு படையினர் மின்சாரத்தை நிறுத்தவில்லை. மக்கள் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் வீதியிலேயே பாய் விரித்துப் படுத்துறங்கினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை நேற்றுக் காலையும் மக்கள் பிரதிநிதிகள் வந்து சந்தித்தனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உணவு உள்ளிட்ட பொருள்கள் பல்வேறு தரப்புக்களாலும் நேற்று வழங்கப்பட்டன. அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் பிலக்குடியிருப்புப் போராட்டக்காரர்களுக்கு நேற்று ஆதரவு வழங்கும் வகையில், போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்திருந்தனர்.

*பாதுகாப்புத் தரப்பினருக்கு எச்சரிக்கை*

போராட்டம் நடத்தும் மக்களின் காணிகளுக்கு வேலிகள் போடும் முயற்சியில் பாதுகாப்புத் தரப்பினர் நேற்றுக் காலை ஈடுபட்டனர். மக்கள் அணிதிரண்டு எதிர்ப்புத் தெரிவித்தனர். தமது எதிர்ப்பை மீறிச் செயற்பட்டால் நேரடியாக மோத வேண்டிய நிலை வரும் என்று அவர்கள் எச்சரித்தனர். இதனையடுத்துப் பாதுகாப்புத் தரப்பினர் தமது முயற்சிகளைக் கைவிட்டு உடனடியாகவே பின்வாங்கினர்.

*பள்ளிக் குழந்தைகளும் களத்தில்*

பிலவுக்குடியிருப்பு மக்களின் பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்லாமல் போராட்டக் களத்திலேயே இருந்தனர். தங்களுக்கு ஒரு முடிவு கிடைக்காது விட்டால் திங்கட்கிழமையில் இருந்து பிலக்குடியிருப்பில் உள்ள 74 மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லாது இங்கு வருவார்கள். வீடு செல்லாது தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் எங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாது. வீடுகளில் விட்டு வரவும் முடியாது. எங்கள் நிலைத்தை ஆக்கிரமித்த அரசு, எங்கள் பிள்ளைகளில் கல்வியையும் பறிக்கின்றதா? என்று பிலக்குடியிருப்புப் பொது மக்கள் ஆவேசமாகத் தெரிவித்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகள் நேற்றுக் காலை 10 மணியளவில் பிலக்குடியிருப்புப் பகுதிக்கு வருகைதந்து உங்கள் போராட்டம் முடியும் வரை பிள்ளைகளை விடுதியில் விடுமாறும் தாங்கள் சகல விடயங்களை கவனிப்பதாகவும் தெரிவித்தனர். பல துன்பங்களுக்கும் மத்தியில் கூலி வேலை செய்து எங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கும் நிலையில் கூட அவர்களை விடுதியில் விடவில்லை. இந்த நிலையிலும் பிள்ளைகளை விடுதியில் விடமாட்டோம் என்று மக்கள் உறுதியாகத் தெரிவித்தனர்.

(வ-5-7)

## வடக்கு...

கணிப்புப் போராட்டத்தில் வடக்கு மாகாணம் முழுவதும் நேற்று ஈடுபட்டனர். இதனால் மக்கள் இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் சேவையின்றிப் பெரும் இடரை எதிர்கொண்டனர். போக்குவரத்துச் சபையினரின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நியாமற்றது - அர்த்தமற்றது என்று சாடியுள்ள வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன், கொழும்பு அரசின் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாகவும், போக்குவரத்துச் சபையினர் பணிக்கு விரைந்து திரும்பாவிடின் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என்றும் எச்சரித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பா.டெனீஸ்வரன், வவுனியாவில் புதிதாகத் திறக்கப்பட்ட மையப் பேருந்து நிலையத்தை இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும், தனியார் பேருந்து உரிமையாளர்களும் பயன்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உயர்மட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு சம்மதம் வெளியிட்டிருந்தனர்.

புதிய பேருந்து நிலையத்தைப் பயன்படுத்தக் கூடாது என்பதில் ஒரு சிலர் சுயநலமாகச் சிந்திக்கின்றனர். அவர்களுக்குத் துணை போகக்கூடிய வகையில் தொழிற் சங்கங்கள் செயற்படுகின்றன. முல்லைத்தீவில் தனியார் பேருந்தின் நடத்துநர் - சாரதிக்கும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நடத்துநர் - சாரதிக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. இதனால் வவுனியா பேருந்து நிலையத்தில் முரண்பாடு உருவானது. இதனைச் சாட்டாகப் பாவித்து, இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும், தனியார் பேருந்துக்கும் சம சேவை (50 இற்கு 50) வழங்கப்படவேண்டும் என்றும், வவுனியா பழைய பேருந்து நிலையத்தைப் பயன்படுத்தவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், தனியார் பேருந்துச் சேவைக்கு 60 வீதமும், அரச பேருந்துச் சேவைக்கு 40 வீதமுமே சேவை அளவு வழங்க முடியும். இதனை நான் மாற்ற முடியாது. வேண்டுமானால் இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற் சங்கத்தினர் நீதிமன்றம் சென்று அதனை மாற்றினால் அதனை நடைமுறைப்படுத்த நான் தயாராக இருக்கின்றேன்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்தை, பயணிகளை ஏற்றி இறக்கும் முனையமாக மாத்திரமே பயன்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. வவுனியா நகரின் நெரிசலைக் கருத்திற்கொண்டே புதிய பேருந்து நிலையம் தாண்டிக்குளத்தில் அமைக்கப்பட்டது. மீளவும் நகரை நெரிசல் ஆக்க முடியாது. புதிய பேருந்து நிலையத்தையே பயன்படுத்த வேண்டும்.

கொழும்பு அரசின் போக்குவரத்து அமைச்சரின் கவனத்துக்கு இதனைக் கொண்டு சென்றேன். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் பணிக்குத் திரும்ப வேண்டும். இல்லாவிடின் அவர்களை வேலையிலிருந்து நீக்கும் கடுமையான நடவடிக்கையைக் கூட தான் எடுப்பதற்குத் தயங்கமாட்டேன் என்று என்னிடம் குறிப்பிட்டார்.

பொதுப் போக்குவரத்துச் சேவை என்பது தனித்து இலாப நோக்கிலானது மட்டுமல்ல. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய துறை. தனியாராக இருந்தாலும் சரி, அரச பேருந்துச் சேவையாக இருந்தாலும் சரி மக்களுக்கு சேவை செய்கின்றோம் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றார். (து-5)

## பிரான்ஸ்...

ரிகளுக்கு பிரெஞ்சு அரச அதிபர் புத்தாண்டு வரவேற்பு விருந்துபசாரத்தை அளித்தார். இதில் பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் திலக் ரணவிராஜாவும் பங்கேற்றிருந்தார். அரச அதிபர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சார்பில், பிரெஞ்சு அரச தலைவருக்கு வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதித் தடையை நீக்குவதற்கும், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப் பெறுவதற்கும் இலங்கைக்கு பிரான்ஸ் அளித்து வரும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை பிரெஞ்சு அரச தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளதுடன், பன்னாட்டுச் சமூகத்துடன் இலங்கை மீண்டும் தொடர்புகளை வலுப்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதாகவும் குறிப்பிட்டார். (து-5)

## முதல்வரின்...

நேற்று நடைபெற்றது. இதில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்த நிகழ்வுக்கே பெரும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் வழமையாக அதிகரித்த பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை. முதலமைச்சரின் பிரத்தியேகப் பாதுகாப்புப் பொலிஸார் மாத்திரமே பாதுகாப்பு வழங்குவார்கள். ஆனால் நேற்றைய தினம் ஆயுதம் ஏந்திய 25 பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களிடமிருந்து கிளைமோர் குண்டும் கிளிநொச்சியில் மீட்கப்பட்டிருந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தவொரு அசம்பாவிதமும் நடந்துவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையுடன்தான் முதலமைச்சருக்கு அதிகரித்த பாதுகாப்பு வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. (து-5-35)

## இந்திய...

வரவு- செலவுத் திட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிதியமைச்சர் அருண் ஜேட்லியினால் சமர்ப்பிக்கப்பட்டது. இந்திய அயலுறவுத்துறை அமைச்சுக்கு 14 ஆயிரத்து 798 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில், அயலுறவுத்துறை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விடவும், 135 கோடி ரூபா அதிகமாகும்.

6 ஆயிரத்து 479.13 கோடி ரூபா, நாடுகளுக்கான உதவித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக, இலங்கைக்கு இந்த ஆண்டில் 125 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது. (து-5)

## முப்படைகளுக்கு...

பாதுகாப்பு அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்திலேயே மேற்படி விடயம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள முப்படையினரும், 2013ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். மக்கள் தமது காணிகளைச் சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். படையினரின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன.

இதன் தற்போதைய நிலை என்ன என்பது தொடர்பில் எதிர்வரும் 9ஆம் திகதி கலந்துரையாடப்படவுள்ளது. பிரதேச செயலாளர்கள் காணிச் சுவீகரிப்பின் முன்னேற்றம் தொடர்பில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கவுள்ளனர். முப்படையினரும் தற்போது யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள காணிகளின் விவரங்களும் இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த ஆண்டு விடுவிக்கப்படக் கூடிய காணிகள் தொடர்பிலும் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## 5 இந்திய...

அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இந்தியாவின் தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 5 மீனவர்கள் இழுவைப் படகில் வந்து, நெடுந்தீவுக் கடற்பரப்பில் தொழில் செய்து கொண்டிருந்தபோது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 5 மீனவர்களையும் காங்கேசன்துறைக்குக் கொண்டு வந்த கடற்படையினர் அவர்களை யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரிடம் கையளித்தனர். இவ்வாறு கையளிக்கப்பட்டவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

(து-5-8-101-106)

## டி.ஐ.ஜியின்...

பக்சவின் செயலகத்துக்கு அழைப்புகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவை அரச தலைவர் செயலகத்தின் எந்தப் பிரிவுக்கு, யாருக்கு மேற்கொள்ளப்பட்டன என்பது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக நீதிமன்றில் நேற்று அறிவிக்கப்பட்டது.

கொழும்பு மேலதிக நீதிமன்றில் நீதிவான் அனுர புத்ததாச முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான பிரதி சொலிஸ்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் அரச தலைவரின் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன். அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவின் இரு அதிகாரிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட அழைப்புகள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பில் முன்னாள் மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் இருவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றுக்கு அறிவித்தது.

ரக்பி விளையாட்டு வீரர் தாஜுதீன் கொல்லப்பட்ட சம்பவத்தை மறைக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் குற்றப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியும் இறுதியாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றியவருமான சுமித் பெரேரா ஆகியோருக்கு விளக்கமறியல் எதிர்வரும் 16ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது. (வ-4)



## தெரிந்து கொள்ள வேண்டியவை

1. கண்டங்களில் பெரியது ஆசியாக் கண்டம்.
2. கடல்களில் பெரியது பசுபிக் பெருங் கடல்.
3. தீவுகளில் பெரியது ஆஸ்திரேலியா தீவு.
4. சிகரங்களில் பெரியது எவரெஸ்ட் சிகரம்.
5. மலைகளில் பெரியது இமய மலை.
6. ஆறுகளில் பெரியது அமேசன் ஆறு.
7. ஏரிகளில் பெரியது காஸ்பியன் ஏரி.
8. பாலைவனங்களில் பெரியது சஹாரா பாலைவனம்.
9. பாறைகளைப் பற்றிய படிப்புக்கு பெட்ராலஜி என்று பெயர்.
10. வெள்ளை யானைகளின் நிலம் என்றழைக்கப்படுவது தாய்லாந்து.
11. மலைகளின் நிலம் என்றழைக்கப்படுவது மியன்மார்.
12. மண்புழுவுக்கு ஐந்து இதயங்கள் உள்ளன.
13. மிக வெப்பமான கோள் வெள்ளி.
14. உலகில் 2000 வகையான பாம்புகள் உள்ளன.

## வரலாற்றில் இன்றைய தினம்

1377 - இத்தாலி நகர் செஸன்னாவில் 2000இற்கும் மேற்பட்டோர் கொண்டற்றோரி படையினரால் கொல்லப்பட்டனர்.

1783 - ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திரத்தை ஸ்பெயின் அங்கீகரித்தது.

1917 - முதலாம் உலக மகா போர்: ஜேர்மனியுடனான ராஜரீக உறவை அமெரிக்கா முறித்துக் கொண்டது.

1969 - கெய்ரோவில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக பலஸ்தீன தேசிய காங்கிராஸால் யாசீர் அரபாத் நியமிக்கப்பட்டார்.

1989 - 1954 இலிருந்து பராகுவேயின் சர்வாதிகாரியாகவிருந்த அல்பெரேடோ ஸ்ரோஸ்னர் ஆயுதப் படையின் புரட்சியால் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

1995 - இனப்பிரச்சினை தீர்வைத் துரிதப்படுத்த அமெரிக்க வற்புறுத்து

1998 - இத்தாலியின் ட்ரென்ரோவுக்கு அருகில் அமெரிக்க இராணுவ விமானியால் தாழ்வாகச் செலுத்தப்பட்ட விமானத்தால் கேபிள் காருக்கான கேபிள் துண்டிக்கப்பட்டதால் 20 பேர் வரை உயிர் இழந்தனர்.

## வாழை மரம்

வாழை மரம், வாழை மரம்
வழ வழப்பாய் இருக்கும் மரம்.
சீப்புச் சீப்பாய் வாழைப்பழம்
தின்னத் தின்னக் கொடுக்கும் மரம்
பந்தி வைக்க இலைகளெல்லாம்
தந்திடுமாம் அந்த மரம்.
காயும் பூவும் தண்டுகளும்
கறி சமைக்க உதவும் மரம்.
கல்யாண வாசலிலே
கட்டாயம் நிற்கும் மரம்





## எங்கே சந்திக்கலாம்?

உலகம் தோன்றுவதற்கு முன்பு கல்வி, செல்வம், வீரம் மற்றும் கண்ணியம் நான்கும் சொர்க்கத்தில் இருந்தன. கடவுள் உலகைப் படைத்து ஒவ்வோர் உரியிரினமாக உருவாக்கினார். கடைசியில் மனிதர்களையும் உருவாக்கிவிட்டு சொர்க்கத்துக்கு வந்தார்.

"நீங்கள் பூமிக்குச் செல்லும் நேரம் வந்துவிட்டது. நீங்கள் ஒவ்வொருவரும் பலராக மாறி மனிதர்களிடம் இருக்க வேண்டும்" என்றார்.

நண்பர்கள் பிரியும் நேரம் வந்தது. அப்போது கல்வி, "நீங்கள் கல்விக் கூடங்கள் பக்கமாக வந்தால், என்னைச் சந்திக்கலாம்" என்றது.

உடனே செல்வம் " சிறந்த அறிவும் கடுமையான உழைப்பும் உள்ளவர்களின் இல்லங்களில் நான் இருப்பேன்" என்றது.

வீரமோ, "பரந்து விரிந்த விளையாட்டு மைதானங்களிலும் போர்க் களங்களிலும் என்னைப் பார்க்கலாம்" என்றது.

கண்ணியம் மட்டும் அமைதியாக இருந்தது. "சொல் நண்பா... நீ எங்கே இருப்பாய்?" என்று மற்ற மூன்றும் கேட்டன.

அதற்கு கண்ணியம் சொன்னது, "நான் கல்விக் கூடம், வீடு, போர்க்களம் என எங்கும் இருப்பேன். ஆனால் ஒருவரை விட்டு ஒரு முறை பிரிந்துவிட்டால் மீண்டும் வர மாட்டேன்" என்றது.



பூமிப்பந்து உருண்டையாக இருப்பதாக சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்கத் தத்துவமேதை தொலமி (ptolemy)கூறியிருக்கிறார்.



ஆப்பிரிக்காவின் ஜிபூட்டி (Djibouthi)நாட்டின் உள்ள 'அஸால்' (Assal)என்னும் ஏரி, கடலைவிட 10 மடங்கு உப்பத் தன்மை உடையது.

## ஒலிகள்

- அணில் - கீச்சிடும்
- ஆடு - கத்தும்
- ஆந்தை - அலறும்
- எருது - முக்காரமிடும்
- எலி - கீச்சிடும்
- கரடி - கத்தும்
- காகம் - கரையும்
- கழுதை - கத்தும்
- கிளி - பேசும்
- சேவல் - கூவும்
- பூனை - கத்தும்
- புலி - உறுமும்
- பன்றி - உறுமும்
- மழை - இரையும்
- பல்லி - செல்லும்



உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



சி.தனுஸ்ரன்,
தரம் - 4 பி
யா/நல்லூர் சென்.பெனடிற் வித்தியாலயம்



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 3

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணம் (வவுனியா லீக்)**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று இடம்பெறும் ஆட்டத்தில்ஈஸ்வரன்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து நியூபைட் அணி மோதவுள்ளது.

**இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தொடர்**

இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தத் திட்டமிட்ட மூத்த பிரிவினருக்கான 51 ஆவது கூடைப்பந்தாட்டத் தொடர் இன்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. ஆண்கள் பிரிவினருக்கான ஆட்டங்கள் கண்டி கேற்வே கல்லூரியின் திடலிலும் பெண்கள் பிரிவினருக்கான ஆட்டங்கள் கண்டி சென். அன்ரனிஸ் கன்னியர்மடம், தர்மசேனா கல்லூரி ஆகியவற்றின் திடலிலும் நடைபெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில், யாழ். மாவட்ட அணியை எதிர்த்து புத்தளம் மாவட்ட அணியும் கண்டி மாவட்ட அணியை எதிர்த்து இலங்கை பல்கலை. அணியும் காலி மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணியும் குருநாகல் மாவட்ட அணியை எதிர்த்து கண்டி மாவட்ட அணியும் இலங்கை பல்கலை. அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட அணியும் மோதவுள்ளன.

பெண்கள் பிரிவில், கண்டி மாவட்ட அணியை எதிர்த்து பொலநறுவை மாவட்ட அணியும் இலங்கை பல்கலை. அணியை எதிர்த்து காலி மாவட்ட அணியும் கம்பகா மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணியும் மாத்தறை மாவட்ட அணியை எதிர்த்து இரத்தினபுரி மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து கண்டி மாவட்ட அணியும் மாத்தறை மாவட்ட அணியை எதிர்த்து இலங்கை பல்கலை . அணியும் பொலநறுவை மாவட்ட அணியை எதிர்த்து கம்பகா மாவட்ட அணியும் இரத்தினபுரி மாவட்ட அணியை எதிர்த்து காலி மாவட்ட அணியும் கண்டி மாவட்ட அணியை எதிர்த்து கம்பகா மாவட்ட அணியும் இலங்கை பல்கலை. அணியை எதிர்த்து இரத்தினபுரி மாவட்ட அணியும் பொலநறுவை மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணியும் காலி மாவட்ட அணியை எதிர்த்து மாத்தறை மாவட்ட அணியும் மோதவுள்ளன. (ம-422)

# றோல் போல் தேசிய அணியில் கிளி. வீராங்கனைகள் இருவர்

யாழ்ப்பாணம், ஜன. 3

பங்களாதேஷில் இந்த மாதம் நடைபெறவுள்ள றோல் போல் உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இரு தமிழ் வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவிகளான துலக்சினி விக்னேஸ்வரன், திவ்யா சிறிகாந்தன் ஆகியோரே அவ்வாறு தேசிய அணிக்கு உள்வாங்கப்பட்டவர்களாவர். 17 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற தேசியமட்டப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட றோல் போல் ஆண், பெண் அணிகள் மூன்றாம் இடத்தைத் தமதாக்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-35)





# உதயதாரகை சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜன. 3

புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி உதயதாரகை அணி சம்பியனானது.

புதுகுடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், சிலாவத்தை இளம்பறவை அணியை எதிர்த்து கிளிநொச்சி உதயதாரகை அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யாததை அடுத்து சம நிலைத் தவிர்ப்பு உதையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் உதயதாரகை அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# ஈகிள்ஸ் அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 3

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஈகிள்ஸ் அணி வெற்றிபெற்றது. சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்திலேயே இம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து நியூபைட் அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் ஈகிள்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இலங்கை – தெ.ஆபிரிக்கா மூன்றாவது ஆட்டம் நாளை

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முதலிரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்ற காரணத்தால் இந்த ஆட்டத்தில் வென்றேயாக வேண்டும் என்ற நெருக்கடி நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டது. இலங்கை நெரப்படி மாலை 5 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெறும். (ம)



# ஹாட்லியை வீழ்த்தியது மகாஜனா

யாழ்ப்பாணம், ஜன. 3

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் பிரிவு மூன்றுக்கான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மதுரன் 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தயுஸ்ரன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 285-4 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அதிகபட்சமாக தயுஸ்ரன் 105 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் கஜேந்திரன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 183 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய ஹாட்லி 114 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இன்னிங்ஸாலும் 69 ஓட்டங்களாலும் வென்றது மகாஜனா. (ம-422)



# மீண்டும் இலங்கை தோல்வி





தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 121 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இலங்கை.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. தென்னாபிரிக்காவின் ஆரம்ப வீரர்களாக அம்லா மற்றும் குயின்டன் டி ஹொக் இருவரும் களமிறங்கினர். அணி 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 15 ஓட்டங்களுடன் அம்லாவை வீழ்த்தினார் லக்மல். ஆனால் அணியை சரிவில் இருந்து மீட்டெடுத்து வழிநடத்தினார் பிளாசிஸ். வில்லியர்ஸ் 3 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும் பிளாசிஸின் சதம் தென்னாபிரிக்காவுக்கு தொடர்ந்து போராடும் படியான உறுதியைக் கொடுத்தது. சதம் கடந்து 105 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிளாசிஸ். வீழ்த்தியவர் குலசேகர. மத்திய வரிசையில் மிரட்டினார் மில்லர். அவரின் அரைச்சதம் 54 பந்துகளிலும் சதம் 94 பந்துகளிலும் பதிவானது. முடிவில் தென்னாபிரிக்கா 307-6.

பந்துவீச்சில் லக்மல் 2 இலக்குகளையும், குலசேகர, சில்வா, சண்டகன், பதிரண நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு, முன்னணி வீரர்களான டிக்வெல்ல 25, தரங்க 26, மெண்டிஸ் 20, சந்திமல் 36 என இரட்டை இலக்கங்களில் ஓட்டங்களைப் பெற்ற போதிலும் இலக்கை எட்டும்படியானதாக அவை அமையவில்லை பின்வரிசையும் அணியை மீட்டெடுக்கும் படியாக செயற்படவில்லை. முடிவில் 186 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் 2:0 என்று தென்னாபிரிக்கா முன்னிலை வகிக்கிறது. இதனால் அடுத்த மூன்று ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே இலங்கை அணியால் கிண்ணம் வெல்லமுடியும். (ம)



## ஆஸிக்கு ஆப்பு

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டது.


தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களிலும் வென்றாக வேண்டும் என்ற நெருக்கடிக்கு ஆஸ்திரேலியா தள்ளப்பட்டது.

இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது. அடுத்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வென்றாலும் இரு அணிகளும் 1:1 என்று சமநிலையில் இருப்பதால் தொடர் சமநிலையாகும்.

எனவே தனித்துக் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாத நிலை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டது. (ம)

# ஏமாற்றத்தின் பின்பும் வாழ்க்கை செல்கிறது

## போல்ட் புலம்பல்



ஒலிம்பிக் பதக்கத்தைத் திருப்பி வழங்குவதை தனது வாழ்க்கையின் கடினமான தருணம் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தார் போல்ட், அந்த ஏமாற்றத்தின் பின்பும் வாழ்க்கை செல்கிறது என்று மீண்டும் புலம்பித் தள்ளியுள்ளார்.

சீனாவின் பீஜிங்கில் கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் தொடரில் 4 வீரர் கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் ஜமைக்கா அணி தங்கம் வென்றது.

ஜமைக்கா குழாமில் இடம் பெற்றிருந்த வீரர்களில் ஒருவரான கார்ட்டர், ஊக்கமருந்தைப் பயன்படுத்தி தொடரில் களமிறங்கியமை தெரியவந்தது. இதனால் பதக்கத்தைத் திரும்ப வழங்குமாறு ஒலிம்பிக் சம்மேளனம் உத்தரவிட்டது. தற்போது பதக்கத்தை போல்ட் ஒலிம்பிக் சம்மேளனத்தில் கொடுத்துள்ளார். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தங்கப் பதக்கங்களில் ஒன்றைத் திரும்ப ஒப்படைப்பதென்பது மிகவும் கடினமான சூழ்நிலையே. எனினும் ஒலிம்பிக் சம்மேளனத்தின் முடிவை மதிப்பதால் அதற்கு நான் கட்டுப்படவே வேண்டும்.


தொடக்கத்தில் உண்மையிலேயே நான் மிகவும் ஏமாற்றம் அடைந்தேன்.

ஆனால் வாழ்க்கையில் இது போன்ற விடயங்கள் நடக்கலாம். நான் கவலையடையவில்லை. என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகக் காத்திக்கிறேன். இருந்தாலும் என்னுடைய பதக்கத்தை நான் கொடுத்துள் ளேன் என போல்ட் மேலும் தெரிவித்தார். (ம)

## ரஷ்ய தடகள அணியின் பதக்கம் பறிப்பு

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற ரஷ்ய அணியின் பதக்கம் திரும்பப் பெறப்பட்டது. குறித்த குழாமில் இடம்பெற்றிருந்த அன்டோனியா கிரிவோப்கா என்ற வீராங்கனை ஊக்க மருந்து பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே அணியின் அத்தனை பதக்கங்களும் திரும்பப் பெறப்பட்டன.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பீஜிங் ஒலிம்பிக் தொடரிலும் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் தொடரிலும் கலந்துகொண்ட வீரர் மற்றும் வீராங்கனைகளின் குருதி மாதிரிகள் தற்போது மீண்டும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. இந்த மறுபரிசோதனையிலேயே ரஷ்ய தடகள அணியின் தில்லுமுல்லு அம்பலமாகியமை குறிப்பிடத்தக்கது. (ம)



## நல்லூர் பிரதேச துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 3

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

காலை 8.30மணிக்கு முத்துத்தம்பி மத்தி அணியை எதிர்த்து நீராவியடி நண்பர்கள் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் பாரதி அணியை எதிர்த்து ராஜா அணியும், வின்னர்ஸ் அணியை எதிர்த்து மறுமலர்ச்சி அணியும் ஒலிம்பிக் அணியை எதிர்த்து நொதேர்ன் அணியும் மோதவுள்ளன.

நண்பகல் 12.30 மணிக்கு வை.எம்.எச்.ஏ. அணியை எதிர்த்து காமாட்சி அணியும் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து சித்திவிநாயகர் அணியும் நொதேர்ன் வாரியஸ் அணியை எதிர்த்து செந்தமிழ் அணியும் பொற்பதி இந்து அணியை எதிர்த்து மகாத்மா அணியும் மோர்தவுள்ளன. (ம-422)



## இந்தியத் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்துக்கான பங்களாதேஷ் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

காயம் காரணமாக விலகியிருந்த அணித் தலைவர் ரகிம் மீண்டும் அணிக்குத் திரும்பினார்.


பங்களாதேஷ் அணி ஓர் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுவதற்காக இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. இந்த ஆட்டம் ஹைதராபாத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்துக்கான பங்களாதேஷ் அணியே அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் அணி விவரம் - ரகிம் (தலைவர்), இக்பால், சர்கர், முகமதுல்லா, சகிப் அல் ஹசன், மிராஸ், இம்ருல் கயிஸ், ஹக்கியு, சபீர் ரகுமான், லித்தொன் தாஸ், தஸ்கின் அகமட், ராஜ், தயுல் இஸ்லாம், கமருல் இஸ்லாம், சபியுல் இஸ்லாம். (ம)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கந்தையா

**(கந்தசாமி - காரைநகர், ஓய்வு பெற்ற காணி குடியேற்ற உத்தியோகத்தர், கிளிநொச்சி)**



பிறப்பு 1934.06.22 இறப்பு 2017.02.02

சத்திரந்தை களபூமி, காரை நகரைப் பிறப்பிடமாகவும், புதுறோட், சந்தி காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தையா நேற்று (02.02.2017) வியாழக் கிழமை சிவபதம்அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிவசக்தி, சிவானந்தி சிவரூபன் (பிள்ளையார் வண்ணர் சோலை, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தவமணிதேவி சரஸ்வதி, சபா ரத்தினம் மற்றும் தங்கரத்தினம், நல்லையா, தர்மலிங்கம், பாலசுப்பிர மணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிவரூபன் (விவசாய போதனாசிரியர் பாண்டியன்குளம்) இன் பாசமிகு மாமனாரும் நவநிதி, றஜிவரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற தங்கமுத்து, அன்னமுத்து, சரஸ்வதி மற்றும் ஜெகசோதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2017) வெள்ளிக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**க. சிவரூபன் (மகன்)**

**புதுறோட் சந்தி,**
**காரைநகர்.**

---

**பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

**G.A.Q**

பரீட்சையை எதிர் கொள்ளும் மாணவர் களுக்கு துரித மீட்டல் வகுப்புக்கள்.

**ஆரம்பம்: 04.02.2017**
**சனி- 8.00 மணி**

அனைத்து பாடங்களுக்கும் விரிவுரைகள் நடைபெறும்.

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி யாழ்நகர்
077 469 6695

---

**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**

M.Ed தெரிவு பரீட்சைக்கு

வெள்ளி(இன்று)
4.30-6.30
சனி 10.00-4.00 மணி வரை

சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு:
076 688 3394
021 222 3382

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

---

## NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். | பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

**A/L 2019**

**கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்**

ஆரம்பம்:04.02.2017 (Sat-8.00 am)

**A/L Day Class**

கலை, வர்த்தகம், தொழில்நுட்ப பிரிவுகளுக் கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

T.P: 0774696695

---

### ரி-20 யிலும் பரிசீலனை

**ரூட் வலியுறுத்தல்**

ரி-20 ஆட்டங்களிலும் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை விரைவில் கொண்டுவர வேண்டும் என்று இங்கிலாந்து அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான ரூட் தெரிவித்தார்.

---

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ். றோட், இணுவில்.

**A/L 2019**

**தொழில்நுட்பம் - கலை - வர்த்தகம்**

இதுவரை அனுமதி பெறாத மாணவர்களுக்கு

புதிய பிரிவு நாளை ஆரம்பம்

**04.02.2017 - சனிக்கிழமை**

யாழ். இணுவில் இரு இடங்களிலும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

Note :- எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியிலும்

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். நகரில் வர்த்தகப்பிரிவில் முன்னணி பெறுபேறுகளைப் பெறுவதற்கு காரணமாய் அமைந்த **NEC** கல்வி நிறுவனத்தையும் கற்பித்த ஆசிரியர்களான

பொருளியல் ஆசிரியர் - **திரு. N.B.கஜீதரன்**
வணிகக் கல்வி ஆசிரியர் - **திரு. S.K.பாலசபேஷ்**
கணக்கீடு ஆசிரியர் - **திரு. பாலகஜன்**

ஆகியோரை வாழ்த்துவதுடன் இவர்களது சேவை மேன்மேலும் தொடர்ந்து சாதனைகளை நிலைநாட்டுவதற்கு இறைவனின் நல்லாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்கள்

**வாழ்த்துவோர்**
A/L 2016 **வர்த்தகப்பிரிவு மாணவர்கள்**

---

**இயக்கச்சியில்... உறுதியுடன்** காணி விற்பனைக்கு


# கற்பகவனம்

1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள் **A9 இல் இருந்து 1km தூரத்தில்**

5 லட்சம் செலுத்தி காணியினை சொந்தமாக்குங்கள்
மிகுதியை 5 வருட மாதாந்த தவணையில் செலுத்தலாம்

வங்கிக் கடன் வசதி

**1 ஏக்கர் – 16 பரப்பு**
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜூ மரம்
- 10 - 15 மாமரம்
- 01 குழாய்க்கிணறு
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்



**2 ஏக்கர் – 32 பரப்பு**
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜூ மரம்
- 20 - 30 மாமரம்
- 01 குழாய்க்கிணறு
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

- 15 அடி அகல பாதை
- **5 வருட பராமரிப்பு**
- 24 மணிநேர பாதுகாப்பு
- துறைசார் வல்லுனர்களின் ஆலோசனை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- மாதாந்த பராமரிப்பு அறிக்கை
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்

**பொது விடுதி** · **உணவகம்** · **உடற்பயிற்சிக்கூடம்** · **நீச்சல் தடாகம்** · **விளையாட்டுத்திடல்** · **நடைபயிற்சிக்கான பாதை** · **மீன்பிடி குளம்** · **முந்திரிகை தோட்டம்** · **மூலிகைத் தோட்டம்**

மேலதிக பெறுமதிசேர் சேவைகள் (கட்டணங்களிற்கு உட்பட்டது)
- இயற்கை விவசாயம்
- மின்சார வசதி
- தண்ணீர்த்தாங்கி
- ஓய்வுக் கொட்டில்
- நீண்டகால நீர்விநியோக அமைப்பு
- மரக்கறித்தோட்டம்
- உள்ளக பூந்தோட்டம்
- பாதுகாப்பு கமரா (இணைய இணைப்புடன்)
- 5 வருடங்களிற்கு பின்னரான பராமரிப்பு



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.